விலை ரூபா 20.00




www.onlineuthayan.com

பக்கங்கள்: 24

# உதயன்

சுடர் 27
கதிர் 65

வள்ளுவர் ஆண்டு 2043 | தை 16 திங்கட்கிழமை (30/01/2012) | UTHAYAN - A Lively National Tamil Daily

## புலிச் சந்தேக நபர்கள் எண்மருக்கு புனர்வாழ்வு

பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 8 தமிழீழ விடுதலைப் புலி சந்தேக நபர்களை புனர்வாழ்வுக்கு உட்படுத்துமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தீவிரவாதத் தடுப்புப் பிரிவினரால் சந்தேகநபர்கள் நேற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது நீதிவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். வன்னி இறுதிக் கட்டப் போரின்போது இந்த சந்தேகநபர்கள் வவுனியா பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸார் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்தனர். சந்தேகநபர்கள் புலிகள் இயக்கத்தில் ஆயுதப் பயிற்சி பெற்றபோதும் தீவிரவாத செயற்பாடுகளில் ஈடுபடவில்லை எனவும் பொலிஸார் அதில் குறிப்பிட்டிருந்தனர்.

## முதலை இழுத்துச் சென்ற பேலியகொடை வாசி

ராகம நகருக்கு அருகில் சதுப்பு நிலம் ஒன்றில் புல் வெட்டிக்கொண்டிருந்த நபரொருவர் முதலைகளால் இழுத்துச் செல்லப்பட்டு காணாமற் போயுள்ளார். அப்பகுதியில் தேடுதல் நடத்திய பொலிஸார் அந்நபரின் காலின் பாகமொன்றை கண்டறிந்தனர். பேலியகொடையை வசிப்பிடமாக்க கொண்ட மஞ்சுள குமார என்பவரே காணாமற்போனவராவார். இச்சம்பவம் தொடர்பாக ராகம பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

## இப்படியும் ஒரு தாய்

தனது இரு மகள்களை விபசார நடவடிக்கையில் ஈடுபடுத்திய குற்றச்சாட்டின் கீழ் தாய் உட்பட மூவரை நாவலப்பிட்டி பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர். இரு பெண் பிள்ளைகளை விபசார நடவடிக்கையில் ஈடுபடுத்திய குற்றச்சாட்டின் பேரில் குறித்த தாயும் இப்பெண் பிள்ளைகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் பேரில் இரு சந்தேக நபர்களையுமே நாவலப்பிட்டி பொலிஸார் கைது செய்துள்ளனர். குறித்த இரு பிள்ளைகளும் 15 மற்றும் 17 வயது உடையவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

## பல்கலை. அனுமதிக்கு விண்ணப்பம்

2011ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த தகுதிவாய்ந்த மாணவர்களிடமிருந்து 2012ஆம் ஆண்டு கற்கைநெறிகளுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நேற்று விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

## நீதி கோரி ஜெனிவாவுக்கு புலத்தமிழர் நடை பயணம்

### லண்டனிலிருந்து ஆரம்பம்; 2ஆவது நாளாகவும் தொடர்ந்தது

ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகம் நோக்கி நேற்றுமுன்தினம் லண்டனிலிருந்து ஈழத் தமிழர்கள் ஆரம்பித்த நீதிக்கும் சமாதானத்துக்குமான நடைபயணம் நேற்று இரண்டாவது நாளாகத் தொடர்ந்தது.

பிரிட்டன் நாடாளுமன்றத்திற்கு முன்பாக இருந்து நேற்று முன்தினம் முற்பகல் 11.18 மணியளவில் ஆரம்பமான இந்த நடைபயணத்தின்போது பிற்பகல் 2 மணியளவில் ரூட்டிங் பகுதி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் அமைந்துள்ள மாவீரர்கள் நினைவாலயத்திற்குச் சென்று மலர் வணக்கம் செலுத்தி மீண்டும் தமது நடைபயணத்தைத் தொடர்ந்து



சென்ற வழியில் மிச்சல் என்ற பகுதியில் வைத்து வல்வை சமூகத்தினர் அவர்களை வரவேற்று மாலை அணிவித்து உபசரித்து வழியனுப்பி வைத்தனர்.

இந்த மனிதநேய நீதிக்கும் சமாதானத்துக்குமான நடைபயணத்தை ஜெயசங்கர், சிவச்சந்திரன், குமார், மற்றும் வேற்றினத்தவரான போல், ஷெஷ்ன் உட்பட்ட ஐவர் மேற்கொண்டுள்ளனர். இவர்களோடு இணைந்து இந்த நடைபயணத்திற்கு ஆதரவு தெரிவித்தும், இவர்களுக்கு உற்சாகம் அளிக்கும் முகமாகவும் அமர்நாத், சேகர், சங்கீதன், விஜய்,

23

# யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் சிரித்துக் கொண்டே அழுகிறார்கள்

## அவர்களின் முகங்களில் துன்பரேகை இழையோடுவதைக் கண்டேன் என்கிறார் கலாம்



சென்னை, ஜனவரி 30

*யாழ்ப்பாணத்தில் நான் கண்ட காட்சி மனதை உருக்கும் விதத்தில் இருந்தது. எல்லோர் முகத்திலும் புன்னகை இருந்தாலும், அவர்களது புன்னகைக்குப் பின் சொல்ல முடியாத ஏதோ ஒரு துன்பரேகை இழையோடுவதை கண்டுணர்ந்தேன். இலங்கையில் நடக்கக் கூடாத சம்பவம் நடந்து முடிந்துவிட்டது.*

- இவ்வாறு இந்திய முன்னாள் ஜனாதிபதியும் அணு விஞ்ஞானியுமான அப்துல் கலாம் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழ் மக்கள் ஒரு ஜனநாயக நாட்டில், மதிப்புடனும், சுயமரியாதையுடனும்வாழதன்னாலானஅனைத்து முயற்சிகளையும் எடுக்க தன்னுடைய இலங்கைப் பயணமானது ஒரு முன்னோடியாக இருக்கும் என்று நம்புகிறார் எனவும் 13 பிளஸ் அரசமைப்புச் சட்டத்திருத்தத்தை விரைவில் நடைமுறைப் படுத்த இலங்கை ஜனாதிபதியை வலி

23

## மட்டக்களப்பில் விகாரை; நாடாளுமன்றில் விவாதம்

மட்டக்களப்பு, ஜன.30

மட்டக்களப்பு பட்டிப்பளையில் பௌத்த விகாரை அமைக்கப்படுவதைத் தடுத்துநிறுத்தும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதற்கான உதவியை இன்று ஜனாதிபதியிடமும்

23

## பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்கவே மாட்டார் ஜனாதிபதி

கொழும்பு, ஜன.30

அதிகாரப்பரவலாக்கல் பட்டியலிலிருந்து பொலிஸ், காணி அதிகாரங்களை நீக்கக் கோரி நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் எமது உறுதியான யோசனையை முன்வைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம் - என்று ஜாதிக ஹெல உறுமய நேற்றுத் தெரிவித்துள்ளது.

அத்துடன், பொலிஸ், காணி அதிகாரங்களைப் பகிர்வதற்கு ஜனாதிபதி ஒருபோதும் இணங்க மாட்டார் என நாம் உறுதியாக நம்புகின்றோம் என்றும் அக்

23

## மஹிந்தவின் வருகையால் சாவகச்சேரிக்கு அதிர்ஷ்டம்

### வைத்தியசாலைக்கு பூந்தோட்டம்

தென்மராட்சி, ஜன.30

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் முன்புறமாக ஏ-9 வீதியை அண்டியுள்ள பகுதியில் பூந்தோட்டம் அமைக்க சாவகச்சேரி நகரில் உள்ள 11ஆவது விஜயபாகு இலகு காலாட்படையினர் முன்வந்துள்ளனர்.

எதிர்வரும் 6ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சாவகச்சேரி வைத்திய சாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நோயாளர் விடுதிகளைத் திறந்து வைக்க வருகிறார். அதனை முன்னிட்டு வைத்திய சாலையில் பல்வேறு புனரமைப்பு பணிகள் இடம்பெற்றுவரும் வேளையில் சாவகச்சேரி நகரில் உள்ள 11ஆவது படையணியின் கட்டளைத் தளபதி கேணல் கே.ஹேமரத்ன படையணியின் செலவில் பூந்தோட்டம் அமைத்துப் பராமரிக்க முன்வந்துள்ளார்.

பூந்தோட்டம் அமைப்பதற்காக பெருமளவு மணல் பறிக்கப்பட்டு புற்கற்றைகள் அடுக்கப்பட்டுப் பூக்கன்றுகளும் நட்டுள்ளனர்.

23

## சவேந்திர சில்வாவுக்கு உயர் பதவி; இலங்கையைக் காக்க ஐ.நா.முயற்சி



கொழும்பு, ஜன.30

அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளின் அடிவருடிகளாகச் செயற் படும் ஐ.நா. போர்க் குற்றச்சாட்டுகளிலிருந்து இலங்கையை பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. போர்க் குற்றவாளி எனக் கூறப்படும் சவேந்திர சில்வாவுக்கு உயர் பதவிகளை வழங்கி, அழகு படுத்திப் பார்ப்பதன் நோக்கமும் இதுவே - என்று நவசம சமாஜக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

போர்க்காலத்தில் இலங்கைக்கு பக்கபலமாகவிருந்த இந்தியா, சீனா, அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் தற்போது இலங்கைக்கு எதிராகச்

23

## 200 தமிழர்கள் டோகோவில் கைது

கொழும்பு, ஜன.30

மேற்கு ஆபிரிக்க நாடான டோகோவில் சட்டவிரோதமான முறையில் தங்கியிருந்த குற்றச்சாட்டின் பேரில் பெண்கள், குழந்தைகள் உட்பட 200 இற்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் கைதுசெய்யப்பட்டு தடுப்பு முகாமொன்றில் வைக்கப்பட்டுள்ளனர் என பி.பி.சி. தெரிவித்துள்ளது.

கனடாவுக்கு அனுப்புவதற்காகச் சட்டவிரோத முகவர்களினால் அழைத்துச் செல்

23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் போராளிகள் அனைவருக்கும் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா கடனுதவி

## யாழ்ப்பாணத்தில் அமைச்சர் சந்திரசிறி கஜதீர உறுதியளிப்பு

யாழ்ப்பாணம், ஜன.30

முன்னாள் போராளிகள் அனைவருக்கும் சுய தொழில் முயற்சிக்காக தலா 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா கடனுதவியும் சமுர்த்தி நிவாரணமும் வழங்கப்படவுள்ளன என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

முன்னாள் போராளிகளை சமூகத்தில் அந்தஸ்துடனும், சுயமரியாதையுடனும் வாழ வழியமைக்கும் வகையிலே இந்த விசேட திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற முன்னாள் போராளிகளுடனான சந்திப்பின் போதே அமைச்சர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது சரணடைந்து புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளிகள் தங்கள் குடும்பங்கள் மற்றும் உறவுகளுடன் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

யாழ். மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் முன்னாள் போராளிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அதற்கு அமைச்சர் மேற்கொள்ள வேண்டிய அவசர நடவடிக்கைகள் தொடர்பாக விளக்கமளித்தார்.



அந்த வகையில் இடம்பெயர்ந்தோருக்கு ஆரம்பத்தில் வழங்கப்பட்ட 25 ஆயிரம் ரூபா தமக்கு வழங்கப்படவில்லை எனவும் இரண்டரை இலட்சம் ரூபா கடனுதவிக்காக விண்ணப்பித்து எட்டு மாதங்களாகியும் கடனுதவி வழங்கப்படவில்லை எனவும் நிரந்தர வருமானமும் தேவையான வாழ்வாதாரமும் இன்றி இருக்கும் எங்களுக்கு சமுர்த்தி உதவியும் கிடைக்கவில்லை எனவும் பெரும்பாலானவர்கள் கூறினர்.

அதேவேளை, ஒரு சிலர் அந்த உதவி கிடைத்துளது என்றும் விவசாயம், தையல் மற்றும் சிறு வியாபாரம் என சிறுதொழில்கள் செய்து வருகின்றனர் என்றும் கூறியுள்ளனர்.

இதைக் கேட்டறிந்த அமைச்சர், முன்னாள் போராளிகளின் மேம்பாட்டிற்கு 200 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் நான்கு வீத இலகு வட்டியில் தலா இரண்டரை இலட்சம் ரூபா வழங்கப்படும் எனவும் கூறினார்.

மேலும், கடன்தொகைக்கு விண்ணப்பித்து இதுவரை கடனுதவிகள் கிடைக்கப் பெறாதவர்களுடைய பெயர் விவரங்களைத் தயாரித்து உடனடியாக கடனுதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர் உத்தரவிட்டார்.

அதேவேளை வெளிநாடு ஒன்றின் மூலம் வழங்கப்பட்டு வந்த 25 ஆயிரம் ரூபா கடனுதவி இப்போது நடைமுறையில் இல்லை என்றும் அமைச்சர் கூறினார்.

முன்னாள் போராளிகளுக்கு சமுர்த்தி வழங்கும் அதிகாரம் சமுர்த்தி அதிகாரிகளுக்கு இல்லை. வாழ்வாதாரம் பெற விரும்பும் முன்னாள் போராளிகள் தமது விண்ணப்பப் படிவங்களை கிராமசேவையாளரூடாக அனுப்பிவைக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், சாரதி அனுமதிப்பத்திரம் பெற்று சாரதிகளாக விரும்பும் இளைஞர்களுக்கு சாரதிப் பயிற்சியுடன் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் கூறினார்.

நீங்கள் முகாம்களில் இருந்து விடுதலையாகி சமூகத்துடன் இணைந்து கொண்டாலும் தமது அமைச்சு உதவி செய்து கொண்டுதான் இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-சி-14)

## அமெ.விசேட தூதர் பெப். 5 வருகிறார்

கொழும்பு, ஜன.30

போர்க்குற்ற விவகாரங்களைக் கையாளும் அமெரிக்கத் தூதுவர் ஸ்டீபன் ஜே.ராப், இலங்கை ஜனாதிபதி உள்ளிட்டோருடன் உயர்மட்டக் கலந்துரையாடல்களை நடத்துவதற்காக அடுத்தவாரம் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

தூதுவர் ராப் வரும் பெப்ரவரி 5 ஆம் திகதி இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் உறுதி செய்துள்ளார்.

அவரது பயண நிகழ்ச்சி நிரல் தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

எனினும் இந்த உயர்மட்டப் பயணம் குறித்து இலங்கை அரசின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தமக்குத் தெரியாது எனக் கூறியுள்ளார்.

எனினும், ஜனாதிபதியையும் ஏனைய உயர்மட்ட அரச அதிகாரிகளையும் ராப் சந்தித்துப் பேசவுள்ளார் என இராஜதந்திர வட்டாரங்கள் உறுதி செய்துள்ளன.

(ஒ-சி)

## மிருகமாக மாறினார் தாத்தா கொடுமைக்கு இலக்கானார் பேர்த்தி

யாழ்ப்பாணம், ஜன.30

மீசாலையைச் சேர்ந்த பதின்ம வயது மாணவி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவத்துக்குக் காரணமானவர் எனச் சந்தேகிக்கப்படும் மாணவியின் பேரனாரை (வயது 65) தாம் கைது செய்துள்ளதாக சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச்சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

மீசாலையில் வசிக்கும் பிரஸ்தாப மாணவி தமது தாயின் தந்தையான பேரனாருடன் வசித்து வருகிறார். சம்பவ தினமன்று மதுபோதையில் வீட்டுக்குச் சென்ற சந்தேக நபர் மாணவியைத் துஷ்பிரயோகம் புரிந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரஸ்தாப மாணவி மறுநாள் தனது ஆசிரியை ஒருவரிடம் தனக்கு நேர்ந்த கதியைக் கூறியதை அடுத்து அந்த மாணவி சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பாக மாணவியின் சித்தி ஒருவர் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார். இதனை அறிந்ததும் சந்தேக நபர் நஞ்சருந்தியுள்ளார். அவர் உடனடியாக சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பொலிஸார் அவரைச் சந்தேகத்தில் கைது செய்துள்ளனர். அவர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை,

முல்லைத்தீவில் தாயை இழந்த இந்த மாணவியின் தந்தை வேறு திருமணம் செய்ததால் இவர் 65 வயதுடைய பேரனுடன் தங்கிப் படித்து வருகிறார் என்றும் இந்த நிலையிலேயே பேரன் கையடக்கத் தொலைபேசியில் பதிவு செய்யப்பட்டிருந்த ஆபாசப் படங்களைக் காட்டி வன்புணர்வு புரிந்தார் என்றும் கூறப்படுகின்றது.

(ஒ-4-207)

## நாடுகடந்து வாழும் இலங்கை ஊடகர்களின் கதை ஒஸ்லோவில் பெப்.9 இல் திரைக்கு வருகின்றது

வெளிநாடுகளில் வாழும் இலங்கை ஊடகவியலாளர்களின் நிலைப்பாடு தொடர்பாக நோர்வே நாட்டைச் சேர்ந்த விருது பெற்ற திரைப்படத் தயாரிப்பாளர் ஒருவரால் தயாரிக்கப்பட்ட திரைப்படம் ஒன்று ஒஸ்லோவில் அடுத்த மாதம் 9 ஆம் திகதி முதன் முதலில் திரையிடப்படவுள்ளது.

இத்திரைப்படமானது இலங்கைத் தீவில் நிலவும் ஊடக அடக்குமுறை மற்றும் பேச்சுச் சுதந்திரத்தின் போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக வெளிநாடுகளில் வாழும் இலங்கை ஊடகவியலாளர்களின் அனுபவங்களைப் பதிவுசெய்துள்ளது.

இதுகுறித்து இணையம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

வெளிநாடுகளில் வாழும் இலங்கை ஊடகவியலாளர்களின் நிலைப்பாடு தொடர்பாக நோர்வே நாட்டைச் சேர்ந்த விருது பெற்ற திரைப்படத் தயாரிப்பாளர் ஒருவரால் தயாரிக்கப்பட்ட திரைப்படம் ஒன்று ஒஸ்லோவில் பெப்ரவரி 9 ஆம் திகதி முதன் முதலில் திரையிடப்படவுள்ளது.

2007 இல் 'எனது மகள் தீவிரவாதி' என்ற திரைப்படத்தை தயாரித்து இயக்கியமைக்காக விருது பெற்ற நோர்வே திரைப்படத் தயாரிப்பாளரான Beate Arnestad என்பவரே தற்போது 'மௌனமாக்கப்பட்ட குரல்கள் - நாடு கடந்து வாழும் இலங்கை ஊடகவியலாளர்களின் கதைகள்' என்ற புதிய திரைப்படத்தை தயாரித்துள்ளார்.

சாட்சியங்கள் எதுவுமின்றி, இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மனிதப்படுகொலை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட அனைத்துலக வெளியீட்டிற்கு தமது பங்களிப்புக்களை வழங்கிய ஊடகவியலாளர்கள் பற்றிய கதையே இத்திரைப்படமாகும்.

'ஹிரு' வார வெளியீட்டின் முன்னாள் பிரதம ஆசிரியரான பஷானா அபேயவர்த்தன, இலங்கைக்கான பி.பி.ஸியின் வெளிநாட்டு நிருபரான பிரான்சிஸ் ஹரிசன் மற்றும் நோர்வே நாட்டு ஊடகவியலாளரான Sverre Tom Radþy ஆகியோரை மையப்படுத்தியே இத்திரைப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும் இத்திரைப்படத்தில் பஷானா அபேயவர்த்தன மற்றும் அவரது மனைவியான சர்மிலா லோகேஸ்வரன், சோனாலி விக்கிரமதுங்க ஆகியோருடன் 2005 தொடக்கம் ஏப்ரல் 2009 வரை வன்னியிலிருந்து நேரடியாகச் செய்திகளை வழங்கிய தமிழ்நெற்றின் போர்க்கால ஊடகவியலாளரான ஏ.லோகீசன் ஆகியோரின் கதைகளும் இத்திரைப்படத்தில் மையப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கையின் போர்க்குற்றங்கள், ஊழல் மோசடிகள் மற்றும் பொதுமக்களைப் படுகொலை செய்தமை போன்ற தகவல்களை வெளிக்கொண்டு வருவதிலும் தம்மை அர்ப்பணித்துக் கொண்டதால், தமது சொந்த நாட்டில் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டு, கிட்டத்தட்ட கொலை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது வெளிநாடுகளில் வாழும் இலங்கை ஊடகவியலாளர்கள் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கின்ற ஒரு திரைப்படமாகவே இது தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்போர்க்குற்றங்கள் அனைத்தையும் இலங்கை அரசே மேற்கொண்டது என இந்த ஊடகவியலாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர். கருத்துச் சுதந்திரத்தை மதிக்காத ஆசிய நாடுகளின் வரிசையில் இலங்கையும் முதன்மை இடத்தை வகிக்கின்றது. கடந்த ஆண்டுகளில், பலர் காணாமற் போயுள்ளனர் அல்லது சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர், கொல்லப்பட்டுள்ளனர். கிட்டத்தட்ட 50 வரையிலான ஊடகவியலாளர்கள் அண்மையில் இலங்கையை விட்டு வேறு நாடுகளுக்குத் தப்பிச் சென்றுள்ளனர்'' என Fritt Ord அமைப்பு தனது ஊடகக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

இத்திரைப்படத்தைத் தயாரித்த நோர்வே நாட்டு திரைப்படத் தயாரிப்பாளரான Beate Arnestad, நோர்வே ஒளிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் திணைக்களங்களுக்கான ஆவணப்படங்களைத் தயாரித்து இயக்குவதில் 20 ஆண்டு கால அனுபவத்தைக் கொண்டுள்ளவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 'சிறைப் பறவைகள்' 1,600 பேர் சுதந்திர தினத்தன்று விடுவிப்பு

யாழ்ப்பாணம் ஜன.30

எதிர்வரும் சுதந்திர தினத்தன்று 1,600 கைதிகள் விடுவிக்கப்படவுள்ளனர். சிறுசிறு குற்றங்கள் புரிந்து அபராதம் செலுத்தத் தவறியோர் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 1600 பேர் விடுவிக்கப்படவுள்ளனர்.

531 மில்லியன் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்படவுள்ள யாழ்ப்பாணச் சிறைச்சாலைக்கான அடிக்கல் நடும் நிகழ்வின் போதே சிறச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர இதனைத் தெரிவித்தார்.



யாழ்.பண்ணைப்பகுதியில் புதியசிறைச்சாலைக்கான அடிக்கல் நடப்பட்டது.

அந்த நிகழ்வில் அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு.

சிறுகுற்றம் புரிந்து அபராதம் செலுத்தத்தவறியதன் காரணமாக சிறைகளில் அடைக்கப்பட்டிருப்போரை விடுவித்து அவர்களைச் சமூகத்தில் இணைப்பதற்காக அவர்களுக்கான அபராதத் தொகையை அரசு செலுத்தத் தீர்மானித்துள்ளது.

சிறைச்சாலைகளிலே ஓவியக் கூடம் அமைக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் கைதிகள் தமது திறமையை வளர்த்துக் கொள்ள முடியும்.

சிறைச்சாலையில் உள்ளவர்களுக்குக் கல்வியறிவு வழக்குவதற்காகப் போகம என்ற இடத்தில் விசேட பாடசாலை நிறுவப்பட்டுள் ளது- என்றார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, புனர்வாழ்வு அமைச்சின் அதிகாரிகள், யாழ்.சிறைச்சாலை அதிகாரிகள், புனர்வாழ்வு பயிற்சி பெறும் பயிலுநர்கள் சுமார் 150 பேர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஒ-14-23)

## தீர்வுப் பேச்சுக் குறித்து ரெலோ கூட்டத்தில் ஆராய்வு

அரசியல் தீர்வுப்பேச்சு உட்பட சமகால அரசியல் விவகாரங்கள் தொடர்பில் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைமைக்குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

ரெலோ அமைப்பின் 11 ஆவது தலைமைக்குழுக் கூட்டம் நேற்று வவுனியாவில் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் இடம்பெற்றது.

ரெலோவின் அரசியல் பிரிவுத் தலைவர் எம்.கே.சிவாஜிலிங்கம் உட்பட தலைமைக்குழு உறுப்பினர்கள் 11 பேர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

அரசு-கூட்டமைப்புக்கிடையில் இடம்பெற்றுவரும் தீர்வுப் பேச்சின் எதிர்காலப் போக்கு, கட்சியின் அரசியல் நடவடிக்கைகள் உட்பட பல்வேறு விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ள அதேவேளை, தீர்வு விடயம் தொடர்பில் தமிழரசுக் கட்சி, ஈ.பி.எல்.ஆர்.எவ். ஆகியவற்றுடன் விரைவில் பேச்சு நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# ஈரான் மீதான அமெரிக்கத் தடையும் இலங்கை எதிர்நோக்கும் நெருக்கடியும்

மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தின்போது ஏற்படக்கூடிய நெருக்கடிகளில் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள உறுப்பு நாடுகளின் ஆதரவைத் திரட்டுவதில் இலங்கை தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. முக்கியமாக இலங்கை மீது போர்க்குற்றச்சாட்டுகளை சுமத்தி வரும் அமெரிக்கா உட்பட மேற்கத்தைய நாடுகளை வளைத்துப் போடும் அவசியம் இலங்கைக்கு உள்ளது. இப்படியான நிலையில், அமெரிக்காவுடன் இலங்கையை இராஜதந்திர போரில் மாட்டிவிட்டுள்ளது ஈரான் மீதான அமெரிக்காவின் எண்ணெய்த் தடை.

டிசம்பர் 31ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஈரானின் எண்ணெய் ஏற்றுமதிக்குத் தடைவிதிக்கும் பத்திரம் ஒன்றில் கைச்சாத்திட்டார். தனது மசகு எண்ணெய்த் தேவையில் 8 சதவீதத்தை ஈரானிடமிருந்து பெற்று வந்த இலங்கைக்கு இது தர்மசங்கடமான நிலைமையை ஏற்படுத்தியது.

ஏனைய நாடுகளின் எண்ணெய்யுடன் ஒப்பிடுகையில், ஈரானின் எண்ணெய் தரம் வாய்ந்தது. அத்துடன், நான்கு மாத இலகு கடன் அடிப்படையிலேயே இலங்கைக்கு ஈரான் எண்ணெய் வழங்கிவருகிறது. அமெரிக்காவின் தடையை மீறி இலங்கைக்கு எண்ணெய் வழங்கத் தயாராக இருப்பதாக ஈரான் தெரிவித்துள்ளது.

தற்போதைய சூழலில் அமெரிக்காவை மேலும் பகைத்துக்கொள்ள விரும்பாத இலங்கை, அமெரிக்க எண்ணெய்த் தடையிலிருந்து விதிவிலக்குப் பெறும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஏற்கனவே, அமெரிக்காவுடனும், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடனும் முரண்பட்டு நிற்கும் இலங்கைக்கு ஈரானின் எண்ணெய்ப் பிரச்சினை பெரும் சவாலாக மாறியுள்ளது.

அமெரிக்கத் தடையையும் மீறி ஈரானிடம் இருந்து எண்ணெய்ப் பெற்றால், இலங்கைக்கு எதிராக அமெரிக்கா பகிரங்கமாக செயற்பட ஆரம்பிக்கலாம். போர்க்குற்ற விசாரணை தொடர்பாக இலங்கைக்கு எதிரான பிரசாரத்தை சர்வதேச ரீதியில் அமெரிக்கா முடுக்கிவிடலாம்.அதனாலேயே எண்ணெய்த் தடையில் இருந்து விதிவிலக்குப்பெறும் முயற்சியில் இலங்கை ஈடுபட்டுள்ளது.

போரில் புலிகள் தோற்கடிக்கப்படுவதற்கு இந்தியா மட்டும் அல்ல அமெரிக்காவும்தான் காரணம் என்பது இப்போது பரமரகசியம். விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத இயக்கமாக அறிவித்ததன் மூலம், புலிகளின் நிதி வளம் குன்றுவதற்கு அமெரிக்காவும் காரணமாக இருந்தது. ஆனால் இறுதிப் போரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல் சம்பவங்களும், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண்பதற்கு இலங்கை அரசு கடைப்பிடிக்கும் அசமந்தப் போக்கும் அமெரிக்க - இலங்கை உறவில் பெருமளவு பாதிப்பை ஏற்படுத்தின. உலக பொருளாதாரத்தில் தனக்குச் சவாலாகப் பெரு வளர்ச்சி கண்டுவரும் சீனாவுடன், இலங்கை மிகவும் நெருக்கமான உறவைப் பேணிவருவதும், அமெரிக்காவுடனான உறவு பாதிக்கப்பட மற்றொரு காரணம். தற்பொழுது ஈரானிய எண்ணெய் விவகாரமும் சேர்ந்து கொண்டதால் எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றும் நிலைமையை உருவாக்கி விட்டுள்ளது. அமெரிக்காவின் உத்தரவையும் மீறி ஈரானிடமிருந்து இலங்கை எண்ணெயைப் பெறுமானால் தற்போதைய நிலையில் இலங்கைக்கே பாதிப்புகள் அதிகம்.

எண்ணெய்ப் பிரச்சினையில் அமெரிக்காவுடன் மோத ஈரான் தயாராக இருக்கிறது. ஆப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும் பெற்ற படிப்பினைகள், பெற்றுக் கொண்டிருக்கும் படிப்பினைகளால் தன் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தப்போவதில்லை என்பது ஈரானுக்குத் தெரியும். ஆகவே ஈரான் அமெரிக்கத் தடையை மீறித் துணிச்சலுடன் செயற்படலாம். ஆனால், இலங்கையினால் அப்படி நடந்துகொள்ள முடியாது.

தற்பொழுது இலங்கை அரசாங்கத்தின் பெரிய எதிரி போர்க் குற்றச்சாட்டுத்தான். அந்த இறுக்கத்திலிருந்து விடுபடுவதற்காக இலங்கை போராடிவரும் வேளையில், அமெரிக்காவைப் பகைத்துக்கொள்வது நெருக்கடியை மேலும் அதிகரிக்கவே வழிவகுக்கும்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் இலங்கை அரசின் அக்கறை இன்மையும், அசமந்தப் போக்கும் அமெரிக்கா உட்படப் பல உலக நாடுகளை அதிருப்தி கொள்ள வைத்திருக்கும் சூழலிலும்-

இது விவகாரத்தில் இந்தியா, அமெரிக்கா உட்பட வெளிநாட்டுச் சக்திகளின் வலைக்குள் விழுந்துவிடக் கூடாது என்று ஜாதிக ஹெல உறுமய மற்றும் இனவாதத்தில் ஊறித் திளைத்துள்ள சக்திகள் அரசாங்கத்துக்குப் புத்திமதி கூறிக்கொண்டிருக்கும் பின்புலத்திலும்-

இந்நாட்டு அரசு ஈரான் பக்கம் நோக்கி நகர்வதை நல்ல சகுனமாகக் கொள்ள முடியவில்லை. ஆபத்தை, எதிர் மறையான பெறுபேறுகளை வலிந்து விலைக்கு வாங்கிக் கொள்ளவதாக முடியலாம்.

# கிராம அலுவலர்களை இடமாற்ற நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன.30

பிரதேச செயலகங்களில் கிராம அலுவலர்களாகக் கடமையாற்றுவோர் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

கடந்த 10 ஆண்டுகள் ஒரு கிராம அலுவலர் பிரிவில் கடமையாற்றியவர்களே விரைவில் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் இதற்கான அவசர நடவடிக்கையை எடுத்துள்ளார்.

ஒரு பிரதேச செயலர் பிரிவில் அல்லது உதவி அரச அதிபர் பிரிவில் 5 ஆண்டுகள் கடமையாற்ற மட்டுமே அனுமதிக்கப்படவேண்டும் என்று பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்று நிருபம் கூறுகிறது. இச் சுற்று நிருபத்துக்கு அமைய கடந்த காலங்களில் நடைமுறைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இதற்கமைய 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் என்று ஒரு பிரிவில் கடமையாற்றியோர் விவரம் திரட்டப்படுகிறது.

விவரத்திரட்டு பூரணப்படுத்தியதற்கு இணங்க இடமாற்றப் பட்டியல் தயார் செய்யப்படும்.

இதேவேளை, மாவட்ட மட்ட கிராம உத்தியோகத்தர் சங்கமும் யாழ். குடாநாட்டு கிராம அலுவலர் இடமாற்றத்தை நடைமுறைப் படுத்துமாறு யாழ்.அரச அதிபருக்கும், பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கும் கடிதம் அனுப்பியுள்ளதாகக் கூறப்பட்டது. (ம)

# மாடு கொள்வனவில் வியாபாரி ஏமாற்று சுகாதாரப் பரிசோதகரிடம் அகப்பட்டார்

தென்மராட்சி, ஜன.30

மாடுகள் ஏலவிற்பனையில் வழங்கப்பட்ட பற்றுச் சீட்டைக் காட்டி பொது சுகாதார பரிசோதகரை ஏமாற்ற முயன்றார் இறைச்சிக்கடை உரிமையாளர்.

பொது சுகாதார பரிசோதகர் உரிய நடவடிக்கையை மேற்கொண்டதில் ஏமாற்ற முயன்றவரின் குட்டு அம்பலமானது.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது:

கடந்த வாரம் தனங்கிளப்பு பகுதியில் இடம்பெற்ற கட்டாக்காலி மாடுகள் ஏல விற்பனையில் போது 5 ஆயிரத்து 200 ரூபாவுக்கு மாடு விற்பனை செய்யப்பட்டது. பற்றுச் சீட்டில் விற்பனை செய்யப்படும் மாட்டின் தொகை குறிப்பிடாமல் சாவகச்சேரி பிரதேச சபையின் வைப்பு பதிவு இல.11 என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த இலக்கத்தைக் கொண்டு ஏலத்தில் பதினொரு மாடுகள் கொள்வனவு செய்ததாக தெரிவித்து நகரசபையில் உரிய படிவத்தைப் பெற்று அறுவைக்காக மாட்டைக் கொல்களத்துக்குக் கொண்டு சென்றுள்ளார்.

மறுநாள் கொள்வனவு செய்த பற்றுச்சீட்டு பொது சுகாதாரப் பரிசோதகரிடம் கையளித்து 11 மாடுகள் கொள்வனவு செய்தமைக்கான பற்றுச்சீட்டு என்று தெரிவித்தார் இறைச்சிக்கடை உரிமையாளர்.

பற்றுச் சீட்டை பார்வையிட்ட பொதுசுகாதார பரிசோதகர் 5 ஆயிரத்து 200 ரூபாவுக்கு 11 மாடுகள் விற்கப்பட்டதா என்பதை அறிய பிரதேச சபையுடன் தொடர்பு கொண்டார்.

அது ஒரு மாடு விற்பனை செய்ததற்கு வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு என சபை செயலாளரினால் தெரிவிக்கப்பட்டது.

ஒரு பற்றச் சீட்டினைப் பயன்படுத்தி 11மாடுகளை கொல்களத்தில் வெட்ட முயன்ற இறைச்சிக் கடை உரிமையாளரின் முயற்சி முறியடிக்கப்பட்டது. மிகுதி 10 மாடுகளுக்குரிய கொள்வனவு பற்றுச் சீட்டு சமர்ப்பித்து மாடுகளை கொல்களத்துக்குள் கொண்டு செல்லுமாறு தெரிவிக்கப் பட்டது. (ம-207)

## போக்குவரத்து அமைச்சர் பருத்தித்துறை டிப்போவுக்கு

வடமராட்சி, ஜன.30

போக்குவரத்து அமைச்சர் குமார் வெல்கம பருத்தித்துறை இ.போ.ச. டிப்போவுக்கு நேற்றுப் முற்பகல் 10.30 மணியளவில் திடீர் என்று வருகை தந்தார்.

அமைச்சு அதிகாரிகளுடன் வந்திருந்த அவர், டிப்போவின் பிரிவையும், பழுதடைந்த நிலையில் உள்ள பஸ்களையும் பார்வையிட்டு டிப்போ முகாமையாளர் மற்றும் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடினார்.

சிறந்த பஸ் சேவையை வழங்க வேண்டிய தேவைகள் மற்றும் குறைகள் குறித்து டிப்போ முகாமையாளர் , அமைச்சருக்கு கூறினார்.

இயன்றளவு பருத்தித்துறை டிப்போவில் குறைபாடுகளைத் தீர்த்து வைப்பதாக அமைச்சர் உறுதியளித்தார். (ம-236)

# பண்ணையில் சுகாதார அமைச்சின் கட்டடம் புதனன்று திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், ஜன.30

வடமாகாண சுகாதார அமைச்சுக்கென யாழ்ப்பாணம் பண்ணையில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத் திறப்பு விழா நாளை மறுதினம் புதன் கிழமை நடைபெறவுள்ளது.

இரண்டு மாடிகளையுடைய இப்புதிய கட்டடம் 32 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டது. இந்தக் கட்டடத்தில் வடமாகாண சுகாதார அமைச்சு ஒரு மாடியிலும், வடமாகாண சுகாதாரத் திணைக்களம் இன்னொரு மாடியிலும் இயங்க வைக்க நட வடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வடமாகாண சுகாதார அமைச்சு இன்றுவரை தற்காலிக கட்டடத்திலேயே இயங்கி வருகிறது. அங்கு பெரும் இடநெருக்கடிக்கு மத்தியிலேயே உத்தியோகத்தர்கள் கடமையாற்றி வருகின்றனர். இந்த நிலையிலேயே இந்தக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்படுகிறது.

இந்நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் சிறப்பு விருந்தின ராக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியும் கலந்து கொள்வர். வடமாகாணத்திலுள்ள பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர்கள் உட்பட பலர் கலந்துகொள்ளவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம - 4 - 17)

## நிகழ்வுகள் இன்று

### அபிவிருத்திக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன.30

வடமாகாண உள்ளூராட்சி சபைகளுக்கான துறைசார் அபிவிருத்தி கூட்டம் காலை 9மணிக்கு யாழ். மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி திணைக்களத்தில் இடம் பெறும்.

வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மரியதாசன் ஜெகூ இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள் ளார்.

இதில் 34 உள்ளூராட்சி சபைகளின் செயலர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.(ம)

### திறப்பு விழா

சுதுமலை நாவலர் பாடசாலைத் திறப்பு விழா பிற்பகல் 3மணிக்கு எச்சாட்டியில் அமைக்கப்பட்டுள்ள புதிய கட்டடத்தில் இடம்பெறும்.

நாவலர் பாடசாலை செயலாளர் கந்தையா ஸ்ரீ நந்தகோபன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அமெரிக்காவைச் சேர்ந்த ஆன்மீக ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் ஆகியோர் கலந்துகொள்வர். நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக நூல் வெளியீடு இடம் பெறும். (ம-313)

### பரிசளிப்பு விழா

கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலையின் பாடசாலைத்தினமும், பரிசளிப்பு விழாவும் பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன. பாடசாலை அதிபர் கா.சசிதரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பாடசாலைகள் வேலைப் பகுதிப் பொறியியலாளர் க.குகநேசன் கலந்து கொள்வார். (ம-38)

### கண்காட்சி

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் விவசாய மற்றும் உணவு, தொழில் நுட்பமும் கண்காட்சி நிகழ்வு காலை 9மணிமுதல் மாலை 4 மணிவரை மருதனார்மடம் யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் இறுவட்டும்வெளியீடு செய்யப்படவுள்ளது.

(ம-313)

### காந்தி நினைவு தினம்

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் ஏற்பாட்டில் காந்தி நினைவு தின நிகழ்வுகள் முற்பகல் 10மணிக்கு இல. 774 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வில் ''சத்தியமே இலட்சியமாய்'' எனும் தலைப்பில் யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் நா.புவனேந்திரனும், ''44 ஆவது சர்வோதய மாநாடு ஒரு பார்வை'' எனும் தலைப்பில் சங்கப்பொதுச் செயலா ளர் வி.ஜி. தங்கவேலும் சிறப்புச் சொற்பொழிவை நிகழ்த்தவுள்ளனர்.

(ம-313)

### அங்குரார்ப்பணக் கூட்டம்

நயினாதீவு மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக்கூட்டம் பிற்பகல் 3மணிக்கு பாடசாலையின் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(ம-313)

### கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல் காலை 9.30 மணிக்கு யாழ்.பெருமாள் கோயில் முன்றிலில் நடைபெறவுள்ளது. (ம-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற்றைக் காடுகளை அழிக்கக் கோரிக்கை

மன்னார், ஜன.30

மன்னார் மாவட்டம் ஏ -32 வீதியின் இரு மருங்கிலும் காணப்படும் பற்றைக் காடுகளால் விபத்துச் சம்பவங்கள் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கடிதமொன்று மாந்தை மேற்குப் பிரதேசசபை உறுப்பினரான ஜேம்ஸ். வசந்தனால் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மன்னார் நிறைவேற்றுப் பொறியியலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தள்ளாடியில் இருந்து ஆரம்பித்து மாந்தையூடாகப் பாப்பாமோட்டை செல்லும் ஏ-32 வீதியின் இரு மருங்கிலும் பற்றைக் காடுகள் வீதியை மூடிக் காணப்படுவதால் பல விபத்துக்களும், அவலங்களும் நாளாந்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

தள்ளாடியில் இருந்து ஆரம்பித்து மாந்தையூடாகப் பாப்பாமோட்டை செல்லும் ஏ–32 வீதியின் இரு மருங்கிலும் பற்றைக் காடுகள் வீதியை மூடிக் காணப்படுவதால் பல விபத்துக்களும், அவலங்களும் நாளாந்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

சுமார் இரு வாரங்களுக்கு முன்னர் தனியார் பஸ்சுடன் ஆறு மாடுகள் திடீரென மோதியதால் அவ்விடத்திலேயே அவை இறந்துள்ளன. இன்னும் கடந்த 23ஆம் திகதி மோட்டார் சைக்கிளும், காட்டுப் பன்றிகளும் நேருக்கு நேர் மோதியதில் காயங்களுக்குள்ளான மோட்டார் சைக்கிளில் வந்தவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பல ஆபத்தான வளைவுகளைக் கொண்ட இந்த ஏ-32 வீதியில் உள்ள பற்றைக் காடுகளை அழிப்பதன் மூலம் எதிர்காலத்தில் நடைபெற இருக்கும் விபத்துக்களையும், இறப்புகளையும் தவிர்த்துக் கொள்ளலாம். எனவே தயவு செய்து இந்த அவசரமானதும் அவசியமுமான வேலைத் திட்டத்தை மேற்கொள்ளுமாறு தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. (க)

## விறகுக்குத் தடை

அக்கராயன், ஜன.30

பூநகரியில் விறகுகள் எடுத்துச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இடம்பெற்ற பூநகரிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் விறகுத் தேவைக்காகவும், ஏனைய தேவைகளுக்காகவும் அதிகளவில் காட்டு மரங்கள் தறிக்கப்பட்டு வருகின்றன. இதனால் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுவதோடு மழை வீழ்ச்சி குறைந்து நிலம் உவராகும் ஆபத்து அதிகரித்துள்ளது. இதனைக் கருத்தில் கொண்டே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப் பட்டுள்ளது. அத்தியாவசிய தேவைகளுக்கு விறகுகளை உபயோகிக்க விரும்புவோர் அதற்கான அனுமதியைப் பெற்ற பின்பே அதனை எடுத்துச் செல்ல முடியும். வன்னியில் மக்கள் மீள் குடியமர்ந்த பின்னர் காட்டு வளங்கள் என்றுமில்லாத அளவு அழிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க -410)

# மாணவர்களுக்கு சைக்கிள்கள்



கிளிநொச்சி,ஜன.30

கிளிநொச்சியில் பாடசாலை மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 26 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சிக்கு வருகை தந்த கிரிக்கெட் வீரர் குமார் சங்கக்காரவினால் பவுண்டேசன் குட்ணஸ் அமைப்பின் ஏற்பாட்டில் வன்னியின் கிளிநொச்சிப் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்குச் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, கண்டாவளை, கரைச்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு 571 ஆவது படைப்பிரிவினூடாக நூறு சைக்கிள்களும் 573ஆவது படைப்பிரிவினூடாக 200 சைக்கிள்களும், 579 ஆவது படைப் பிரிவினூடாக 100 சைக்கிள்களும் என 400 சைக்கிள்கள் இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் கிரிக்கெட் வீரர் குமார் சங்கக்கார, கிளிநொச்சிப் பிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஏ.டபிள்யூ.ஜே.சி சில்வா, 57 ஆவது படைப்பிரிவின் தளபதி கே.ஆர்.பி·றொபல் மற்றும் இராணுவ உயரதிகாரிகள் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (6)



கற்சிலைமடுவில் இடம்பெற்ற உழவர் திருநாள் நிகழ்வில் கலந்து கொண்டவர்கள். (500)

# நீர் கிடைக்குமா? விவசாயிகள் கேள்வி

கிளிநொச்சி,ஜன.30

கிளிநொச்சி, அக்கராயன் குளம் கண்ணகைபுரம் மக்கள் இம்முறையாவது தமக்கு மேட்டுநிலப் பயிர்ச் செய்கைக்குரிய நீர் விநியோகம் மேற்கொள்ளப்படுமா? எனக் கேள்வி எழுப்பியுள்ளனர்.

கிளிநொச்சி, அக்கராயன்குளம் கண்ணகைபுரம் மக்கள் இம்முறையாவது தமக்கு மேட்டுநிலப் பயிர்ச் செய்கைக்குரிய நீர் விநியோகம் மேற்கொள்ளப் படுமா? எனக் கேள்வி எழுப்பியுள்ளனர்.

கிளிநொச்சி அக்கராயன் குளத்தின் கீழ் உள்ள கண்ணகைபுரம் கிராமத்துக்குக் கடந்த காலங்களில் சிறுபோகச் செய்கையின் பொருட்டு மேட்டுநிலச் செய்கைக்கான நீர்விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது.

கடந்த ஆண்டு அக்கராயன்குளத்தின் புனரமைப்புப் பணிகளும், வாய்க்கால்களின் புனரமைப்புப் பணிகளும் இடம்பெற்று வந்தமையால் சிறுபோகச் செய்கையின்போது மேட்டுநிலச் செய்கைக்கான நீர் விநியோகம் மேற்கொள்ளப் படவில்லை. தற்போது குளத்தின் வேலைகள் மற்றும் வாய்க்கால் வேலைகள் ஓரளவு நிறைவு பெற்றுள்ளமையால் இந்த ஆண்டு சிறுபோகச் செய்கையில் தமது மேட்டுநிலச் செய்கைக் குரிய நீர் விநியோகம் மேற்கொள்ளப்படுமா? என இந்தப் பகுதியைச் சேர்ந்த சுமார் ஆயிரத்து 732 விவசாயிகள் கேள்வி எழுப்பியுள்ளனர். (க-6)

# விரைவில் நியமனம்

அக்கராயன், ஜன.30

கிளிநொச்சி வட்டக்கச்சி மருத்துவமனைக்கு விரைவில் நிரந்தர மருத்துவர் நியமிக்கப்படுவாரெனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது. வட்டக்கச்சி மருத்துவமனை நீண்ட காலமாகவே நிரந்தர மருத்துவர் இல்லாத நிலையில் இயங்கிவருகிறது. இதனால் நிரந்தர மருத்துவரை நியமிக்குமாறு வட்டக்கச்சிப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் நிரந்தர மருத்துவரை விரைவில் நியமிப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. வட்டக்கச்சி மருத்துவமனையில் நிரந்தர மருத்துவர்கள் பணியில் இல்லாத நிலையில் வட்டக்கச்சிக் கிராமத்தைச் சொந்த இடமாகக் கொண்ட இரு மருத்துவர்கள் புத்தளத்தில் பணியாற்றுகின்றனர். 1983 ஆம் ஆண்டிலிருந்து கிளிநொச்சியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 120 மருத்துவர்கள் பிற மாவட்டங்களில் பணியாற்றுகின்றனர். (க -410)

# தரம் 5 மாணவருக்கு கனடாவின் உதவிகள்

கிளிநொச்சி,ஜன.30

கிளிநொச்சி முழங்காவில் பகுதியில் தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு கனடாவின் 'வாழவைப்போம்' என்ற அமைப்பினூடாக பயிற்சிப் புத்தகங்களும், அப்பியாசக் கொப்பிகளும் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, முழங்காவில் மகாவித்தியாலயம், இரணைமாதா நகர் அ.த.க பாடசாலை, பல்லவராயன் கட்டு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, கிராஞ்சி அ.த.க பாடசாலை, வேரவில் இந்து மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலிருந்து தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் கல்வியை மேம்படுத்திக் கொள்ளும் வகையில், கனடாவின் 'வாழவைப்போம்' என்ற அமைப்பினூடாக இருநூறுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு புலமைப்பரிசில் பரீட்சைக்கு வழிகாட்டும் பயிற்சிப் புத்தகங்களும், அப்பியாசக் கொப்பிகளும் தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் ஊடாக

மாணவர்களின் கல்வியை மேம்படுத்திக் கொள்வதற்காக கனடாவின் 'வாழவைப்போம்' என்ற அமைப்பு உதவிகள்

வழங்கப்பட்டுள்ளன.

இதில் கலந்து கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் பின்தங்கிய பாடசாலை மாணவர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்துவதன் மூலம் எமது எதிர்காலச் சந்ததியின் வாழ்வை மேம்படுத்த முடியும். எமது உரிமைகளின் பிரதான ஆயுதமாக இந்தக் கல்வி காணப்படுகின்றது. கல்வியில் முன்னேற்றம் கண்டு எமது சாதனைகளை நிலைநாட்ட முடியும். பின்தங்கிய பகுதிகளில் உள்ள மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்திக் கொள்வதற்குப் புலம் பெயர் சமூகம் தொடர்ந்து பல்வேறு உதவிகளைச் செய்து வருகின்றது.- என்று கூறினார். (க - 6)

## தனியான பிரதேச சபை

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளைப் பிரதேச சபையைத் தனியாக அமைக்க வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது கரைச்சிப் பிரதேச சபையின் உப அலுவலகமொன்று கண்டாவளையில் இயங்கி வருகின்றது. கண்டாவளைப் பிரதேசமானது மிக நீண்ட பகுதிகளைக் கொண்டது. கண்டாவளைப் பிரதேச சபையைத் தனியாக அமைக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்துள்ளது.

மீள்குடியமர்வு தொடர்பான கூட்டம் ஒன்று மாகாணத் திணைக்கள அதிகாரிகளுக்கும், அரசஅதிபர் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஆகியோருக்கு இடையில் நடைபெற்றபோது கண்டாவளைப் பிரதேச செயலாளர் எஸ்.சத்தியசீலன் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். (க-6)

# சடலங்களை வழங்குவதில் தாமதம் வைத்தியசாலைத் தரப்பினர் அலட்சியம்

மன்னார், ஜன.30

மன்னார் பொது வைத்தியசாலையின் பிரேத அறையிலிருந்து ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவர்களின் சடலங்களைப் பெற்றுக் கொள்வதில் தாமதங்கள் ஏற்படுவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

மன்னார் வைத்தியசாலைத் தரப்பினர் அலட்சியப் போக்குடன் நடந்து கொள்ளுவதாகவும், பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

சடலங்களைப் பெற்றுக் கொள்வதில் ஏற்படும் தாமதத்தால் இறுதிக் கிரியைகளை நடத்துவதில் உறவினர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை வரை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் 3 சடலங்கள் காணப்பட்டன.

மன்னார் பொது வைத்தியசாலையின் பிரேத அறையிலிருந்து சடலங்களைப் பெற்றுக் கொள்வதில் தாமதங்கள் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் குறித்த சடலங்களை உரிய நடவடிக்கைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைப்பதற்கு மன்னார் வைத்தியசாலைத் தரப்பினர் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப் படுகின்றது.

மன்னார் மாவட்டத்தில் இரண்டு திடீர் மரண விசாரணை அதிகாரிகள் இருந்த போதும், அவர்கள் குறித்த தினத்தன்று மன்னாரில் இல்லாததன் காரணத்தால் இந்த மரணங்கள் தொடர்பில் மரண விசாரணைகளை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

இதனால், சடலங்களைப் பொறுப்பேற்க வந்த உறவினர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

எனவே, உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனம் செலுத்துவதுடன், சடலங்களை உரிய நேரத்தில் தாமதமின்றி உறவினர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

# யாழ்ப்பாணத்துக்கு ரயில் 2013 இற்கு முன்னர் வரும்

போக்குவரத்துத்துறை அமைச்சர்



யாழ்ப்பாணம், ஜன.30
யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவைகள் எதிர்வரும் 2013 ஆம் ஆண்டுக் குள் ஆரம்பமாகும் என்று போக்குவரத்துத் துறை அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அமைச்சர் ஆஸ்பத்திரி வீதியில் அப்பலோ ரயர் நிறுவனத்தில் யாழ். விற்பனை நிலையத்தை திறந்து வைத்தார்.

இதனையடுத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

இதில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

வவுனியாவுக்கும் காங்கேசன் துறைக்கும் இடையிலான ரயில் சேவையை விரைவாக ஆரம்பித்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முதலில் ஓமந்தையில் இருந்து பளை வரைக்கும் அடுத்ததாகப் பளையில் இருந்து யாழ்ப்பாணம் ரயில் நிலையம் வரைக்கும் அங்கிருந்து காங்கேசன்துறை வரைக்கும் கட்டம் கட்டமாக ரயில் பாதை அமைக்கப்படவுள்ளது. இந்திய அரசின் உதவியுடன் இந்த ரயில் பாதை அமைக்கும் பணிகள் இடம்பெறும்.

இந்தப் புனரமைப்பு பணிகள் சில நாள்களில் துரித கதியில் முன்னெடுக்கப்படும்

இதைவிட யாழ். மத்திய ரயில் நிலையத்தை நவீன வசதிகள் கொண்ட ரயில்வே நிலையமாக மாற்றியமைப்பதற்கும் புனரமைப் பதற்கும் இலங்கை வங்கி முன் வந்துள்ளது.


வடக்குக்கான ரயில் சேவைப் புனரமைப்புப் பணிகளை விரைவில் ஆரம்பிக்குமாறு ஜனாதிபதியும் பணித்துள்ளார்.

இந்தப் பணிகள் விரைவாக ஆரம்பிக்கப்படும் இந்த ரயில் சேவை ஆரம்பிப்பதன் மூலம் யாழ்ப்பாண மக்களின் போக்குவரத்து பிரச்சினை முற்றாக நீங்கிவிடும்.- என்றார்.

இதேவேளை, காரைநகர் மற்றும் பருத்தித்துறையில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்துச் சபையின் டிப்போக்களுக்கும் அமைச்சர் திடீர் பயணம் செய்தார். (ம-17)

யாழ். மத்திய ரயில் நிலையத்தை நவீன வசதிகள் கொண்ட ரயில்வே நிலையமாக மாற்றியமைப் பதற்கும் புனரமைப் பதற் கும் இலங்கை வங்கி முன் வந்துள்ளது.

## நயினையில் கும்பாபிஷேகம்



யாழ்ப்பாணம், ஜன.30
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகப் பெருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

முன்னதாக விசேட யாக பூசைகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து ஆலய முன் வாசலில் நாட்டியாஞ்சலியும் அதைத் தொடர்ந்து கும்பங்கள் உட்பிரகாரத்தில் உள்ள கலசங்களுக்கு குடமுழுக்கும் இடம்பெற்றது.

பிரதமகுரு சிவஸ்ரீ முத்துக் குமாரசாமிக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆலய முன்புறக் கலசம் உட்பட குடமுழுக் குச் செய்யப்பட்டது. இதில் ஒவ்வொரு கோபுரத்தில் உள்ளகலசங்களுக்கும் சிவாச்சாரியர்கள் குடமுழுக்குச் செய்தனர்.

அதைத் தொடர்ந்து புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 108 அடி உயரம் கொண்ட ராஜ கோபுர குடமுழுக்கு நிகழ்ந்தது. குடமுழுக்கு நிகழ்ந்த வேளையில் கோபுர வாசல் கதவை பாணந்துறையில் இருந்து கொண்டு வரப்பட்ட குட்டியானை திறந்து வைத்தது. முன்னதாக கோபுர வாசலில் வந்தது மண்டியிட்டு வணக்கம் செய்தது.

யானையைத் தொடர்ந்து நெடுந்தீவில் இருந்து எடுத்து வரப்பட்ட அசுவம், கோமாதா என்பனவும் கோபுரவாசல் வழியாக யாகமண்டபம் வரை கொண்டு வரப்பட்டன.

சனிக்கிழமை இரவு ஆலய புவனேஸ்வரி அரங்கில் நாகபூஷணி அந்தாதி நூல் வெளியீட்டுவிழாவும் நயினை கவிஞர்களால் எழுதப்பட்ட பாடல்களின் இறுவட்டும் வெளியிடப்பட்டன. (ம-7)

## 6.8 மில்லியன் ரூபா செலவில் கைதடி சிறுவர் இல்லம் திருத்தம்

யாழ்ப்பாணம், ஜன.30
கைதடியிலுள்ள அரச சிறுவர் இல்லம் 6.8 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகிறது. இரண்டுவார காலத்தினுள் புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்துவிடும் என்றும் குழந்தைகளைப் பராமரிப்பவர்களுக்கும் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது எனவும் கூறப் பட்டது.

இந்தச் சிறுவர் இல்லத்தில் உரிய வசதிகள் இல்லாது, சுகாதார வசதிகள் உரிய முறையில் பேணப் படாத நிலையில் அங்கு குழந்தைகள் தங்க வைக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வந்தன.

இதனால் குழந்தைகள் சுகயீனமடைவதோடு ஒரு குழந்தை மரணமடைந்திருந்தது.

அதனையடுத்து அந்த இல்லத்திலிருந்து குழந்தைகள் வேறு இடத்துக்கு மாற்றப்பட்ட நிலையில் இல்லம் 6.8 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்பட்டு வருகிறது.

புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்ததும் மீண்டும் குழந்தைகள் இந்த இல்லத்துக்குக் கொண்டு வரப்பட்டுத் தங்க வைத்துப் பராமரிக்கப்படுவார்கள்.

கைவிடப்பட்ட இந்தக் குழந்தைகளைப் பராமரித்து வருபவர்களுக்கு யாழ். போதனா வைத்தியசாலையிலும், பிற இடங்களிலும் வைத்தியர்களால் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. (ம-4)

## முதலீட்டாளர்களை வலுவூட்டல் கருத்தரங்கு ரில்கோ விடுதியில்





யாழ்ப்பாணம், ஜன.30
இலங்கை மத்திய வங்கி வடமாகாண அலுவலகத்தின் ஏற்பாட்டில் முதலீட்டாளர்களை வலுவூட்டும் கருத்தரங்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.ரில்கோ விடுதியில் நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்ப உரையை மத்திய வங்கியின் வடமாகாண முகாமையாளர் எவ். கௌரிசங்கர் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து வாழ்த்துரையை மத்திய வங்கியின் பிரதிப் பணிப்பாளர் ரணவீரவும் அறிமுக உரையினை மத்திய வங்கியின் வடமாகாண சிரேஷ்ட முகாமையாளர் ப.சிவதீபனும் நிகழ்த்தினர்.

திணைக்களப் பணிப்பாளர்கள், வங்கி முகாமையாளர்கள், மற்றும் முதலீட்டாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் ''வியாபாரம் மற்றும் கம்பனி பதிவு நடைமுறைகள்'' எனும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக சட்டபீட விரிவுரையாளர் கு.குருபரன், ''வடமாகாண விவசாயத்துறையில் முதலீடு மற்றும் உற்பத்தி வாய்ப்புகள்'' எனும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக விவசாயபீட விவசாய உயிரியில் திணைக்களத் தலைவர் பேராசிரியர் மிகுந்தன், ''ஏற்றுமதி நடைமுறைகளும் அவை தொடர்பான வங்கி நடைமுறைகளும்'' எனும் தலைப்பில் யாழ். இலங்கை வங்கி மேற்றரக் கிளை சிரேஷ்ட முகாமையாளர் ஜேசுதாஸ், வடமாகாணத்தில் பொதுவான முதலீடு மற்றும் உற்பத்தி வாய்ப்புகள்'' எனும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக பொருளியல் மற்றும் முகாமைத்துவ தலைவர் கலாநிதி மங்களேஸ்வரன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

இந்த நிகழ்வில் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவித்தல், சந்தைப்படுத்தல், தொழில் முயற்சிக்கான கடன் வழங்கல், தொழில்நுட்ப மாற்றங்களுக்கு ஏற்ப எவ்வாறு உற்பத்திகளை பயன்படுத்தல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. (ம-313)


## இன்று நீதிமன்றில்

யாழ்ப்பாணம், ஜன.30
படகு பழுதடைந்து நெடுந்தீவில் கரையொதுங்கிய இந்திய மீனவர் நால்வரும் ஊர்காவற்றுறை நீதிமன்றில் இன்று முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை கரையொதுங்கிய நால்வரையும் கடற்படையினர் மீட்டு நெடுந்தீவுப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். பொலிஸார் நால்வரையும் நீதிவான் எஸ்.எம். மகேந்திரராஜா முன்னிலையில் முற்படுத்தினர். நால்வரையும் இன்று திங்கட்கிழமைவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

அவர்களது விவரங்கள், அவர்களது விவரம் உள்ளிட்ட ஆவணங்கள் மன்றில் சமர்ப்பிக்கும்படி கூறப்பட்டது. மன்றின் உத்தரவுப்படி யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தினரிடம் நால்வரையும் ஒப்படைத்து கடற்படையினர் மூலமாக கடலில் வைத்து இந்தியக் கடற்படையினரிடம் ஒப்படைத்து இந்தியாவுக்கு அனுப்பி வைக்கும்படி கூறப்பட்டுள்ளது. (ம-4)

## தொல்லை கொடுக்கும் கட்டாக்காலிகள்



யாழ்ப்பாணம், ஜன.30
யாழ்.போதனா வைத்திய சாலையில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை கடந்த சில மாதங்களாக தீவிரமடைந்துள்ளது. இத னால் நோயாளர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இந்த வைத்திய சாலையில் கட்டாக்காலிகள் தமது எண்ணப்படி சுற்றி வருகின்றன. இவை வைத்தியசாலை ஊழியர்களையும் விட்டுவைக்காமல் துரத்திக் கடிப்பதாக விசனம் கூறப்படுகின்றது.

கட்டாக்காலி நாய்களின் அட்டகாசத்தைக் கண்டும் வைத்தியசாலை உயர் அதிகாரிகள் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை எனவும் விசனம் கூறப்படுகிறது.

இவ்விடயத்தில் வைத்தியசாலை நிர்வாகிகள் உடனடிக் கவனமெடுத்து இவற்றைக் கட்டுப்படுத்தவோ அன்றில் அழிக்கவோ உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பலராலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ம -288)

## ஊரத்தி - சங்கானை மக்களுக்கு இரு வாரங்களில் காணிகள்

அராலி ஊரத்தி- சங்கானை மத்தி ஆகிய பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு இருவாரங்களில் காணிகள் பகிர்ந்து வழங்கப்படவுள்ளன.

நீண்ட காலமாக இழுபறி நிலையில் காணி பங்கீடு குறித்து அனைத்து சபை உறுப்பினர்களும் ஒருங்கே சம்மதம் தெரிவித்துள்ளனர்.

எனவே எமது சபை வரம்புக்கு [illegible] நில அளவை செய்து தற்போதுள்ள மக்களுக்கு அவர்களின் குடும்பநிலை, வறுமை என்பவற்றைகருத்தில்கொண்டு காணி உறுதி பகிர்ந்து வழங்கப்படும். வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவர் திருமதி நா.ஐங்கரன் சபை உறுப்பினர்களுக்கு பகிரங்கமாக தெளிவுபடுத்தியுள்ளார்.

முன்னைநாள் செயலாளர் இந்த இரு பிரதேச மக்களுக்குரிய [illegible] காணி பங்கீடு குறித்து எடுக்கப்பட வேண்டிய அனைத்து செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுக் காணி பகிர்ந்து வழங்கப்படும் நேரத்தில் சபை பொறுப்பேற்றது.

இதனையடுத்து அராலி- சங்கானை பகுதியில் உள்ள மக்களுக்கு காணி பகிர்ந்து வழங்கப்படும் நடவடிக்கை கடந்த 7 மாத காலமாகப் பிற்போடப்பட்டது.

சபை பொறுப்பேற்று மக்களுக்கு காணி வழங்கப்படாது இருப்பது அபிவிருத்தி உகந்தது அல்ல.

எனவே, இதற்கென உருவாக்கப்பட்ட குழுவின் சம்மதம் கிடைத்துள்ளது. இரு வாரங்களில் உறுதி எழுதி நிரந்தரமாக வழங்கப் படும்.

இதற்கு அனைத்து அராலி- ஊரத்தி, சங்கானை மத்தி பகுதியைச் சேர்ந்த மக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரும்போக அறுவடையில் குறைந்தது மனிதவலு

யாழ்ப்பாணம்,ஜன.30

வலிகாமம் பெரும்போக நெல் அறுவடையில் மனித வலு பாவனை குறைவடைந்துள்ளது.

அரிவு வெட்டுவதற்கும் வெட்டிய அருவியை சூடு அடிப்பதற்கும் பெரிய இயந்திரங்கள்பாவிக்கப்படுகின்றன.

இயந்திரங்களின் பாவனை அதிகரித்துள்ளதால் தற்போது மனித வலுவாக செயற்படுபவர்களுக்கான உயர்ந்தபட்ச கூலியை வழங்க அனைத்து விவசாயிகளும் முன்வர வேண்டும்.

இயந்திரங்களைப் பயன்படுத்துவோர் பரப்பளவுக்கான கூலியை இன்றைய நிலைமைகளுக்கு ஏற்பவும் விவசாயிகள் பாதிப்படையாத வகையிலும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பலதரப்பட்டோரும் கருத்துத் தெரிவிக்கின்றனர். (ம)

# நூலகத்தை மறுசீரமைக்க வந்தது புதிய நடைமுறை

யாழ்ப்பாணம், ஜன.30

யாழ்.மாவட்டத்தில் உள்ள நூலகங்கள் மறுசீரமைக்கப்படவுள்ளன. உள்ளூராட்சி சபைகளின் கீழ்வரும் நூலகங்களின் விவரங்கள் தற்போது திரட்டப்படுகின்றன.

இந்த விவரம் திரட்டப்பட்டவுடன் முப்பரிமாண திட்டத்தின் அடிப்படையில் 16 உள்ளூராட்சி சபைகளின் கீழ் உள்ள பொது நூலகங்கள் புதிய பரிமாணத்துடன் செயற்படவுள்ளன என்று யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் செ.பிரணவநாதன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபை நூலகர்- செயலாளர்களுக்கான நூலக அபிவிருத்திக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் செ.பிரணவநாதன் மேற்கண்டவாறு கூறினார். இந்த விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

குடாநாட்டில் உள்ள உள்ளூராட்சி பொதுநூலகங்கள் சில மிக வேகமாக பல் பரிமாண சேவைகளை வழங்குகின்றன.

சில நூலகங்கள் குறைந்தளவான சேவையை வழங்குகின்றன.

2012 இல் இருந்து அனைத்து உள்ளூ ராட்சி பொது நூலகங் களும் மக்களுக்கான முழு சேவையை வழங்க வேண்டும்.

இதற்காக நூலகர்களுக்கு முழுமையான பயிற்சியை வழங்கி வருகின்றோம். இனிவரும் காலங்களில் நூலக சேவையை மேம்பாடு செய்வதற்காக உள்ளூராட்சி சபைச்செயலாளர்களை பிரதம நூலகர் போல் செயற்படுமாறு பணிக்கின்றேன்.

அதன் முதற்கட்டமாக முப்பரிமாண நூலக சேவையை முன் வைக்கின்றேன். அதனை நடைமுறைப்படுத்த அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். இதற்காக வலய ரீதியாக குழுத் தலைவர்களையும் மாவட்ட ரீதியாக நூலக அபிவிருத்தி சங்கத்தையும் அமைக்கவுள்ளேன்.- என்றார்.

இதில் யாழ்.பல்கலைக்கழக நூலகர் செல்வி ஏ. அருளானந்தம், உதவி நூலகர் த.நவநீதகிருஸ்ணன் ஆகியோரும் உரையாற்றினர். (ம)

## கீரிமலையில் சிவபூமிமடம்



வலி. வடக்கு, ஜன. 30

கீரிமலை தீர்த்தக்கேணி அருகாமையில் அமைக்கப்பட்ட சிவபூமி மடம் நேற்றுக் காலை 9.10 மணியளவில் அமெரிக்காவின் ஹாவாய் நாட்டு இந்துமதத் துறவி தொண்டுநாத சுவாமிகளால் திறந்து வைக்கப்பட்டது.

கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தில் இருந்து அடியவர்கள் மற்றும் விருந்தினர்கள் மேளவாத்திய சகிதம் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டதைத்தொடர்ந்து கோமாதா பூசை இடம்பெற்று மண்டபத்தின் வாசலில் அமைந்துள்ள பிள்ளையாருக்குப் பூசை வழிபாடுகள் கீரிமலை நகுலேஸ்வர ஆலய பிரதம ஆதீனகர்த்தா இராஜஸ்ரீ நகுலேஸ்வரக்குருக்களால் மேற்கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பிரதான சிவபூமி மடத்தை தொண்டு நாத சுவாமிகள் திறந்து வைக்க அலுவலகத்தை சிவத்தொண்ட நிலைய பொறுப்பாளர் சிவத்திரு முரளிதரன் திறந்து வைத்தார்.


நினைவுக் கல்லை நகுலேஸ்வரக் குருக்கள் திறந்து வைத்ததைத் தொடர்ந்து பிரதான மண்டபத்தில் அமைந்துள்ள சிவலிங்கத்துக்கான பூசை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

சிவபூமி மண்டபம் அமைக்க உதவியவர்கள் மற்றும் நல்லை குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞான தேசிக ஞானசம்பந்த பரமாச்சரியசுவாமிகள், யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலைய பொறுப்பாளர், சிவஸ்ரீ முரளிதரன், தொண்டு நாத சுவாமிகள் மற்றும் அந்தணப் பெருமக்களும் மங்கள விளக்கேற்றினர்.

தொடர்ந்து ஆறு. திருமுருகன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் ஆசியுரைகளை நல்லை குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞான தேசிக ஞானசம்பந்த பரமாச்சரியசுவாமிகள், மாவை ஆதீன முதல்வர் மகாராஜஸ்ரீ ச.இரத்தினசபாபதிக்குருக்கள், தொண்டு நாதசுவாமிகள் ஆகியோர் வழங்கினர்.

வாழ்த்துரைகளை பேராசிரியர். அ.சண்முகதாஸ், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா உட்பட மற்றும் பலர் நிகழ்த்தினர். சிறப்பு நிகழ்ச்சியாக சிவபூமி சிறுவர் இல்ல மாணவர்களின் நிகழ்வுகளுடன் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மாணவர்களின் மாதவி கூறும் துறவறம் என்னும் நாடகமும் இடம் பெற்றது. (ம-86)

## பொலிஸாருக்கு மருத்துவ முகாம்





வலி வடக்கு, ஜன.30

யாழ்.மாவட்ட பொலிஸ் உத்தியோகத்தருக்கு மருத்துவ முகாம் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண பொலிஸ் மா அதிபர் இந்திரன் கலந்து கொண்டார். அத்துடன் இலங்கை பொலிஸ் வைத்தியசாலைப் பணிப்பாளர், சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர், பிரதம பொலிஸ் மருத்துவ அதிகாரி, பொலிஸ் அத்தியட்சகர் காமினி பெரேரா, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பாண்டார போவத்த, யாழ்ப்பாணம்-காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பிரதம பொலிஸ் பரிசோதகர் வீரசிங்கா, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை பொறுப்பதிகாரி வைத்தியக் கலாநிதி அ.ஜெயக்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பிரதம விருந்தினர் உட்பட ஏனைய பொலிஸ் அதிகாரிகளும் வைத்தியசாலை வளாகத்தில் வைத்து மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டதுடன் வைத்தியசாலை மண்டபத்தில் பொலிஸாருக்கான அறிவுறுத்தல்கள் இடம்பெற்றன.

இதனைத் தொடர்ந்து கொழும்பில் இருந்து வருகை தந்த பொலிஸ் வைத்திய அதிகாரிகள்ஐவருடன்மற்றும் தெல்லிப்பழை வைத்தியசாலை வைத்தியர்களும் இணைந்து பொலிஸாருக்கான வைத்தியப் பரிசோதனைகள் மேற்கொண்டனர். (ம -86)

## கிணற்றில் தவறி வீழ்ந்து மரணம்

வலி. வடக்கு, ஜன. 30

தோட்டத்துக்கு நீர் இறைக்கச் சென்ற இரண்டு பிள்ளைகளின் தந்தை சடலமாக கிணற்றில் இருந்து மீட்கப்பட்ட சம்பவம் ஏழாலைப் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம் பெற்றுள்ளது.

ஏழாலை மேற்கு நாவலடியைச் சேர்ந்த சிவராசா மகேந்திரன் (வயது 57) என்பவரே கிணற்றில் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சனிக்கிழமை காலையில் தோட்டத்துக்கு இறைப்பதற்காக ஏழாலை தோப்பு என்னும் இடத்தில் உள்ள தோட்டத்துக்கு சென்றிருந்தார்.

இந்தவேளையில் கிணற்றில் தவறி வீழ்ந்த போதிலும் அந்த இடத்தில் எவரும் இல்லாமையால் இவர் நீரில் மூழ்கி இறந்துள்ளார்.

குறிப்பிட்ட இடத்துக்குச் சென்ற சுன்னாகம் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் மல்லாகம் மாவட்ட நீதிபதியின் உத்தரவுக்கு அமைவாக சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டது. (ம-86)

## 'காப்பெற்' வீதிகளாகின்றன

ஆஸ்பத்திரி வீதி, கோவில் வீதி, மின்சார நிலைய வீதிகள் விரைவில் 'காப்பெற்' வீதிகளாக மாற்றப்படவுள்ளன என யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை யாழ்.மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் இடம்பெற்றது. இதில் தமது பகுதிகளுக்கான வீதிகள் புனரமைக்கப்படவில்லை எனவும் புனரமைப்பில் பாரபட்சம் காட்டுவதாகவும் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

இதற்குப் பதிலளிக்கும் போதே முதல்வர் மேற்கண்டவாறு கூறினார். இதில் மேலும் தெரிவிக்கையில்;

**45 ஊழியர்களே இந்தக் கடமையில் உள்ளனர். அதனால் தான் தாமதங்கள் ஏற்படுகின்றன.**

தற்சமயம் நாற்பத்தி ஐந்து ஊழியர்களே இந்தக் கடமையில் உள்ளனர். அதனால் தான் தாமதங்கள் ஏற்படுகின்றன. நீங்கள் கூறுவதைக் கவனத்தில் எடுக்கின்றேன். உங்களது பகுதிகளில் உள்ள வீதிகளை விரைவில் திருத்தியமைக்க நடவடிக்கை எடுப்பேன்.- என்று கூறினார். (ம - 7)

## புத்துயிர் பெறும் பொலிஸ் நிலையம்

வடமராட்சி,ஜன.30

யுத்தத்தின் போது அழிவுகளுக்குள்ளான பருத்தித்துறை பொலிஸ் நிலையம் மீண்டும் அதே இடத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நீதிமன்றத்துக்கு முன்பாக உள்ள பொலிஸ் நிலையக் காணியில் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் விழா இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு அடிக்கல்லை நட்டு வைப்பார்.

**பருத்தித்துறை நீதிமன்றத்துக்கு முன்பாக உள்ள பொலிஸ் நிலையக் காணியில் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் விழா இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.**

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் காமினி சில்வா, காங்கேசன்துறை பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்திரன், பருத்தித்துறை நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன், பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-236)

## பாதீனியம் அழிப்பு

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பரவியிருந்த பாதீனியச் செடிகள் நகரசபைத் தலைவரின் உடனடி நடவடிக்கையால் அழித்தொழிக்கப்பட்டன.

கல்வயல் பகுதியில் வேதவனப் பிள்ளையார் ஆலயச் சுற்றாடல், ஐயனார் கோவில் வீதி, சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்குச் செல்லும் தனங்கிளப்பு வீதி ஆகியவற்றில் பாதீனியச் செடிகள் வளர்ந்து வருவதாக பொது மக்கள் முறைப்பாடு செய்திருந்தனர். நகரசபை தலைவர் அப்பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று நகரசபை ஊழியர்கள் மூலம் இதனை அழித்தொழிக்க நடவடிக்கை மேற்கொண்டார்.

இந்திய இராணுவம் யாழ். குடாநாட்டில் தங்கியிருந்தவேளை வலிகாமம் பகுதியில் உற்பத்தியான பாதீனியச் செடி இன்னமும் அழிக்கப்படாத நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம -208)

## சட்டவிரோத மண் அகழ்வு

கைதடி, ஜன.30

சாவகச்சேரி பிரதேச சபைக்குச் சொந்தமானதும் பொது விளையாட்டு மைதானம் அமைக்கவெனவும் ஒதுக்கப்பட்ட காணியில் தனியார் சிலரால் பெருமளவு மண் சட்டவிரோதமாக ஏற்றப்பட்டு தமது சொந்தத் தேவைக்காகக் கொண்டு செல்லப்பட்டு வருவதாகப் பொதுமக்கள் பலராலும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

**பெருமளவு மண் சட்டவிரோ தமாக ஏற்றப்பட்டு தமது சொந்தத் தேவைக் காகக் கொண்டு செல்லப்பட்டு வருவதாகப் பொதுமக்கள் பலராலும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.**

இந்தக் காணியில் கடந்த தினங்களுக்கு முன்னர் தமது வீதித் திருத்தத்துக்கான சனசமூக நிலையம் ஒன்று மண்ணை ஏற்றி வீதியை செப்பனிட்டது.

இதனை அவதானித்த சிலர் இந்தக் காணியில் இருந்து பெருமளவு மண்ணை உழவு இயந்திரங்களில் ஏற்றிச் செல்வதாகக் கூறப்படுகிறது.

இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்குக்கு கலாமின் பயணம் இடம்பெறாதது எதற்காக?

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு அப்துல் கலாமை சந்திக்க வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்கப்பட்ட போதும் கிழக்குப் பல்கலைக்கழகங்களின் மாணவர்கள் ஏன் புறந்தள்ளப்பட்டுள் ளனர் என்று முன்னாள் அமைச்சர் மன்சூர் கேள்வி எழுப்பியுள்ளார்.**

மட்டக்களப்பு,ஜன.30

இந்திய முன்னாள் ஜனாதிபதி தலைவர் அப்துல் கலாம் கிழக்கு பிரதேசங்களுக்குச் செல்லாதமை தொடர்பில் கிழக்கு மாகாண மக்கள் கவலையடைந்துள்ளதாக முன்னாள் அமைச்சர் ஏ.ஆர். மன்சூர் தெரிவித்தார்.

இந்தியத் தூதரகம் அப்துல் கலாமை ஏன் கிழக்கு மாகாணத்துக்கு அழைத்துச் செல்லும் திட்டத்தை நடைமுறைப்படுத்தவில்லை என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களுக்கு அப்துல் கலாமை சந்திக்க வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டபோதும் கிழக்குப் பல்கலைக்கழகங்களின் மாணவர்களுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கப் பெறவில்லை என்று அவர் தெரிவித்தார்.

இந்தச் செயற்பாடு கிழக்கு மாணவர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மதிப்புமிக்க மனிதர் ஒருவரை தாம் சந்திக்க முடியாமல் போனமை கவலையளிப்பதாக கிழக்கு மாகாண மக்கள் குறிப்பிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.(ச)

# ஆசிரியர் பற்றாக்குறை; கலாமிடம் கோரிக்கை

நுவரெலியா, ஜன.30

மலையகப் பாடசாலைகளிலும் நிலவும் கணிதம் மற்றும் விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கான வெற்றிடத்தை நிரப்ப இந்தியா உதவ வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்குச் சென்ற இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமிடம் இந்திய தூதர் அசோக் கே காந்த ஊடாக இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் மத்திய மாகாண சபை உறுப்பினர் முரளி ரகுநாதன் அறிக்கை ஒன்றில் மூலமாகவே கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

தாங்கள் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விஞ்ஞானி. இந்தியாவின் விஞ்ஞான வளர்ச்சிகண்டு நாம் பெருமையடைகின்றோம். எனினும், இந்திய வம்சாவளியினராக இலங்கையில் உள்ள எமது மலையக மக்களின் பிள்ளைகளுக்கு விஞ்ஞானம் மற்றும் கணித பாடத்தினைக் கற்பிப்பதற்கே ஆசிரியர்கள் இன்றித் தவிக்கின்றோம்.

இதனைப்புரிந்துகொண்டு தங்களால் இயன்ற நடவடிக்கையினை எடுக்க வேண்டும்.

அப்துல் கலாம் கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஆற்றிய விரிவுரையில் பயனடைவதற்காக மஸ்கெலியா, பொகவந்தலாவ மற்றும் ஹற்றன் பகுதி மாணவர்களில் ஒரு பகுதியினரை கொழும்புக்கு அழைத்து வந்திருந்தேன்.

இவ்வாறாக அழைத்து வரப்பட்டிருந்த மாணவர்களுடன் நாம் விரிவுரையில் கலந்துகொண்டு பயன் அடைந்திருந்தோம். அதே வேளை மலையக மாணவர்களின் பிரச்சினைகளில் தீர்வு காணப்படாத அவலமாக உள்ள கணித, விஞ்ஞான ஆசிரியர் பற்றாக்குறை பற்றி நாம் உரிமையுடன் அப்துல் கலாமிடம் தெரியப்படுத்த விரும்பினோம்.

அதற்காக அவர் விரிவுரைகளை முடித்துக் கொண்டு மேடையில் இருந்துவரும் போது மாணவர்களுடன் சென்று மேற்படி பிரச்சினையினை அவரின் கவனத்திற்குக் கொண்டு வந்ததுடன் மலையக மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக ஒப்பந்த ஆசிரியர்களை நியமித்தாவது இந்தியா உதவவேண்டும் எனவும் அதற்காகத் தங்களால் இயன்ற நடவடிக்கைகளை எடுக்கவும் எமது மக்கள் சார்பில் கேட்டுக் கொண்டோம்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# வீடு வீடாக டெங்குப் பரிசோதனை

மூதூர், ஜன.30

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கிண்ணியா பிரதேசத்தில் டெங்கு பரவும் இடங்களைக் கண்டறியும் நோக்குடன் வீடுவீடாகச் சென்று பரிசோதனை செய்யும் நடவடிக்கை தீவிரமாக இடம்பெற்று வருகின்றது.

கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச்.எம். றிஸ்மி தலைமையில் கிண்ணியா பிரதேச பிரிவிற்குட்பட்ட 31 கிராம சேவகர் பிரிவை உள்ளடக்கியதாக ஆறு பொதுச் சுகாதார பரிசோதகர் வலயங்களாகப் பிரிக்கப்பட்டு கடந்த 16 ஆம் திகதிமுதல் தீவிர பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்தப் பரிசோதனைக் குழுவில் பொலிஸார், படையினர், கடற்படையினர், கிண்ணியா நகரசபை, பிரதேச சபை மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் தொண்டர்களும் கலந்துகொண்டனர்.

# சிங்களவர் தாக்குதல்

## திருமலையில் அடாவடி

திருகோணமலை,ஜன.30

திருகோணமலை, விநாயகபுரம் பகுதியில் அப்பாவி தமிழ் மக்கள் மீது சிங்களவர்கள் திட்டமிட்டு நடத்திய தாக்குதல்களால் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 7 மணிக்கு 30 இற்கும் மேற்பட்ட சிங்களவர்கள் ஒன்று திரண்டு வீதிகளில் பயணித்தவர்கள், வீடுகளுள் தங்கியிருந்தவர்களென பலரையும் தாக்கியுள்ளனர்.

இதேவேளை, தாக்குதலில் ஈடுபட்ட சிங்களவர்களைத் தடுக்க முற்பட்டவேளை மகன் மற்றும் தந்தை இருவரையும் தாக்குதலில் ஈடுபட்டிருந்த அனைவரும் சுற்றி வளைத்து தாக்குதல் நடத்தியதில் இருவரும் படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

திருகோணமலை நகரின் மத்திய பேருந்து நிலையப் பகுதியில் குடியமர்ந்துள்ள சிங்கள குடியேற்றவாசிகளே தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தநிலையில், பொது மக்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியமையால் அவர்கள் சென்று அந்தக் குழுவினரை விரட்டியடித்தனர். எனினும் எவரும் இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் இதுவரை கைதுசெய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# வீட்டில் கொள்ளை

தியத்தலாவை, ஜன. 30

மஹியங்கனை பிரதேசத்தில் வீடொன்று உடைக்கப்பட்டு பணமும், நகையும் கொள்ளையிடப் பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டின் ஜன்னலை உடைத்து, உட்புகுந்த திருடர்கள் அலுமாரியை உடைத்து அங்கு வைக்கப்பட்டிருந்த ரொக்கப்பணம் 98,300 ரூபாவையும், சுமார் ஏழு லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும் திருடிச்சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. வீட்டு உரிமையாளர் வீட்டை மூடிவிட்டு அருகிலுள்ள வர்த்தக நிலையமொன்றுக்குச் சென்ற பின்னரே, இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பதுளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கித்சிறி கமகேயின் உத்தரவின்பேரில் மஹியங்கனை பொலிஸ் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. (ச)

# கூட்ட மண்டபம் இல்லாத அவலம்

**அரசியல் அதிகாரம் இன்று வரும், நாளை சென்று விடும். ஆனால், அதிகாரத்தில் இருக்கும்போது கிராமத்துக்கானதும் பாடசாலைகளுக்கானதுமான நல்ல சேவைகளைச் செய்வதற்கு முன்னிற்க வேண்டும் என்று அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் முனாஸ் குறிப்பிட்டுள்ளார்.**

அம்பாறை, ஜன.30

அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் ஒரு தேசிய பாடசாலையும், 4 மகா வித்தியாலயங்களும் அடங்கலாக 24 பாடசாலைகள் இருந்தும் கூட, எந்த ஒரு பாடசாலையிலும் ஒரு கூட்டமண்டபம் இல்லாதிருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

-இவ்வாறு அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் எஸ்.எல்.முனாஸ் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை ஆலம்குளம் றஹ் மானியா வித்தியாலயத்தில் நடைபெற்ற ஏடு தொடக்க விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

இத்தனை வளங்கள் இருந்தும், எத்தனை கல்விக் கூடங்கள் இருந்தும், மாணவர்கள் மரங்களின் கீழ் வெயில் - மழைக்கு மத்தியில் ஆராதனைக்காகவும் ஒன்று கூடல்களுக்காகவும் நிற்பதைக் கண்டு நான் வெட்கப்படுவதுடன், மிகவும் கவலையடைகிறேன்.

எத்தனை சேவைதான் செய்தாலும், கல்விக்கு உதவுவது மாபெரும் தர்மங்களில் ஒன்று. எனவே, பதவியில் உள்ளவர்கள், அரசியல் அதிகாரங்களில் உள்ளவர்கள் அட்டாளைச்சேனையின் இந்த அவல நிலையைக் கொஞ்சம் திரும்பிப் பாருங்கள்.

சிறந்த மகான்களை உருவாக்கும் கல்விக் கூடங்களுக்கு உதவிசெய்யுங்கள். இன்று 100ஆவது ஆண்டைக் கடந்திருக்கும் அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையின் நிலைமையை நினைக்கும்போது மிகவும் கவலையாக உள்ளது. ஒரு ஒழுங்கான கட்டடம் கூட இல்லை.

இதற்கான காரணம் என்ன? இதனை எவரிடம் சொல்வது? எனவே, அரசியல் அதிகாரம் இன்று வரும், நாளை சென்று விடும். ஆனால், அதிகாரத்தில் இருக்கும் போது கிராமத்துக்கானதும் பாடசாலைகளுக்கானதுமான நல்ல சேவைகளை செய்வதற்கு முன்னிற்க வேண்டும் - என்றார். (ச)



கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை ஊழியர் தாக்கப்பட்டதைக் கண்டித்து நேற்று முன்தினம் சனிக்கிழமை வைத்தியசாலை ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# அநீதிக்கு எதிரான போராட்டம் அடுத்த வாரம் ஆரம்பம்

**நாட்டில் இன்று நீதி இல்லை. பல்கலைக்கழகங்களில் போராட்டம் நடக்கின்றது. அரசை பாதுகாப்பதற்காக மாணவர்களை பலியிடுகின்றனர் என்று ரணில்விக்கிரமசிங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.**

கொழும்பு,ஜன.30

அநீதிக்கு எதிரான மக்கள் போராட்டத்தை அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்கப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கண்டி, ரிவடேல் ஹோட்டலில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை ஐக்கிய தேசிய கட்சியின் பிரதிநிதிகளுடனான சந்திப்பொன்று நடைபெற்றது. இந்தநிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் இன்று நீதி இல்லை. பல்கலைக்கழகங்களில் போராட்டம் நடக்கின்றது. அரசை பாதுகாப்பதற்காக மாணவர்களை பலியிடுகின்றனர். துணைவேந்தர்களை பாதுகாப்பதற்காக பல்கலைக்கழகங்களை பலியிடுகின்றனர். முக்கிய பரீட்சையான உயர்தர பரீட்சையின்போது மாணவர்களை சிக்கலில் மாட்டிவிட்டுள்ளனர். நாட்டின் பரீட்சை முறை பற்றி மக்களின் நம்பிக்கையை அரசு இழந்துள்ளது.

நாட்டில் நீதி இல்லாமல் போயுள்ளது. மீண்டும் நீதியையும் சட்டத்தையும் நிலைநாட்டுவது ஐக்கிய தேசியக் கட்சியின் கடமையாகும். இதற்கான ஒரு திட்டத்தை நாம் அடுத்தவாரம் ஆரம்பிக்கவுள்ளோம். 'அநீதிக்கு எதிரான மக்கள் போராட்டம்' என்ற பெயரில் அடுத்த வாரம் முதல் கொழும்பில் ஆர்ப்பாட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம். இதற்கு பொது மக்களை அழைக்கவில்லை. நாடாளுமன்ற அங்கத்தவர்களையும் அமைப்பாளர்களையும் மாத்திரமே அழைக்கவுள்ளோம்.

இதனைத் தொடர்ந்து மாவட்ட ரீதியிலும் தேர்தல் தொகுதி ரீதியிலும் ஆர்ப்பாட்டங்களை நடத்த திட்டமிட்டுள்ளோம்- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலைக்கு ஆள்கள் தேவை** யாழ் நகரில் இயங்கும் றொலேக்ஸ் பேக்கரிக்கு பேக்கரி வேலை தெரிந்த வேலையாள்கள் தேவை.
தொடர்புக்கு: 0212229402

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



29.01.2012 (ஞாயிறு) அன்று யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலைமாணி (BA) பட்டம் பெற்ற.

**பத்மநாதன் சசிகுமார்**

( கிளி- வலைப்பாடு றோ.க.த.க பாடசாலை அவர்களை மனமார வாழ்த்துவதுடன் மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.
அம்மா, அப்பா, அத்தான், அக்கா, சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள்,
ஏழாலை கிழக்கு,
ஏழாலை, (13905) (6-7-8)

# போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்திய மதில் இடிப்பு

சுன்னாகம் பிரதேச சபைக்கு உட்பட்ட புன்னாலைக்கட்டுவன் தெற்கில் வீடொன்றின் மதில் பொது மக்களுக்குப் போக்குவரத்துக்கு இடைஞ்சலான முறையில் கட்டப்பட்ட மதில் சுவர் பிரதேச சபையால் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் இடிக்கப்பட்டுள்ளது.

புன்னாலைக்கட்டுவன் தெற்கில் உள்ள செல்லப்பா மணியகாரன் வீதியில் அமைந் துள்ள தனியாருக்குச் சொந்தமான மதிலே உரிய முறையில் கட்டப்படாமையால் இடிக்கப்பட்டுள்ளது.

நெல்சிப் திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட வீதியை அகலிப்பதற்கு வசதியாக இந்த மதிலை அகற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. ஏற்கனவே குறிப்பிட்ட வீட்டின் உரிமையாளர்களுக்குப் பிரதேச சபையால் அங்கீகரிக்கப்பட்டவரைபட அனுமதிக்கு அமைவாக மதிலைக்கட்டும் படி அறிவுறுத்தப் பட்டுள்ளது. மதில் கட்டும் வேலையில் உரிய அறிவித்தலைப் பின்பற்றாது கட்டியதால் அது அகற்றப்பட்டது.

இலங்கையில் உள்ள ஒரே ஒரு தலைமுடியியல் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சிமையம் இதுவே

V Care

**DR.HAIR**
TRICHOLOGY CENTRE
Hair and Scalp Clinic



தலைமுடி உதிர்தல். ஆண்.பெண் வழுக்கை. பொடுகு. இளநரை. புளுவெட்டு. Psoriasis போன்ற பிரச்சினைகளுக்கு இலங்கை. இந்திய மருத்துவர்களின் நேரடி கண்காணிப்பில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

தலைமுடி உதிர்வதை எண்ணி கவலையா..? கவலையை விட்டுத்தள்ளுங்கள்!

எதிர்வரும் 4,5,6 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது.
வவுனியா- 12,13ஆகிய திகதிகளில். முன் பதிவுகளுக்கு 077-5426692

V care Colombo - No.190, George R.De Silva Mawatha colombo 13.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288.

## ஞானச்சுடர் வெளியீடு

வடமராட்சி, ஜன.30

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த ஆன்மீக சஞ்சிகையின் 'ஞானச்சுடர்' தைமாத 15 ஆவது ஆண்டு நிறைவு மலர் வெளியீட்டு விழா எதிர்வரும் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

பேரவை உறுப்பினர் எஸ். அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஸ்ரீதுர்க்காதேவி ஆலய தலைவர் செஞ்.சொற்செல்வர் ஆறு.திருமுருகன் வெளியீட்டுரையையும், வல்வெட்டித்துறை சிவ குரு வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் மதிப்பீட்டுரை யையும் நிகழ்த்துவர்.

(வ-236)

**வீடு வாடகைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா பாடசாலைக்கருகாமையில் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0770530566, 0779839245

**கார் வாடகைக்கு**
VIP கார் (வெள்ளை நிறம்) திருமணம் மற்றும் விசேட சேவைக்கு
தொடர்பு: 0217903634

**மணமகன் தேவை**
இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த சைவ போசனம் அருந்தும் 42 வயது ஆசிரியைக்கு தகுந்த ஒருவரை தாயார் தேடுகின்றார். உத்தியோகம் விரும்பத் தக்கது. தாரமிழந்த, வன்னியில் மனை வியை இழந்த உத்தியோகஸ்தரும் விண்ணப்பிக்கலாம்.
பே/ப
விளம்பர இலக்கம் 4217
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**அறை வாடகைக்கு**
கொக்குவிலில் நல்ல சுற்றாடலில் அமைந்த வீட்டில் அறை ஒன்று வாடகைக்கு உண்டு. உத்தியோகம் பார்க்கும் பெண்கள் விரும்பத்தக்கது. பிற்பகல் 3 மணிக்கு பிறகு தொடர்புகொள்ளவும்.
தொடர்பு: 0774030493

**தேவை**
யாழ் நகரில் இயங்கும் பிரபல்யமான ஹோட்டல் ஒன்றிற்கு அனுபவம் வாய்ந்த காசாளர் தேவை வயது எல்லை 40 வயதுக்கு மேற்பட்டவர் (2 மைல் எல்லைக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.)
தொடர்பு: 0716357267

**பணியாளர் தேவை**
யாழ்நகரில் இயங்கிவரும் பிரபலமான கெஸ்றகவுஸ் (Guest House) ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை.
தொடர்புகளுக்கு:
0773152531, 0212228989

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை அமிர்தலிங்கம்



காரைநகர் இலந்தைச்சாலையை பிறப்பிடமாகவும் காரைநகர் மணற்காட்டை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை அமிர்தலிங்கம் (இளைப்பாறிய வைத்திய அதிகாரி) 27.1.2012 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான நாகநாதர் வேலுப்பிள்ளை இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - இலட்சுமிபிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் இராசேஸ்வரியின் அன்புக் கணவரும் கௌரீஸ்வரி,கேதீஸ்வரி, சித்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும் நாகேஸ்வரியின் சிறிய தந்தையும் நடராசா, சிவானந்தா, கிருபைராசா ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ் சென்றவர்களான தர்மலிங்கம், பார்வதி மற்றும் சிவபாக்கியம், தேவமங்கை , அன்னலெட்சுமி , கருணைலிங்கம், திலகவதி, சிவமணி , சபாலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ் சென்றவர்களான சேனாதிராசா,சிவானந்தராசா பாலச்சந்திரன் மற்றும் சிவஞானவதி, மனோகரன், அருட்பிரகாசம், கோபாலபிள்ளை , பரமேஸ்வரி, ஈஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் காலஞ்சென்ற அருளானந்தத்தின் மைத்துனரும் , சித்திரஞ்சன், சிந்துராகினி, அபிராமி, அருண்குமார் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2012) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் காலை 8.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றரார் உறவினர்கள் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.
மணற்காடு,காரைநகர்.

## இலவச சீருடை வழங்கல்

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ்ப்பாணம், நல்லூர் கோட்டங்களுக்குள் அமைந்துள்ள பாடசாலைகளுக்கான இலவச சீருடை விநியோகம் இன்றும் கோப்பாய் கோட்டத்துக்குள் அமைந்துள்ள பாடசாலைகளுக்குரிய இலவச சீருடை விநியோகம் நாளையும் இடம் பெறும்.

இலவச சீருடை பெற வரும் போது சீருடைக்கான குறியீட்டுக்கமைய மாணவர் விவரங்களையும் அதிபர் பதவி முத்திரையையும் கொண்டுவருமாறு யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

* * *

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கான இலவச சீருடைகள் இன்றும் நாளையும் வலயக் கல்வி அலுவலகத்தில் விநியோகிக்கப்படவுள்ளன.

பாடசாலையின் அதிபர்கள் தமது பதவி இறப்பர் முத்திரையுடன் மாணவர்களின் விவரங்களைச் சமர்ப்பித்து சீருடைகளை பெற்றுக்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(வ-207)

**ஆங்கில வகுப்புகள்**
பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் புரிபவர்கள் மற்றும் மொழியை கற்க ஆர்வமுள்ள அனைவருக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. இலகுவாக பேச, வாசிக்க வெளிநாட்டில் கற்பித்த அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் கற்பித்துக் கொடுக்கப்படும்.
[தனிப்பட்ட அனுமதிகளும் வழங்கப்படும்]
NORTH LEAD
328 A, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel: 222 4459, 0772533390, Fax: 222 4460

# மரண அறிவித்தல்

## திருமதி புனிதவதி குகேந்திரன்

(இளைப்பாறிய உப தபாலதிபர்-மல்லாகம்)



மலேசியாவை பிறப்பிடமாகவும், அளவெட்டி தெற்கை வசிப்பிடமாவும் கொண்ட திருமதி புனிதவதி குகேந்திரன் 27.01.2012 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான நல்லையா- இராசம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும் காலஞ் சென்றவர்களான இராசையா - சோதிமதியம்மா தம்பதியரின் மருமகளும் குகேந்திரனின் பாசமிகு மனைவியும், காலஞ் சென்றவர்களான மகேஸ்வரி, தெய்வநாயகி, தனபாக்கியம் மற்றும் யோகராஜா, விஜய குலசேகரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ் சென்றவர்களான சிவாம்பிகை, குலேந்திரன் ஆகியோரின் மைத்துனியும், லம்போதரன், தாரணி ஆகியோரின் பாசமிகு தாயும் சுதர்சன், மாதுரி ஆகியோரின் அருமை மாமியும் வைஷ்ணவி, கல்பனா, லக்ஷ்மன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 01.02.2012 புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்மளை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

பொருமாக்கடவை,
அளவெட்டி தெற்கு, அளவெட்டி.

தகவல்
குடும்பத்தினர்

**வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**
10 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் UK 625 /= Germany 710/= France 765/=
மேலும் சகல நாடுகளுக்கும் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளது.
யாழ்பாணம், கொழும்பு ஆகிய இடங்களில் பொதிகள் உங்கள் வீட்டிற்கே வந்து ஏற்றுக்கொள்ளப்படும். (Door to Door Service)
24 மணி நேரத்தில் விநியோகிக்கும் சேவை. (TDD Service) குறிப்பு :- 25Kg - 100 Kg வரையான பொதிகளுக்கு 550/= மட்டுமே
சகல நாடுகளிற்குமான விமான பயணச்சீட்டுக்களை பெற்றுக்கொள்[illegible]
Arrul Global Express
International Courier & Cargo Service
T.P : 021 222 6113
இல.1 பிறவுன் வீதி, நாவ[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஈரானை அழிக்க தயாராகும் அமெரிக்கா

ஈரானின் அணுசக்தி திட்டங்களைத் தாக்கி அழிக்கும் திறன் கொண்ட பங்கர் பஸ்டர் வெடி குண்டு களை அமெரிக்கா தயாரித்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஈரானின் தலைநகர் டெஹ்ரான் அருகே உள்ள போர்டோ பகுதியில் பூமிக் கடியில் மிக மிக பாதுகாப்பான முறையில் அணு ஆயுதங்கள் தயாரிக்க உதவும் யுரேனியச் செறி வூட்டலில் தாம் ஈடுபட்டி ருப்பதாகவும், அதை யாராலும் தாக்க முடியாது என்றும் ஈரான் அண்மையில் அறிவித்தது.

இதையடுத்துத் ஈரா னின் மிக பாதுகாப்பான அணு சக்தி நிலையங்களைத் தாக்கும் வகையிலான சக்தி வாய்ந்த வெடி குண்டுகளைத் தயாரிக் கும் முயற்சியில்அமெரிக்கா ஈடுபட்டிருப்பதாக அமெரிக்காவில் இருந்து வெளிவரும் வால்ஸ்ட்ரீட் ஜர்னல் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஈரானின் அணுசக்தி திட்டங்களைத் தாக்கி அழிக்கும் திறன் கொண்ட பங்கர் பஸ்டர் வெடி குண்டுகளை அமெரிக்கா தயாரித்து வருகின்றது.



இந்த வெடிகுண்டு மொத்தம் 20 அடி நீளம் கொண்டது, 5300 பவுண்டு எடை கொண்ட வெடிப் பொருள்களைத் தாங்கி செல்லும் சக்தியும், பூமி யில் 200 அடி ஆழத்துக்கு ஊடுருவும் திறனும் கொண்டது. போர்டோவில் ஈரான் நிறுவியுள்ள அணுசக்தி நிலையம் பூமிக்கடியில் 212 அடி ஆழத்தில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து அந்தப் பத்திரிகையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

20 குண்டுகளைத் தயாரிக்க அமெ ரிக்கா 330 மில்லியன் டொலர் செலவழித்துள்ளது. இந்த வெடிகுண்டுகள் தயாரிக்கப்பட்டு சோதனை செய்யப்பட்ட போது ஈரானின் தற்போதைய பாதுகாப்பான அணுசக்தி நிலையங்களை தாக்கும் அளவிற்கு அவற்றின் திறன் இல்லை எனக் கண்டறியப்பட்டது.

எனவே அவற்றின் சக்தியை அதிகரித்து தயாரிப்பதற்காக கூடுதலாக 82 மில்லியன் டொலர் நிதியை அரசிடம் கோரியுள்ளது பென்டகன்.

கடந்த 2009ஆம் ஆண்டில் அமெரிக்க விமானப் படையின் பி-2 உளவு விமானத்தில் இந்த ரக குண்டு களைப் பொருத்தும் ஒப்பந்தத்தை போயிங் விமான நிறுவனம் வாங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

(வ)

# பின்லேடன் குறித்து தகவல் கொடுத்த பாக்.வைத்தியர்

வாஷிங்டன், ஜன.30

அல்குவைதா தீவிரவாதி ஒசாமா பின்லேடன் மீது தாக் குதல் நடத்த பாகிஸ்தானைச் சேர்ந்த டாக்டர் உதவியதாக அமெரிக்க ராணுவ அமைச்சர் தெரிவித்த தகவல் பரபரப்பை ஏற்படுத் தியுள்ளது.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத் . அருகே உள்ளது அபோட்டாபாத். அங்கு ராணுவ பயிற்சி கல்லூரிக்கு மிக அருகில் உள்ள கட்டடத்தில் வசித்த அல்குவைதா தீவிரவாதத் தலைவன் ஒசாமா பின்லேடனை அமெரிக்க படைகள் திடீர் தாக்குதல் நடத்தி சுட்டுக்கொன்றன.

பாகிஸ்தான் அரசுக்கு தகவல் அளிக்காமல் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் இருதரப்பு உறவில் பிரச்சினை ஏற்படுத்தியது. பின்லேடன் அங்கு வசித்து வந்த விடயம் அமெரிக்காவுக்கு எப்படித் தெரிந்தது என்பது மர்மமாக இருந்தது. தீவிரவாதிகள் பற்றிய தகவலை அடிக்கடி பின்லேடனுக்கு தெரிவித்து திரும்பும் மெசஞ்சர் மூலம் அமெரிக்கா கண்டு பிடித்ததாக கூறப்பட்டது. ஆனால், பாகிஸ்தான் டாக்டர் ஒருவர் அளித்த தகவல் தான் பின்லேடன் முடிவுக்கு காரணமானது' இப்போது தெரிய வந்துள்ளது. அமெரிக்க ராணுவ அமைச் சர் லியோன் பெனட்டா சி.பி. எஸ். செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது:



தீவிரவாதிகள் பற்றிய தகவலை அடிக்கடி பின் லேடனுக்கு தெரிவித்து திரும்பும்மெசஞ் சர் மூலம் அமெரிக்கா கண்டு பிடித்தது.

பாகிஸ்தானில் உள்ள அமெரிக்க உளவு அமைப் பான சி.ஐ.ஏ. அதிகாரிகளுக்கு தடுப்பூசி போடும் பணியில் இருந்த டாக்டர் ஷகீல் அப்ரிடி அளித்த தகவல்தான் பின் லேடனின் இருப்பிடத் தைக் கண்டுபிடிக்க உதவியது. -என்றார். (வ)

# பிரிட்டன் பத்திரிகையாளர் நான்கு பேர் கைது



தொலைபேசியின் தகவல்களை ஒட்டு கேட்க பொலிஸ் அதிகாரிகளுக்கு இவர்கள் லஞ்சம் கொடுத்தனராம்

பிரிட்டனில் தொலைபேசி ஒட்பு கேட்பு விவகாரத்தின் கீழ் லண்டன் 'நியூஸ் இன்டர்நேஷனல்' பத்திரிகையின் பத்திரிகையாளர் நான்கு பேரை பொலிஸார் நேற்றுக் கைது செய்தனர்.

தொலைபேசியின் தகவல்களை ஒட்டு கேட்க பொலிஸ் அதிகாரிகளுக்கு இவர்கள் லஞ்சம் கொடுத்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக ஏற்கனவே கைது செய்யப்பட்ட நியூஸ் இன்டர்நேஷனல் தலைவர் ரெபெக்கா புரூக்ஸ் பிணையில் விடுவிக்கப் பட்டார்.

பிரிட்டன் மட்டுமின்றி உலக நாடுகளில் மிகவும் பரபரப்பை ஏற்படுத்தி வரும் ரூபர்ட் முர்டோக்கின் மூடப் பட்ட 'நியூஸ் ஆப் த வேர்ல்டு' பத்திரிகையின் தொலைபேசி ஒட்டு கேட்பு விவகாரத்தால் பலர் பதவிகளை இழந்து வருகின்றனர்.

இந்தப் பத்திரிகையில் பணியாற்றி வந்த முன்னாள் ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள் மற்றும் நியூஸ் இன்டர்நேஷனல் தலைவர் ரெபெக்கா புரூக்ஸ் என்று இதுவரை 10 பேர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குற்றச்சாட்டின் கீழ் லண்டன் மாநகர பொலிஸ் ஆணையாளர் பால் ஸ்டீபன்சன் பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

ராஜினாமாவுக்கான காரணத்தில், நியூஸ் இன்டர்நேஷனல் மூத்த அதிகாரிகளுடன் மாநகர பொலிஸாருக்குத் தொடர்பு இருப்பதாக எழுந்த யூகம் மற்றும் குற்றச்சாட்டின் கீழ் பதவியை ராஜினாமா செய்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.(வ)



ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடந்த பத்திரிகையாளர்கள் கூட்டத்தில், அந்த நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் கொய்சிரோ கெம்பா மற்றும் ரஷ்யா வெளியுறவுத்துறை அமைச்சர் செர்ஜி லவ்ரோவ் கலந்து கொண்டு பேசினர்.

# நியூசிலாந்தில் கடும் நில நடுக்கம்

நியூசிலாந்து நாட்டில் நேற்று அதிகாலை கடும் நிலநடுக்கம் ஏற்பட்டது. அத்துடன் கடல் அலைகளும் வேகமாக எழுந்தன.

இதன் தொடர்ச்சியாக நேற்று அதிகாலை நியூசிலாந்து நாட்டில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கம் நியூசிலாந்து நாட்டின் கடல் பகுதியில் உருவான தாகவும், ரிக்டர் அளவில் 6.2 ஆகவும் பதிவாகி இருந்தது.

இதன் காரணமாக கடல் அலைகள் வேகமாக எழுந்தா லும், சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படவில்லை.

# ஆப்கானிலுள்ள பிரெஞ்சுப்படை 2013 இற்குள் வெளியேறும்

## பிரெஞ் அதிபர் தெரிவிப்பு



ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ள பிரெஞ்சுப் படைகள் அடுத்தவ ருடத்துக்குள் முழுமையாக வெளியேறி விடும் என்று பிரான்ஸ் அதிபர் நிக்கோலஸ் சர்கோஸி தெரிவித்தார்.

முன்னதாக 2014 ஆம் ஆண்டுக்குள் வெளியேறவே பிரெஞ்சு அரசு திட்டமிட்டிருந்தது. ஆனால் கடந்த வாரம் ஆப்கான் வீரர் ஒருவரால் 4 பிரெஞ்சு வீரர்கள் சுட்டுக் கொல்லப் பட்டதையடுத்து, படை களைத் திரும்பப்பெற பிரெஞ்சு அரசு முடிவெ டுத்துள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் 5 நாள்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஆப்கன் அதிபர் ஹமீது கர்சாய், அதிபர் நிகோலஸ் சர்கோஸியைச் சந்தித்தார். இவர்களது சந்திப்புக்குப் பின்னரே இந்த முடிவு அறிவிக்கப் பட்டது.

இது குறித்து சர்கோஸி மேலும் தெரிவித்ததாவது:

ஆப்கானின் பல்வேறு இடங்களில் உள்ள பிரெஞ்சு துருப்புகளை, அந்த நாட்டின் கிழக்குப் பகுதியான கபீஸ மாகாணத்தின் பாதுகாப்புப் பணிக்கு மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் பிரெஞ்சுப் படைகள் திட்டமிட்ட காலத்துக்குள் நாடு திரும்ப முடியும். 2012 ஆம் ஆண்டிலேயே ஆயிரம் படையினர் ஆப்கானை விட்டு வெளியேறுவார்கள். இது குறித்து ஆப்கனுடனும், பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள ஏனைய கூட்டணி நாடுகளுடனும் முறையாக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சில நூறு பிரெஞ்சு வீரர்களே ஆப்கனில் தங்கியிருப்பர். இவர்கள் அந் நாட்டு படைகளுக்கு பயிற்சியளிக்கவே அங்கு இருப்பார்கள்.

எங்களைப் போலவே நேட்டோ அமைப்பும் 2013ஆம் ஆண்டுக்குள் பாதுகாப்புப் பணியை ஆப்கானிடமே ஒப்படைப்பது குறித்து பரிசீலனை செய்ய வேண்டும்.

நேட்டோ படைகள் 2013 ஆம் ஆண்டு செய்யத் திட்டமிட்டுள்ள பணிகள் அனைத்தையும் ஆப்கான் படைகள் ஏற்றுச் செயற்பட வேண்டும் என்பது குறித்து நேட்டோ அமைப்பிடம் தெரிவிப்பேன்.

வீரர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட நிகழ்வுக் குப் பின் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பயிற் சியளிக்கும் பணிகள் நேற்று முன்தினம் சனிக் கிழமை முதல் ஆரம்பமாகின.

ஆப்கான் விவகாரம் குறித்து அமெரிக்க அதிபர் ஒபாமாவிடமும் பேசவுள்ளேன் - என்றார் சர்கோஸி.

(வ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது ஊராகிய மாவிட்டபுரத்தைச் சேர்ந்தவரும் யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய அதிபருமாகிய

**சங்கரப்பிள்ளை சிவானந்தராஜா**


அவர்கள் சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்றமையை பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல உயர்வுகள் பெற மாவை முருகனை வேண்டுகின்றோம்.

சாயுடை, மாவிட்டபுரம்.

சகோதரர்கள்
திரு.இ.ஞானேஸ்வரன்,
திரு.சி.ஜெயரூபன், திரு.இ.துரைசிங்கம்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 27 * 08 * 1926



உதிர்வு 31 * 12 * 2011

**அமரர் சின்னத்தம்பி சுப்பிரமணியம்**

(ஓய்வுபெற்ற தபால் அதிபர்)

அன்புடன் எமைப் பேணி
ஆதரவு தந்து என்றும்
இன்பமாய் நாம் வாழ
ஈகங்கள் செய்த அப்பா!
உம்பதம் போற்றுகின்றோம்
உம் ஆத்மா சாந்தி பெறுவதாக

வீரபத்திரர் கோயில் வீதி,
நுணாவில் மேற்கு.

குடும்பத்தினர்.

## சமய சந்நிதிகளில்

வவுனியா, ஜன.30

வவுனியா இறம்பைக்குளம் ஸ்ரீ கருமாரி நாகபூஷணி அம்மன் ஆலயத் தில் ஆயிரத்து எட்டுச் சங்காபிஷேக நிகழ்வு இடம்பெற வுள்ளது.

இந்தச் சங்காபிஷேக நிகழ்வு அடுத்த மாதம் 11 ஆம் திகதி சனிக்கிழமை இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கான உபயத்தில் பங்கு பெற விரும்புவோர் ஆலய நிர் வாகத் தினருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட் டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

(க-421)

* * *

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் இலட்சார்ச்சனை நேற்று ஆரம்பமாகியது. எதிர்வரும் 7 ஆம் திகதி தைப்பூசத் தினத்தன்று முற்பகல் 10 மணிக்கு இலட்சார்ச்சனை பக்தர்களுக்கான உபயமாக இடம்பெறவுள்ளது.

(வ)

* * *

சுழிபுரம், ஜன.30

கீரிமலை ஸ்ரீ மகாமுத்துமாரி அம்பாள் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் அடுத்தமாதம் 6 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கடந்த கால வன்செயல்களால் 21 கால வருடங்கள் கோயில் பூசை வழிபாடு இல்லாது இருந்தமை குறிப்பிடத்தக்கது.

(வ-28)

* * *

யாழ்ப்பாணம், ஜன.30

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, மணிக்கூட்டு வீதி அரசடி விநாயகர் கோயி லில் மூன்றாவது வருடாந்தப் பெருந்திரு விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமா கியது. பத்துத் தினங்கள் தொடர்ந்து திரு விழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

கோயில் பிரதம குரு பிரம்மஸ்ரீ ச. ஸ்ரீபதிக் குருக்க ளின் அனுசரணை யுடன் கிரியாஜோதி பிரம்மஸ்ரீ சி.ஜோதீந் திரக் குருக்கள் பெருந்திருவிழாவை நடத்தி வைப்பார்.

(வ-236)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:
23.04.1960

**திருமதி**
**ரேவதி சிவஞானம்**

இறப்பு:
30.01.2008

*ஆண்டுகள் நான்கு ஆனதுவோ*
*அம்மா உன்முகம் பார்த்து*
*அன்புக்கு இலக்கணம் நீ தந்தாய்*
*ஆறுதலுக்கு வழியேதும் தெரியவில்லை*
*நாள்கள் கடந்து வருடங்கள் நிறைந்து*
*யுகங்கள் கழிந்தாலும் இவ்வுலகினிலே*
*உன் நினைவினிலே என்றும் நாம் வாழ்வோம்*
*எங்கள் அன்புத் தெய்வமே தாயே!*

*123, கண்டி வீதி*
*யாழ்ப்பாணம்*

*என்றும் நினைவில்*
அகிலன்,
லக்ஸ்மன்,டினோஜன்.

## மரண அறிவித்தல்

### *திருமதி சின்னையா நாகம்மா*



புங்குடுதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா நாகம்மா கடந்த (26.01.2012) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு-சின்னாச்சி தம் பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற முருகேசு-சின்னத்தங்கச்சி தம்பதிய ரின் அன்பு மகளும் காலஞ் சென்ற சின்னையாவின் அன்பு மனைவியும், நடேஸ் (ஜேர் மனி) காலஞ்சென்றவர்க ளான ரஞ்சினிதேவி, நந்த குமார் மற்றும் மோகனதாஸ் (சுவிஸ்), கிருபாநந்தன், விக்கி னேஸ்வரன் (பிரான்ஸ்), பிறேமினி ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2012) திங்கட்கிழமை மு.ப.10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கேரதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

5ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

தகவல்:
குடும்பத்தினர்.

## சர்வதேச இந்துமத குருபீடாதிபதி, சபரிமலை ஸ்ரீசாஸ்தாபீடாதிபதி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு (தை-கார்த்திகை ஜன்ம நக்ஷத்திரம்) சபரிமலை ஸ்ரீ ஐயப்ப சுவாமிக்கு பதினெட்டாம் படி விஷேட பூஜை



இடம் : ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்,
தம்பையா சத்திரம்- கொழும்பு- 13
காலம் : தை - 18 ஆம் நாள் 01.02.2012 புதன்கிழமை
நேரம்:- மாலை 6 மணி முதல் 8.30 மணிவரை

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி - எங்கள் குருஸ்வாமி
'சிவாகம கலாநிதி' ஆன்மீக அருள்ஜோதி'

**கலாநிதி ஸ்ரீஜயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சார்யார்**

(அகில இலங்கை சமாதான நீதிவான்- சபரிமலை குருஜீ)

அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நடைபெறும் 18 ஆம் படி விஷேட பூஜை வழிபாடுகளில் கலந்து இறையருளோடு குருவருளும் பெற்று இராப்போசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- சுபம் -

*சர்வதேச இந்துமத குருபீடம்,*
*யாழ்.மாவட்டம்- சங்கானை.*

N.S.மோகன் நாயுடு J.P.
மற்றும் ஸ்ரீ சாஸ்தாபீட தொண்டர்கள்.

சிவமயம்



சாவகச்சேரி நகர் வாரிவனேஸ்வரம்
புராதன தான்தோன்றீஸ்வரர்
வாரியப்பர் சிவன் திருக்கோயில்
அருள்மிகு அமிர்தபாஷிணி அம்பாள்
உடனுறை வாரிவனநாதசுவாமி

ஸதுர்விம்சதி பிரம்ம சூத்திர ஸப்ததச (17) குண்ட
**மஹாகும்பாபிஷேகப் பெருவிழா- 05.02.2012**

சிவன் அடியார்களே!

சாவகச்சேரி - நகர் வாரிவனேஸ்வரம் பதியில் எழுந்தருளி அருள்பாலிக்கும் அமிர்தபாஷினி தாயார் உடனுறை வாரிவனநாத சுவாமி - வாரியப்பர் சுவாமி மஹா கும்பாபிஷேகம் நிகழ்வுறும் கரவருஷம்- தைமாதம் 22 ஆம் நாள் (05.02.2012) ஞாயிற்றுக்கிழமை திருவாதிரை நன்நாளில் காலை 7.14 மணி முதல் 8.53 மணி வரையுள்ள சுப முகூர்த்தத்தில் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

| | | |
|---|---|---|
| கர்மாரம்பம் | 30.01.2012 | காலை 6 மணி |
| கணபதிஹோமம் | 31.01.2012 | காலை 9 மணி முதல் |
| லக்ஷ்மி ஹோமம் | 01.02.2012 | காலை 9 மணி முதல் |
| நவக்கிரக வழிபாடு | 02.02.2012 | காலை 9 மணி முதல் |
| யாக ஆரம்பம் | 03.02.2012 | மாலை 4.30 மணிமுதல் |

**எண்ணெய்க் காப்பு - 04.02.2012**

(காலை 9 மணிமுதல்- மாலை 5 மணிவரை)

**மஹா கும்பாபிஷேகம்**
**05.02.2012 காலை 7.14 மணிமுதல் 8.53 மணிவரை**

அனைத்து அடியார்களும் விழாக்களை தரிசித்து சிவன் அம்பாள் அருள்பெறுமாறு வேண்டுகிறோம்.

கும்பாபிஷேக விழா- பிரதிஷ்டா பிரதம குரு
பண்டிதர் கலாநிதி சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் J.P. (புன்னாலைக்கட்டுவன்)

ஆலயகுரு, ஸ்தானிககுரு,
பிரம்மஸ்ரீ க.ஜெயந்திநாத சர்மா இ.கருணாகரன் (தர்மகர்த்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் தொண்டமானுக்கு திருநள்ளாறில் கறுப்புக்கொடி



**கோயிலுக்குள் சென்று தரிசனம் முடித்து விட்டு திரும்பும்போது, விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் சுமார் 20 பேர் அமைச்சர் வருகையைக் கண்டித்து, இலங்கை ஜனாதிபதிக்கு எதிராக கோஷம் எழுப்பியவாறு கறுப்புக்கொடி காட்டினர்.**

சென்னை, ஜன.30

திருநள்ளாறு கோயிலுக்குச் சென்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமானுக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் கறுப்புக்கொடி காட்டியதால், கோயில் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு திடீர் பரபரப்பு ஏற்பட்டது.


திருநள்ளாறு ஸ்ரீ தர்பாரண்யேசுவரர் கோயிலில் நேற்று முன்தினம் பல லட்சம் பக்தர்கள் வந்து ஸ்ரீ சனீஸ்வரபகவானை தரிசனம் செய்தனர். இரவு சுமார் 9 மணியளவில் ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான் தரிசனம் செய்ய சென்றுள்ளார்.

கோயிலுக்குள் சென்று தரிசனம் முடித்துவிட்டு திரும்பும்போது, விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் சுமார் 20 பேர் அமைச்சர் வருகையைக் கண்டித்து, இலங்கை ஜனாதிபதிக்கு எதிராக கோஷம் எழுப்பியவாறு கறுப்புக்கொடி காட்டினர்.

பொலிஸார் அவர்களைத் தடுக்க முயற்சி மேற்கொண்டும் பயனில்லை. இலங்கை ஜனாதிபதிக்கு எதிராக ஆவேசமாக அவர்கள் கோஷம் எழுப்பினர்.

தமிழர்களுக்கு எதிராக நடந்து கொள்ளும் போக்கை கைவிடும்படி ஆவேசமாக பேசினர். அதே வேளையில் செந்தில் தொண்டமானை பாதுகாப்புடன் காரில் ஏற்றி அனுப்பிவைக்கும் பணியில் பொலிஸார் ஈடுபட்டனர்.

செந்தில் தொண்டமானின் வருகை குறித்து கோயில் நிர்வாகத்துக்கு முறைப் படி தெரிவிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. அமைச்சருக்கு கறுப்புக் கொடி காட்டிய பிரச்சினையால் திருநள்ளாறு கோயில் பகுதியில் திடீர் பரபரப்பு ஏற்பட்டது.




இந்தியத் தலைநகர் டில்லியில் ஆதார் அடையாள அட்டை வழங்கும் அமைப்பு சார்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் மத்திய திட்டக்குழு துணைத் தலைவர் மாண்டேக் சிங் அலுவாலியா, மத்திய நிதியமைச்சர் சிதம்பரம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## இந்தியாவிடம் வேண்கோள் விடுத்துள்ள பில்கேட்ஸ்

சர்வதேச அளவில் வல்லரசாக உருவாகி வரும் இந்தியாவிடம் மைக் ரோசாப்ட் நிறுவுநர் பில்கேட்ஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உலகின் மிகப்பெரிய பணக்காரரான மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் அதிபர் பில் கேட்ஸ் தனியார் தொலைக் காட்சி ஒன்றுக்கு பேட்டி அளித்துள்ளார்.

பேட்டியின்போது பில் கேட்ஸ் தெரிவித்ததாவது:

இந்தியா, சர்வதேச அளவில் வல்லரசு நாடாக உருவாகி வருகிறது. அதற்கான நடவடிக்கைகளிலும் அது ஈடுபட்டு வருகிறது. கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட முக்கிய அம்சங்களில் இந்தியா மேலும் முன்னேற்றம் அடைய வேண்டும். அதன்மூலமே உண்மையான வளர்ச் சியை இந்தியா அடைய முடியும்.

கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட முக்கிய அம்சங்களில் ஏற்படும் வளர்ச் சியே நாட்டை நிலையான மற்றும் நிகரற்ற முன்னேற்றத்திற்கு வழிவகுக் கும் என்று நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

இதுபோன்ற முக்கிய அம்சங்களில் சீனா சிறந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்நடவடிக் கைகள் குறித்து சீனாவிடம் இந்தியா கற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர் இந்தியாவுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். (வ)

## மணிப்பூரில் தேர்தல் வன்முறையில் 5 பேர் சாவு

மணிப்பூரில் நேற்று நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலின்போது வாக்குச் சாவடியில் நடந்த வன்முறையில் 5 பேர் உயிரிழந்தனர் என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. வாக்குப்பதிவு நடந்து கொண்டிருந்த போது சாண்டெல் மாவட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடியை ஒரு கும்பல் கைப்பற்ற முயன்றது.

அதன்போது அந்த கும்பலுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 5 பேர் உயிரிழந்தனர். துப்பாக்கிச் சூட்டில் 3 பொதுமக்களும், மத்திய ரிசர்வ் காவல் படை வீரர் ஒருவரும், வாக்குச்சாவடியைத் தாக்க வந்த கும்பலைச் சேர்ந்த ஒருவரும் உயிரிழந்தனர். மேலும் 3 பாதுகாப்புப்படை வீரர்கள் காயமடைந்துள்ளனர்.

இதேபோல திபைமுக் சட்டப் பேரவைத் தொகுதியில் அமைக்கப் பட்டிருந்த வாக்குச்சாவடியிலும் சிலர் வாக்குப்பதிவு இயந்திரத்தை சேதப்படுத்தியுள்ளனர். இந்த சம்பவங்களைத் தவிர பொதுவாக வாக்குப்பதிவு அமைதியாகவே நடைபெற்றது. (வ)

## பாட்டியின் மரணச் சடங்கில் பேரறிவாளனுக்கு அனுமதி மறுப்பு

பாட்டியின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள ராஜிவ் கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள பேரறிவாளன் விடுத்த கோரிக்கை அதிகாரிகளால் நிராகரிக்கப்பட்டுள்ளது. ராஜிவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன், வேலூர் மத்திய ஆண்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இவரது பாட்டி கிருஷ்ணவேணி (வயது 82) வேலூர் காட்பாடி காந்தி நகரில் வசித்து வந்தார். இவர், கடந்த 21 ஆம் திகதி மரணமடைந்தார். பாட்டியின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள பேரறிவாளன், சிறைத்துறை அதிகாரிகளிடம் அனுமதி கேட்டார். ஆனால் அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

இந்த நிலையில், பாட்டியின் காரியத்தில் கலந்து கொள்ள அனுமதி வழங்கும்படி பேரறிவாளன் மீண்டும் சிறைத் துறை அதிகாரிகளிடம் நேற்றுமுன்தினம் அனுமதி கேட்டபோது, அதற்கும் அனுமதி வழங்கப்படவில்லை.

இது குறித்து சிறைத் துறை அதிகாரிகள் தகவல் தெரிவித்ததாவது:-

பேரறிவாளனின் இரத்த உறவு சம்பந்தப்பட்டவர்கள் இறந்தால் மட்டும் தான் பரோலில் செல்ல அனுமதி வழங்கப்படும். அவரது பாட்டி இரத்த உறவு சம்பந்தப்பட்டவர் அல்ல என்பதால் அனுமதி வழங்கப்படவில்லை.- என்றனர்.

## கடற்கொள்ளையர் தாக்குதல்: இந்திய மீனவர்கள் 4 பேர் சாவு

வங்கக் கடலில் மீன் பிடித்துக் கொண் டிருந்த இந்திய மீனவர்கள் நால்வரை கடற்கொள்ளையர்கள் சுட்டுக் கொன்றுள்ளதுடன் 12 பேரைக் கடத்திச் சென்றுள்ளனர். நேற்று இரவு வங்கக் கடலில் இந்திய கடல் எல்லைப் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த ஒரிசா மாநில மீனவர்களே கடற்கொள்ளையரின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

வங்காளதேசத்தைச் சேர்ந்த கடற் கொள்ளையர்கள் இரு குழுவாக சிறிய கப்பல்களில் வந்து இந்திய மீனவர்களின் படகுகளை சுற்றி வளைத்து தமது நாட்டு பகுதிக்கு கடத்திச் சென்றனர்.

வங்காளதேசத்தின் கென்டுவா கடல் பகுதியில் வைத்து இந்திய மீனவர்களை சரமாரியாகச் சுட்டுக் கொன்றனர். இதில் 4 பேர் குண்டு பாய்ந்து உயிரிழந்தனர். இந்த தாக்குதலில் 8 மீனவர்கள் குண்டு காயத்துடன் உயிர் தப்பினர்.

இதேவேளை மற்றொரு படகுடன் 12 மீனவர்களையும் கடற்கொள்ளையர்கள் சுற்றி வளைத்துக் கடத்திச் சென்றனர்.

கடற்கொள்ளையர்களின் பிடியில் உள்ள அவர்கள் வங்காளதேசத்தில் கக்தீவுப் பகு தியில் சிறைவைக்கப்பட்டு இருப்பதாக அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவித்தனர். (வ)

## சிகிச்சை பலனின்றி 100 குழந்தைகள் இறப்பு

இந்தியாவில் - மேற்கு வங்க மாநிலம் மால்டா மாவட்டத்தில் இந்த மாதத்தில் சுமார் 100 பச்சிளம் குழந்தைகள் பலியாகியுள்ளன என்று சுகாதாரத்துறையின் மூத்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

மேற்கு வங்காள மாநிலம் மால்டா மாவட்டத்தில் கடந்த முதலாம் திகதி தொடக்கம் கடந்த 27 ஆம் திகதி வரை மூன்று மாதம் முதல் மூன்று வயதான குழந்தை கள் சுமார் ஆயிரத்து 600 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் சிகிச்சை பல னின்றி 100 குழந்தைகள் உயிரிழந் ததாக மாவட்ட மருத்துவ உயர் அதிகாரி தேபாஷிஸ் பட்டசார்ஜி தெரிவித்தார்.

மால்டா மாவட்டத்தில் சுகாதாரமற்ற முறையில் குழந்தைகள் பிறப்பதால் ஏற்படும் நோய் காரணமாக தினமும் குறைந்தது 3-4 குழந்தைகள் இறப்பதாக தலைமை மருத்துவ அதிகாரி ஜரியத் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் பி.சி.ராய குழந்தைகள் வைத்தியசாலையில் சுமார் 18 குழந்தைகளும், ஒக்ரோபர் மாதம் 25-28 திகதிகளில் அதே வைத்தியசாலையில் 16 குழந் தைகளும் சிகிச்சை பலனின்றி இறந்துள்ளனர். (வ)

## ரைம்ஸ் பத்திரிகை அலுவலகம் மீது தாக்குதல்



மும்பையில் இயங்கி வரும் மகாராஷ்டிரா ரைம்ஸ் பத்திரிகை அலுவலகத்தின் மீதுசிவசேனா கட்சியினர், தாக்குதல் நடத்திய சம்பவம் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சிவசேனா கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜி மானே, தேசியவாத காங்கிரஸ் கட்சியில் இன்று இணைகிறார் என்ற செய்தியில், சிவாஜி மானே பெயருக்கு பதிலாக இந்த நாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த்ராவ் அட்சூல் பெயர் இடம் பெற்றிருந்தது.

இதனையடுத்து, அட்சூலின் ஆதரவாளர்கள், நேற்று முன்தினம் பிறபகல் ஒரு மணியளவில் மகாராஷ்டிரா டைம்ஸ் நாளிதழின் அலுவலகம் இயங்கி வரும் கட்டடத்துக்குள் புகுந்து அதிரடி தாக்குதல் நடத்தினர்.

மேலும் அவர்கள் அந்தப் பத்திரிகையின் பிரதிகளை எரித்து தங்களது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலுக்கும், சிவசேனா கட்சியினருக்கும் எவ்வித தொடர்புமில்லை என்று சிவசேனா கட்சி செய்தித் தொடர்பாளரும், ராஜ்ய சபா உறுப்பினருமான சஞ்சய் ரவுட் தெரிவித்தார்.

மகாராஷ்டிரா ரைம்ஸ் பத்திரிகை, டைம்ஸ் ஒப் இந்தியா குழுமத்தின் ஒரு அங்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜெயலலிதா மீதான பிடியாணை ரத்துச் செய்தது நீதிமன்றம்



தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு, பரங்கிப் பேட்டை மஜிஸ்திரேட் பிறப்பித்த பிடியாணை உத்தரவை, கடலூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் சனிக்கிழமை ரத்து செய்தது.

அ.தி.மு.க. பொதுச் செயலராக இருந்த ஜெயலலிதா, 2001 சட்டப்பேரவைத் தேர்தலில், ஆண்டிப்பட்டி, கிருஷ்ணகிரி, புதுக்கோட்டை, புவனகிரி ஆகிய 4 தொகுதிகளில் போட்டியிட மனுதாக்கல் செய்திருந்தார்.

இது தேர்தல் விதிகளுக்கு முரணானது என்று கூறி, தேர்தல் ஆணையம் அவர் மீது 2007ஆம் ஆண்டு ஜூலை 9ஆம் திகதி தொடர்ந்த வழக்கு, பரங்கிப்பேட்டை மஜிஸ்திரேட்டு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

அவர் மீது தேர்தல் ஆணையம் வழக்குத் தொடரலாம் என்று சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது. பின்னர் ஜெயலலிதா மேல்முறையீட்டின் படி, உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு, உச்ச நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவுப் பிறப்பித்தது.

இதனால் பரங்கிப்பேட்டை நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணை, இதுவரை 38 முறை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் கடந்த ஜூன் 27ஆம் தேதி, இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது பரங்கிப் பேட்டை நீதிபதி கோமதி சக்தி ஸ்வரூப், ஜெயலலிதாவுக்கு பிடியாணை பிறப்பித்தார்.

இந்த பிடியாணைக்குத் தடை விதிக்கக்கோரி, கடலூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில், திண்டிவனம் சட்டத்தரணி சங்கரன் கடந்த 4 ஆம் திகதி மனு தாக்கல் செய்தார். இந்த மனு கடந்த 5ஆம் திகதி விசாரணைக்கு வந்தபோது பிடியாணைக்கு, மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி உத்திராபதி இடைக் காலத்தடை விதித்தார்.

இறுதி விசாரணை நேற்று முன்தினம் சனிக்கிழமை நடந்தது. பரங்கிப்பேட்டை நீதிமன்றம் பிறப்பித்த பிடியாணையை, நீதிபதி உத்திராபதி ரத்து செய்து தீர்ப்பு வழங்கினார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்கள் அடிமையானார்களா? அடிமைப்படுத்தப்பட்டார்களா



■ நித்தியா

பெண்கள் அடிமையானார்களா? அடிமைப்படுத்தப்பட்டார்களா? என்ற கேள்விக்கு கூர்ந்து நோக்கினால் பெண் எப்படி அடிமைப்படுத்தப்பட்டாள் என்னும் உண்மை புலனாகும்.

கருத்தரித்தல், கருச்சுமத்தல், பாதுகாப்பான பிள்ளை வளர்ப்புக்கான பொறுப்புடன் இருத்தல் என்கிற பெண்மையின் இயற்கை விதியே அவளை மெல்ல மெல்ல அடிமையாகியது. ஆணின் அராஜகம் அவள் மீளவே முடியாதபடி அடிமையாக்கி விட்டது. இப்போது போல் ஒரு பிள்ளை அல்லது இரண்டு பிள்ளைகளே போதும் என்பதெல்லாம் அறியாது அந்தக் காலத்தில் இடைவிடாது கருத்தரிக்கும், குழந்தையைப் பெற்றெடுக்கும் இயந்திரமாகப் பயன்படுத்தப்பட்டாள்.

அதனால் உடற்சோர்வு, மனச்சலிப்பும் கொண்டவளாக குடும்பத்துக்கு அடிமையானாள். இதனால் பெண்ணுக்குப் பெருமை சேர்த்து வந்தமையே அவளுக்கு ஆபத்தை உருவாக்கியது.

ஒரு பெண்ணுக்கு அமைந்த பொறுப்புணர்ச்சி அவளை மேலும் அடிமையாக்கியது. சிலரது சிறப்பியல்புகளே அவர்களுக்குத் தடையாகி விடுவது போன்று ஒரு பெண்ணின் இயல்பான கடமையுணர்ச்சி அவளை மேலும் அடிமையாக்கியது என்பதை எவரும் மறுக்க முடியாது.

காலப்போக்கில் பெண்கள் தங்களுக்கென்று சுயமாகச் சிந்திக்க, தேர்வு செய்ய, விருப்பு வெறுப்புக்களை சமுதாயத்தில் வெளியிட உரிமையில்லை என்ற சிந்தனையில் முடங்கிப் போய்விட்டார்கள். ஒரு குறிப்பிட்ட வட்டத்துக்குள்ளேயே வாழவும் பழகிக் கொண்டார்கள்.

வீட்டில் வளர்க்கப்படும் கிளிக்கு இறகுகளை இரண்டு முறை வெட்டினால், இறகு வளர்ந்த பின்பும் பறக்க முயல்வதில்லை. அவை பறக்கும் சக்தி தங்களிடமிருந்து பறிக்கப்பட்டு விட்டதாக முடிவு செய்கின்றன. அதன் பின் பறக்கும் முயற்சியைக் கைவிடுகின்றன. இந்தக் கூண்டுக் கிளியின் நிலைதான் வீட்டுக் கிளிகளுக்கும் ஏற்பட்டது.

# பெண் விடயத்தில் மாறாத சமுதாயம்



கற்காலத்திலிருந்து மனிதன் கணினி யுகம்வரை வளர்ந்து விட்டான். ஆனால் இன்னும் ஏனோ சீதனத்தை மறக்கவில்லை. அதேபோல் பெண்களை அடக்கும் தன்மையை, சிறுமைப்படுத்தும் குணத்தைக் கூட மறக்கவில்லை.

இவ்வளவு தூரம் வளர்ச்சியடைந்த மனிதர்கள் ஏன் இன்னும் பெண்கள் விடயத்தில் பின் தங்கியுள்ளார்கள்? முக்கியமாக ஆசிய நாட்டு ஆண்களும் எப்போதும், பெண்கள் ஏதோ ஒரு விதத்தில் தமக்கு அடங்கிப்போக வேண்டியவர்கள் என்றுதான் நினைக்கிறார்கள். அவர்கள் அந்த நினைவுகளை அந்தக் காலந்தொட்டு, பெண்கள் மனதிலும் விதைத்து அல்லது திணித்து வந்திருக்கிறார்கள். காலங்காலமாக நடைபெற்று வரும் இத் திணிப்பினால் பெண்களும், நாம் அடங்கிப் போக வேண்டியவர்கள்தான் என்ற நினைப்பிலேயே வாழ்ந்துவிட்டார்கள்.

இரண்டு வரிக் குறளிலே காவியம் படைத்த திருவள்ளுவரிலிருந்து இக்காலத் திரையுலகக் கவிஞர்கள் வரை பெண்கள் விடயத்தில் ஓர வஞ்சகமாகவே நடந்து கொண்டிருகிறார்கள். உதாரணமாக....

''புருஷன் வீட்டில் வாழப் போகும் பெண்ணே
சில புத்திமதிகள் சொல்லுகிறேன் கேள் கண்ணே...''

என்ற பாடலில், புருஷன் வீட்டுக்குப் போகப் போகும் பெண்ணுக்கு எத்தனையோ புத்திமதிகள் சொல்லப்படுகின்றன.

தான் பிறந்து வளர்ந்து வாழ்ந்த வீடு, பெற்று வளர்த்த பெற்றோர், கூடப் பிறந்த சகோதரர்கள், இன்னும் எத்தனையோ அவள் ஆசை ஆசையாக வளர்த்த ஆட்டுக்குட்டி, பூனைக்குட்டி, நாய்க்குட்டி, மரம் செடிகள்... என்று எல்லாவற்றையும் விட்டு, புருஷன் என்றொருவனை நம்பி அவன் வீட்டுக்குப் போகிறாள். 'அவளின் வேதனைகளைப் புரிந்து அவளை அனுசரித்து வாழ்' என்று ஏன் கணவன்மார்களுக்கு ஒரு பாட்டு எழுதப்படவில்லை? ஏன் இந்த வஞ்சனை? அதுமட்டுமன்றி பழகத் தெரிய வேண்டும் பெண்ணே... என்ற பாடலும் கூட ஒரு பெண்ணுக்குத்தான். ஏன் ஓர் ஆணுக்குப் பழகத் தெரிய வேண்டிய அவசியமில்லையா?

இன்னும் இப்படி எத்தனையோ பாடல்கள், பெண்கள் இப்படி இப்படித்தான் வாழ வேண்டுமென்று சொல்கின்றன. அப்படியென்றால் ஆண்கள் எப்படியும் வாழலாமோ? மானே, தேனே, கனியே, கற்கண்டே என்று பெண்களை வர்ணிக்கும் அதே கவியுள்ளங்கள்தான் பெண்களை அடங்கிப் போகும்படியும் கவி புனைந்துள்ளன. இந்த வஞ்சகங்கள் புரியாமலே பெண்கள் வாழ்ந்து விட்டதுதான் மிகமிக வருத்தமான விடயம்.

- சந்தியா



## காத்திரு பெண்ணே

பெண்ணே நீ கண்ட கனவுகள்
கலைந்ததை எண்ணி கலங்காதே
காலம் உனக்காய் கனிந்து வரும்

ஓராயிரம் எண்ணம் தனை
உன்னகத்தே வைத்து
உளமார மகிழ்ந்த உன்
எண்ணச் சிறகுகள் ஒடிந்தனவோ!
பெண்மை என்ற மென்மை
உன்னில் புரியாத புதிராய்
விதி என்ற பேரில்
விளையாடி விட்டதோ!

வெறுமை என்று வேதனைப்படாதே
வேண்டாம் என வாழ்வை விலக்காதே
புதிய உதயம் ஒருநாள்
உனக்காய் பிறக்கும் காத்திரு.

# இது கதையல்ல 11

- யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

''அப்ப நீ வாசலுக்கு வந்த உடனை றோட்டிலை நடந்த தாலை செருப்பிலை அழுக்கிருக்கும், அதைக் கழட்ட வேணும், காலையும் கழுவ வேணும் என்று யோசிச்சு அதை வாசலிலை விடுவாய்.''

'' என்னம்மா நீங்கள் அப்பிடியே யோசிச்சுச் செய்யிற னீங்கள்? அப்பிடி ஒருதரமும் செய்யிறேல்லை. மனம் ஏதோ யோசிச்சுக்கொண்டிருக்கும் இதெல்லாம் தன்ர பாட்டுக்கு நடக்கும்.''

''ஒருத்தரும் செய்யிறேல்லை என்று சொல்லாதை, நீ சின்னப்பிள்ளையாயிருக்கேக்கை அப்பிடியே செருப்போடை உள்ளுக்கு ஓடுவாய், நாங்கள் அப்பிடிச் செய்யக்கூடாதென்று சொல்லிச் சொல்லி செய்விச்சம். பிறகு நீயே அப்பிடிப் போகக் கூடாதென்று நினைச்சு நினைச்சு கொஞ்சக்காலம் அதைச் செய்தாய், பிறகு நாங்களும் செல்லுறேல்லை நீயும் நினைச்சுப் பார்த்துச் செய்யிறேல்லை. இப்ப நான் சொல்லுறன் செருப்போடை அல்லது கால் கழுவாமல் வீட்டுக்குள்ளை நடந்து பார்.

'' ஐயோ கால்கூசும் போய்க் கால் கழுவிச் சொல்லும் விஜிதா இடை மறித்துக் கூறினாள்.

நீ போட்டு வந்த செருப்போடை உள்ளுக்கும் நடந்து பழகிட்டால் காலும் கூசாது. வருத்தத்தைப் பற்றியும் யோசனை வராது. சுவாமி அறை, சமயலறை எல்லா இடமும் போய் வருவாய். இது மாதிரித்தான் அதுவும் மனதைப் புண்படுத்த வேண்டும் வீட்டுக்குள்ள இருக்க வேணும் என்று இல்ல இருக்கிறவைக்கு உணர்ச்சிகள் செத்துவிடுமெண்டில்லை. பாரதி பாடின நிமிர்ந்த நன்னடையைப் பிள்ளை களின்ரை மனங்கள் பழக வேணும், ஒருத்தர் குளிச்சுக் கொண்டு நிண்டால் கண் தானாய் வேறு பக்கம் திரும்ப வேணும்.

'' செருப்போடை வீட்டுக்குள்ளை நடந்தால் வருத்தம் வரும்தானே? விஜிதாவின் கேள்வி ஊடாக என் மனதில் பதிந்திருந்த பல பச்சிளம் பிஞ்சுகளின் கதறல்கள் மனக் கண்முன் வந்து நிற்கின்றன.

செய்தி ஊடகங்கள் நாளும் பொழுதும் யார் யாராலோ கொல்லப்பட்ட சிறார்கள் பற்றி செய்திகள் தந்து மனத்தை ரணமாக்கிக் கொண்டிருந்த காலம் போய், பெற்றவளே கொல்வதும் கைவிடுவதுமாக, பிறந்ததும் கதறும் நிலைக்கு பிஞ்சுக் குழந்தைகள் தள்ளப்படும் செய்திகள் அவற்றில் அதிகரித்து வரும் காலம் வந்தது யார் செய்த பாவமோ?

வீதியில் போட்டு நடந்த செருப்புடன் வீட்டுக்குள் உலாவினால் நோய்வரும். அது நிச்சயம். அதைத் தவிர்க்காமல் உலாவுவது ஏன்? எந்தப் பாவமுமறியாத பிஞ்சுக் குழந்தைகள் இப்படியாவதன் காரணங்களாகப் பல கூறப்படுகின்றன. அந்தப் பிள்ளை வருங்காலத்தில் கஷ்டப்படாமலிருப்பதற்காகத்தான் இப்படிச் செய்கிறார்கள் என்று ஓர் ஒருமித்த முடிவு கூறப்படுகிறது. இந்தக் காலத்தில் மனிதாபிமானம் கொலைக்குக் காரணமாகக் கூறப்படுவது வழமையாகிவிட்டது. இதுவும் அப்படி ஒரு மனிதாபிகரமான செயல் என்கிறார்கள். மனிதாபிமானத்தையும், கருணையையும் கொலையுடன் தொடர்புபடுத்த என் மனம் ஒப்பவில்லை. ஓர் உயிரைக் கொல்ல ஒருவருக்கு எந்த உரிமையுமில்லை. நாம் ஒரு குழந்தையை மட்டுமல்ல, தாய்மையையும் சேர்த்துக் கொல்கிறோம்.

*(எனது சிந்தனை நீண்டது)*



திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
''திலகம்'',
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘கோப்’ குழு அறிக்கையை கண்டிப்பாக அமுல்படுத்த ஜனாதிபதி உறுதி

## உயர் அதிகாரிகள் பலரது தலைகள் உருளக் கூடும்

தொகுப்பு: கோகுலன்

**நேற்று ‘சண்டே ரைம்ஸ்’ பத்திரிகை வெளியிட்டிருந்த அரசியல் விமர்சனக் கட்டுரையின் ஒரு பகுதி**

**எவரும் குற்றம் காணப்பட்டால் உடனடியாக அவர் மீது நடவடிக்கை எடுத்தாக வேண்டும் என்று கூறிய ஜனாதிபதி சம்பந்தப்பட்டவர்கள் 2005 ஆண்டு தமக்கும் அரசுக்கும் சார்பாக பணியாற்றியிருந்தாலும் ஆதரவாளர் அல்லது ஆதரவாளர் அல்லாதவரானாலும் தாம் கவலைப் படப் போவதில்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.**

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் செயற்பாட்டில் இந்த வாரம் முக்கிய கால கட்டமாக கணிக்கப்பட வேண்டியிருக்கின்றது. அதன் தலைவர் மகிந்த ராஜபக்ஷ இரண்டாம் முறை ஜனாதிபதி பதவிக் காலத்தின் இரண்டாவது ஆண்டினை ஆரம்பித்துள்ளார்.

இந்த பதவிகாலத்தில் அரசின் சாதனைகள் பற்றி அமைச்சர்களும், அதிகாரிகளும் தம் மனதுக்கிசைந்த விதத்திலும் சிலசமயம் பகிடிக்கிடமானதுமான கருத்துக்களை வெளியிட்டுள்ளார்கள். பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கடந்த வாரம் பத்திரிகையாளர் மத்தியில் பேசிய போது நாட்டின் பொருளாதார அபிவிருத்தி வருங்காலத்தில் 8.3 வீதமாகவிருக்கும் என்று எதிர்வுகூறியிருக்கிறார். இது உலகின் மிக உயர் பொருளாதார வளர்ச்சியுள்ள 4 நாடுகளில் ஒன்றாக உயர்ந்து விடும் என்றார் அமைச்சர். இது சீனாவுக்கு அடுத்த நிலையில் இருக்குமாம். சிறப்பாக பொருளாதாரத்தில் வளர்ச்சியடையும் நாடுகளில் இலங்கை இரண்டாவது இடத்தில் இருக்கும் என்று பத்திரிகையாளரிடம் கூறினார் அமைச்சர்.

பல்வேறு அபிவிருத்தி உட் கட்டுமான அபிவிருத்திப் பணிகள் மற்றும் முதலீட்டு முன்னெடுப்புத் திட்டங்களைக் கையில் வைத்துக் கொண்டிருக்கும் அமைச்சர் அடுத்த பதினொரு மாத காலத்தில் இந்தத் துறைகளில் எந்த அளவில் சாதனைகளை எட்டியுள்ளார் என்பது வெளியில் தெரியவரும்.

இதற்கு வழமைக்கு மாறான கருத்தொன்றை மீள் குடியேற்றம் மற்றும் சிறைச்சாலை அபிவிருத்திகளுக்கான அமைச்சர் சந்திரசிறி கஜதீர வெளியிட்டிருக்கிறார். நாட்டின் சிறைச்சாலைகள் அடுத்த ஆண்டிலிருந்து உல்லாசப் பயணிகளையும் சட்டத்துறை மாணவர்களையும் கவரும் இடங்களாக மாறிவிடும் என்று அவர் கூறினார்.

இந்தத் திட்டத்தை முன்னெடுப்தற்கான நடவடிக்கையொன்றை ஆரம்பித்த போது அமைச்சர் இந்தக் கருத்தை வெளியிட்டு அது பத்திரிகைகளில் வெளிவந்து சில மணித்தியாலங்களுக்குள் வெலிக்கடை சிறையில் பெரிய குழப்பம் ஒன்று ஏற்பட்டு 26 சிறைக்கைதிகளையும் 4 சிறை அதிகாரிகளையும் காயத்துக்குள்ளாக்கி விட்டது. பத்து மில்லியன் ரூபாய்களுக்கு மேலான நட்டத்தையும் ஏற்படுத்திவிட்டது.

இந்தக் கலவரத்துக்கான காரணம் உணவுப் பொதிகளில் சிம்காட்டுகள் அல்லது கஞ்சா பொட்டலங்கள் ஒளித்து வைக்கப்பட்டிருக்கின்றனவா என்பதைக் கண்டுபிடிப்பதற்காக நடத்தப்பட்ட சோதனைகளாம். சிறைச்சாலைகளில் நிலைமைகள் எவ்வாறு இருக்கின்றன என்பதையும் குழப்பகரமான நிலைமைகளை சமாளிப்பதற்கு ஏற்ற வகையில் சிறை அதிகாரிகள் இல்லை என்பதையுமே இது எடுத்து காட்டுவதாக இருக்கின்றது. சிறை அதிகாரிகள், பதவியில் இருப்பவர்கள் அல்லது ஓய்வு பெற்றவர்கள் யாரிடம் கேட்டாலும் நிலைமைகளை வருணிப்பார்கள், சிறைகளின் சுவர்களின் பின்னால் ஊழல், போதைப் பொருள் கடத்தல் மற்றும் துர்ச்செயல்கள் ஏராளம் இடம் பெறுகின்றன. சிறைக் கைதிகள் நம் கண்களுக்கு ஒரே மாதிரியானவர்களாகவே தென்படுவர். ஆனால் பணம், வசதி படைத்த மனிதர்களாக சிறைச்சாலை அவர்களை அங்கே ஆக்கிவிடுகின்றது. வெளிநாட்டில் சிறைத் தண்டனைகளை அனுபவித்தவர்களான உல்லாசப் பயணிகளுக்கு வேண்டுமானால், சிறை நிலைமைகள் காட்சியாக இருக்கலாம். மற்றவர்களுக்கு வயிறு குமட்டிக் கொண்டு வரும் - அடுத்த விமானத்திலேயே தம் நாட்டுக்குப் புறப்படத் தயாராகிவிடுவார்கள்.

கடந்த புதன் கிழமை கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் ஊடகங்களைச் சேர்ந்த தொழிலாளர்களும், பத்திரிகையாளர்களும் அமைதியான முறையில் எதிர்ப்பார்ப்பாட்டம் ஒன்றை நடத்த முயன்ற போது வித்தியாசமான தொரு பிரதிபலிப்பினை அவர்கள் எதிர்கொள்ள நேர்ந்தது. பொலிஸார் நீதி மன்றக் கட்டளையொன்றைப் பெறத் தவறிவிட்ட போதிலும் வீதியில் வாகனப் போக்குவரத்து சிதைவுறாமல் பார்த்துக் கொள்ளும்படியாக நீதிவானின் பணிப்புரையொன்றை பெற்றுக் கொண்டிருந்தனர். எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கு அவர் அனுமதி வழங்கியிருந்தார். இருந்த போதும் அரசுக்கு சார்பானவர்களைக் கொண்ட சுமார் 1500 பேர் கொண்ட கும்பல் ஒன்று அங்கே குழுமியிருந்தது. பலரிடம் தடிகளும் பொல்லுகளும் காணப்பட்டன. மோதல் எதுவும் நடக்காமல் தடுப்பதற்காக ஆர்ப்பாட்டத்தை லிப்டன்ஸ் சதுக்கத்துக்கு மாற்றிக் கொண்டார்கள் ஏற்பாட்டாளர்கள். ஆர்ப்பாட்டம் அங்கே அமைதியாக நடைபெற்றது. அப்படி இருந்தும் அவர்களை ஆயுதம் ஏந்திய பொலிஸார் துப்பாக்கிகள், புகைக்குண்டுகள் சகிதம் ஒரு தேவாலயத்திக்குப் பின்னால் இருந்து கண்காணித்துக் கொண்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்தில் அரச சார்புக் கும்பல்கள் நிறைந்து காணப்பட்டதாலும், வேறு இடத்துக்கு மாற்றப்பட்டதாலும் உலக ஊடகங்களில் இந்த ஆர்ப்பாட்டத்துக்கு அதிக பிரசாரம் கிடைத்தது. பொதுவில் ஊடகவியலாளர்கள் மீது ஜனவரி மாதத்திலேயே தாக்குதல் நடத்தப்பட்டு வந்திருப்பதால் அந்த ஆர்ப்பாட்டத்துக்கு கறுப்பு ஜனவரி என்று பெயரிடப்பட்டிருந்தது. கொழும்பில் உள்ள வெளிநாட்டுத்தூதரக அலுவலர்களாலும், ஆர்ப்பாட்டம் கவனமாக அவதானிக்கப்பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசாங்கத்தை குழப்பத்தில் ஆழ்த்த முற்படுவதாகவும், அவர்கள் அரசு சார்பான ஊடகங்களால் குற்றஞ்சாட்டப்பட்டனர்.

சுதந்திர ஊடக இயக்கத்தின் அழைப்பாளரான ஞான சிறி கொட்டிகொட ஆர்ப்பாட்டம் பற்றிக் கூறிய போது: எம்மிடம் மறைவான திட்டம் ஏதுமில்லை, நாட்டில் சுதந்திர ஊடகத்துக்காகவே நாம் போராடுகிறோம் என்று கூறினார். அரசுக்கு எதிராகக் குற்றஞ் சாட்டுபவர்கள், எதிர்ப்பவர்கள் ஆர்ப்பாட்டம் செய்பவர்கள் அனைவரும் விடுதலைப்புலிகள் என்றும் வெளிநாட்டு சக்திகளின் முகவர் அல்லது பயங்கரவாதி என்றும் குற்றஞ் சாட்டப்படுவது வழக்கமாகி விட்டது என்று அவர் குறிப்பிட்டார்.

பசில் ராஜபக்ஷவின் வெளிப்பாடுகள் எல்லாம் அவரது தற்துணிபிலிருந்து வருபவை. அதேசமயம் வேறு அமைச்சர்களும், அதிகாரிகளும் இருக்கிறார்கள். அவர்கள் தமது கற்பனை உலகத்திலிருந்து பல விடயங்களை நம்பும் படி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இது வழமைக்கு மாறானது அல்ல வென்றாலும் இதில் ஒரு வித்தியாசமும் காணப்படுகின்றது. 90 வீதம் கல்வியறிவுள்ள மக்களையும் தொடர்பாடல் துறையின் புரட்சியின் மூலம் மக்கள் விழிப்படைந்திருக்கிறார்கள் என்று சொல்லிக் கொள்ளும் வேளையில் ஆகாயத்தில் மாளிகைகட்டும் வகையிலான கருத்துக்களை வெளியிடும் நபர்கள், தாம் நம்பப்படவில்லை மாறாக தம்மைப்பார்த்து மக்கள் சிரிக்கிறார்கள் என்பதை உணர்கிறார்கள் இல்லை. இதனால் நாட்டின் நம்பகத்தன்மையும், தோற்றமும் தான் இறுதியில் பாதிக்கப்படுகின்றன. இது ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு நல்ல செய்தியல்ல. எனவே இப்படியாக தமக்கும் அரசுக்கும் தர்ம சங்கடத்தை ஏற்படுத்தும் அமைச்சர்களையும் அதிகாரிகளையும் ஜனாதிபதி கடிவாளம் இட்டு கட்டுப்படுத்தியாக வேண்டியது அவசியம்.

இதைவிட முக்கியமான பெரிய பிரச்சினைகளை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அவர் எதிர்கொண்டுள்ளார். கடந்த புதன் கிழமை அரசின் பிரச்சினைகள் அனைத்தையும் அவர்களுக்குள்ளேயே தீர்த்து வைக்கப் போவதாக அமைச்சரவைக் கூட்டத்தில் துணிச்சலான அறிவித்தல் ஒன்றை விடுத்தார். இந்த அறிவித்தலை அமைச்சர்கள் அனைவரும் வரவேற்றுள்ளனர். நாடாளுமன்ற மரபுகளில் தாம் அதிக நம்பிக்கை வைத்திருப்பதாகவும், தாம் ஒரு ஜனநாயகவாதியென்றும் குறிப்பிட்ட ஜனாதிபதி பொது நிறுவனங்கள் தொடர்பான குழுவின் அறிக்கை (கோப் குழு அறிக்கை)யை அமைச்சர்கள் அனைவரையும் படித்தறியும் படியும் கேட்டுக் கொண்டார். உடனடியாக அதன் படி நடவடிக்கைகள் எடுக்கும்படியும் வலியுறுத்தினார். ஒழுங்கீனங்கள், தவறான நிர்வாகம் மற்றும் ஊழல்களுக்கு பொறுப்பானவர்கள் என்று பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களை அழைத்து கேள்வி எழுப்பும்படி அமைச்சர்களை அவர் வலியுறுத்தினார். அவ்வாறு எவரும் குற்றம் காணப்பட்டால் உடனடியாக அவர் மீது நடவடிக்கை எடுத்தாக வேண்டும் என்று கூறிய ஜனாதிபதி சம்பந்தப்பட்டவர்கள் 2005 ஆண்டு தமக்கும் அரசுக்கும் சார்பாக பணியாற்றியிருந்தாலும் ஆதரவாளர் அல்லது ஆதரவாளர் அல்லாதவரானாலும் தாம் கவலைப் படப் போவதில்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அவர்கள் விஷயத்தில் அமைச்சர்கள் கடுமையாக நடந்து கொள்ளவேண்டும் முன்னைய விஜயதாச ராஜபக்ஷ கோப் அறிக்கையின் மீது செயற்பட்டு பின்னர் பிந்திய அறிக்கை மீதும் நடவடிக்கை எடுத்திருந்தால் ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்தியதாக இருந்திருக்கும் என்று ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

பிந்திய கோப் குழு அறிக்கை விசாரணை டி.ஈ.டபிள்யு குணசேகர தலைமையில் நடைபெற்றது. அரசு தரப்பு மற்றும் எதிர்த் தரப்பு உறுப்பினர்கள் அடங்கிய 30 பேரின் குழுவுக்கு அவர் தலைமை வகித்தார்.

டிசெம்பர் முதலாம் திகதி தமது 176 பக்க அறிக்கையினை அவர் தாக்கல் செய்தார்.

சர்வதேச மட்டத்தில் ஐ.நா.மனித உரிமைப் பேரவை கூடுவதற்கு இன்னும் மூன்று வாரங்களே இருக்கும் நிலையில் அரசாங்கத்தின் மீது அழுத்தங்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன.

ஐ.நா.செயலாளர் நாயகத்தினால் இலங்கை தொடர்பாக ஆராய்வதற்கென நிறுவப்பட்ட நிபுணர் குழுவில் ஒருவராக பணியாற்றியிருந்தவரான ஸ்டீவன் ரட்னர் ஜெனிவாவில் கூட்ட மொன்றில் பேசியிருந்தார். ஐ.நா சர்வதேச மனித உரிமை சட்டம் மற்றும் மனித உரிமைகள் அக்கடமியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கூட்டம் அதிகாரபூர்வமானதல்ல பல வெளிநாட்டுத் தூதரக ராஜதந்திரிகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். அங்கிருந்து கிடைத்துள்ள தகவல்களின்படி இலங்கையின் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையை அவர் குறை கூறியிருப்பதாகத் தெரியவந்துள்ளது. கணக்கு ஒப்படைக்கும் விஷயங்களில் இலங்கை அரசாங்கம் தனது பொறுப்புக்களை நிறைவேற்றவில்லை என்பதற்கு ''நம்பகமான ஆதாரம்'' இருக்கின்றது என்று அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். இந்த நிகழ்வானது எமது ராஜதந்திர செயற்பாடுகளின் செயற்றிறமையற்ற தன்மையை மீண்டும் பறைசாற்றியுள்ளது. அந்த நிகழ்வுக்கு அழைப்பு கிடைக்காமையால் எவரும் போகவில்லையென்று கொழும்பிலுள்ள வெளியுறவு அமைச்சின் அதிகாரிகள் ஜெனிவாவிலுள்ள தமது தூதரகத்துடன் தொடர்பு கொண்டு தெரிவித்துள்ளனர். ஆனால் அழைப்பு கிடைக்காவிட்டாலும் சீனா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகள் கலந்து கொண்டுள்ளன என்று செய்தி கிடைத்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை கனேடிய வெளியுறவு அமைச்சர் ஜோன் பெயார்ட் லண்டனில் றோயல் கொமன்வெல்த் சமூத்தில் சொற்பொழிவாற்றினார். இலங்கை தொடர்பான ஒரு கேள்விக்கு அவர் பதிலளித்த போது, வெளியுறவு அமைச்சர் என்ற வகையில் நானும் எமது பிரதமரும், பல்வேறு சர்வதேச மேடைகளில் இலங்கையில் மனித உரிமை தொடர்பான பதிவுகள் மோசமடைந்து வருவது பற்றி குறிப்பிட்டு வந்துள்ளோம். மூன்று அம்சங்களில் நாம் கவலை கொண்டுள்ளோம்.

(I) 2009 ஆண்டு போரின் இறுதியில் என்ன நடந்தது என்பதை இலங்கையின் உள்நாட்டிலுள்ளவர்களும் சர்வதேச சமூகமும் திருப்திகொள்ளும் விதத்தில் கணக்குக் கூறுங்கள்

(II) சிறுபான்மை தமிழர்களுடன் உண்மையான விதத்தில் மீள் இணக்கப்பாட்டை மேற்கொள்ளுங்கள்.

(III) உண்மையில் சொல்லப் போனால் அங்கு அரசு தரப்பில் ஒரு சர்வாதிகாரப் போக்குக் காணப்படுகின்றது. அந்தப் பகுதியிலுள்ள ஒரே வித கருத்துக் கொண்ட அரசுகளுடனும் ஏனையவர்களுடனும் இலங்கையில் நிலைமைகளை எவ்வாறு மேம்படுத்தலாம் என்று கலந்துரையாடி வருகிறோம். தொடர்ந்தும் அந்த நாடுகளோடும் இலங்கை அரசோடும் பேசுவோம்- என்று கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னெடுங்கால நம்பிக்கையின் பாதுகாப்பினை தேசத்திற்கு அர்ப்பணிக்கும்



## ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் இன்று முதல் அக்கரைப்பற்றில்...




அக்கரைப்பற்றில் வாழும் மக்களின் வாழ்விற்கு முற்றுமுழுதான பாதுகாப்பையும் பராமரிப்பையும் உபசரிப்புடன் வழங்கிடும் நோக்கில், காப்புறுதித்துறையின் முன்னோடியும் பாரிய காப்புறுதி நிறுவனமுமான ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் தனது சேவையை விஸ்தரிப்பதையிட்டு பெருமை கொள்கிறது.

அதற்கமைய **2012 ஜனவரி 30ஆம் திகதியான இன்று பி.ப. 12.30 மணியான சுபவேளையில், இல.143, பிரதான வீதி, அக்கரைப்பற்றில் 2 இல்** தனது புதிய கிளையை திறந்துவைப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கின்றது. உங்கள் வாழ்க்கைக்குப் பக்கபலம் சேர்த்திடும் காப்புறுதியாளருடன் நீங்களும் இணைந்திடும்படி அதன் முகாமைத்துவத்தினரும், ஊழியர்களும் அன்புடன் அழைக்கின்றார்கள்.

TRIAD 25165

AAA RAM RATINGS

AA FitchRatings

SGS UKAS

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
தந்தையும் தாயும் போன்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவின் கடனில் தங்கியிருப்பது நாட்டுக்கு பெரும் ஆபத்தானதே

## எச்சரிக்கிறது ஐ.தே.க.

கொழும்பு,ஜன.30

இலங்கையின் கட்டுமான வேலைத்திட்டங்கள் உள்நாட்டு முதலீடுகள் இன்றி முற்றுமுழுதாக சீனாவின் கடன்களிலேயே தங்கியிருக்கின்றமை நாட்டின் அரசியலுக்கும் பொருளாதாரத்துக்கும் பெரும் பாதகமாக அமைந்துவிடும் என்று ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

பொதுக் கட்டுமான வேலைத்திட்டங்களில் கேள்வி கோரல் நடைமுறைகளோ, வெளிப்படைத் தன்மையோ இன்றி அரசு சீனாவின் கடன்களை பெற்றுச் செயற்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா பிபிசி செய்திச் சேவை சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச விமான நிலையம், ஹம்பாந்தோட்டை துறைமுகம் போன்ற வேலைத் திட்டங்கள் சீனாவின் முழுமையான கடன்கள் மூலம் மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்தார்.

உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயல் திட்டங்களின் போது அரசு, உள்நாட்டு நிறுவனங்களை ஒதுக்கிவிட்டு சீன அரசின் கட்டுப்பாட்டிலுள்ள நிறுவனங்களுக்கே கேள்விகோரல் நடைமுறையின்றி முன்னுரிமை கொடுப்பதாக அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பொதுவாக உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற நிறுவனங்கள் உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்திக்காக கடன் வழங்கும்போது, கோள்வி கோரல் நடைமுறைகள் தேவை என்ற நிபந்தனைகளை விதிக்கின்றன.

ஆனால் சீனக் கடன்கள் எவ்வித நிபந்தனைகளையும் விதிப்பதில்லை என்பது, இதனால் நாட்டின் பொருளாதாரத்துக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத் தும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச)

ஒரு கை இல்லாத சாரதி

# ஆலோசனை கோருகிறது போக்குவரத்து நீதிமன்றம்

கொழும்பு,ஜன.30

ஒரு கை இல்லாத நிலையில் பாடசாலை வான் ஒன்றை செலுத்திய சாரதி தொடர்பாக மருத்துவ சபையின் ஆலோசனையை கொழும்பு போக்குவரத்து நீதிமன்றம் நாடியுள்ளது.

கொழும்பு, மினுவாங்கொடைக்கு இடையிலான பாடசாலை வான் சேவையொன்றின் வானொன்றை ஒரு கை இல்லாது செலுத்திய குற்றச்சாட்டில் கறுவாத்தோட்ட பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டார்.

இந்த நபரை கொழும்பு போக்குவரத்து நீதிமன்றத்தில் பொலிஸார் கடந்த வியாழக்கிழமை முன்னிலைப்படுத்தியுள்ளனர்.

இந்தநபரின் சார்பில் முன்னிலையான வழக்கறிஞர், தனது கட்சிக்காரர் சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றபின் ஒரு கையை விபத்தொன்றில் இழந்ததாக தெரிவித்தார்.

இந்தச் சாரதி கை இல்லாத போதிலும் நீண்டகாலமாக விபத்துகள் எதுவும் ஏற்படாமல் வாகனத்தை செலுத்துவதாகவும் அவரை மருத்துவ சபையிடம் பரிசோதனைக்காக அனுப்புமாறும் வழக்கறிஞர் கோரியுள்ளார்.

இதனையடுத்து, இந்தச் சாரதியை பரிசோதித்து, அவரால் விபத்துகள் ஏற்படாமல் வாகனத்தை செலுத்த முடியுமா என்பது குறித்து சிபாரிசுகளை செய்யுமாறு மருத்துவ சபையை நீதிவான் ஜெயராம் ட்ரொஸ்கி உத்தரவிட்டுள்ளார். (ச)

# 24 மணி நேரத்தில் 15 வாகன விபத்து

கொழும்பு,ஜன.30

நாட்டின் பல பாகங்களில் இருந்தும் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை 6 மணி தொடக்கம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிவரையான 24 மணித்தியாலங்களுக்குள் 15 வாகன விபத்துக்கள் பதிவானதோடு, அதில் 17 உயிரிழப்புக்களும் ஏற்பட்டுள்ளன.

இந்த விபத்துக்கள் ருவன்வெல்ல, ராகம, வத்தளை, மீரிகம , நீர்கொழும்பு, கொச்சிக்கடை, எப்பாவெல, குளியாப்பிட்டி, குருநாகல், அக்குரஸ்ஸ, மாத்தறை, அஹுங்கல்ல, மஹியங்கனை மற்றும் பயாகல ஆகிய பகுதிகளில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

**இந்த வருடத்தில் 156 வாகன விபத்துக்கள் இதுவரை பதிவாகியுள்ளன.**

இதேவேளை, இந்த வருடத்தில் 156 வாகன விபத்துக்கள் இதுவரை பதிவாகியுள்ளன.

சாரதி, பாதசாரதியின் கவனமின்மை, அதிகவேகம், போதையில் வாகனம் செலுத்தல், வீதிப்போக்குவரத்து விதிகளை மீறியமை உள்ளிட்ட பல காரணங்களால் இந்த விபத்துக்கள் ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. (ச)

## சூதாட்ட குற்றச்சாட்டில் 69 பேர் கைது

கொழும்பு,ஜன.30

கொழும்பு, யூனியன் பிளேஸிலுள்ள மதுபான விடுதியொன்றில் கடந்த வெள்ளிக்கிழமை சூதாட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 69 பேரை கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

தேடுதல் நடத்துவதற்கான உத்தரவை கோட்டை நீதிவானிடம் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு பெற்றதன் பின்னர் பல்வேறு பொலிஸ் குழுக்களை ஈடுபடுத்தி இந்தத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# சுதந்திர தினத்தை முன்னிட்டு மதுபானசாலைக்கு மூடுவிழா

கொழும்பு,ஜன.30

நாடு முழுவதிலும் உள்ள மதுபான சாலைகள் எதிர்வரும் 4 ஆம் திகதி மூடப்படும் என்று கலால் திணைக்கள பிரதி ஆணையாளர் தெரிவித்தார்.

இலங்கையின் 64 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டே மதுபானசாலைகள் அனைத்தும் மூடப்படவுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

இந்த வருட சுதந்திர தினத்தை அநுராதபுரத்தில் கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஆச்சரியம் மிக்க நாட்டை கட்டி எழுப்புவோம் என்பது இந்த ஆண்டுக்கான சுதந்திர தின தொனிப் பொருள் ஆகும் என்று அவர் தெரிவித்தார். (ச)

# நீதி கிடைக்காவிட்டால் இந்தியாவில் முதலீடு

கொழும்பு

இலங்கையில் நீதி கிடைக்காவிட்டால் இந்தியாவில் முதலீட்டை மேற்கொள்ளப்போவதாக பெலவத்த சீனித்தொழிற்சாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

நட்டமடையும் நிறுவனங்களைப் பொறுப்பேற்கும் அரசின் திட்டத்தின் கீழ் பெலவத்த சீனித்தொழிற்சாலையும் பொறுப்பேற்கப்பட்டது. இந்தநிலையில் மாதம் ஒன்றுக்கு தொழிற்சாலையை பராமரிக்க 86 மில்லியன் ரூபாய்கள் செலவாவதாக பெலவத்த சீனித்தொழிற்சாலையின் தலைவர் தயா கமகே தெரிவித்தார்.

எனவே, இந்த நட்டங்களுக்காக அரசிடம் இருந்து 10 பில்லியன் நட்ட ஈட்டை எதிர்ப்பார்ப்பதாக அவர் தெரிவித்தார்.இந்த நிதி கிடைக்காத பட்சத்தில் தாம் இந்தியாவில் முதலீட்டை மேற்கொண்டு நட்டத்தை ஈடுசெய்யப் போவதாக அவர் தெரிவித்தார். (ச)

## அரசை வீழ்த்தவே மாணவர் ஒன்றியம் செயற்படுகிறது

கொழும்பு,ஜன.30

அரசை வீழ்த்தும் நோக்கில் அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் செயற்பட்டு வருவதாக உயர்கல்வி அமைச்சர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஜே.வி.பி.கிளர்ச்சிக் குழுவின் கைப்பொம்மையாகவே அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் இயங்கிவருகின்றது என்று அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

மாணவர் அமைப்புக்கள் பகிடிவதையைப் பயன்படுத்தி மாணவர்களை மூளைச் சலவை செய்வதாக அவர் தெரிவித்தார்.

அரசை வீழ்த்தும் நோக்கில் மாணவர் ஒன்றியங்கள் போராட்டங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் நடத்தி வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை,மாணவர் இயக்கங்களை ஒடுக்கும் நோக்கில் அமைச்சர் இவ்வாறு கருத்து வெளியிட்டு வருவதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளர் சஞ்சீவ பண்டார தெரிவித்தார்.

அமைச்சரின் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாணவர்கள் எதிர்நோக்கி வரும் பல்வேறு நெருக்கடிகளுக்கு தீர்வு காணும் நோக்கில் சில போராட்டங்கள் நடத்தப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்

## கிழக்கு மாகாண சபையில் தீர்மானம் நிறைவேறியது

கொழும்பு,ஜன.30


மாகாணங்களுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்ற பிரேரணை கிழக்கு மாகாண சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு, அதன் பிரதி ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாணசபையின் பேச்சாளர் தெரிவித்தார்.

அதிகாரங்கள் வழங்கப்படாவிட்டால் மாகாண சபைகளுக்கு காணி அதிகாரம் இல்லாமல் வீடுகளைப் பராமரிக்கும் பணிகளை மாத்திரமே மேற்கொள்ள முடியும் என்று அவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தின் பெரும்பாலான காணிகள், ரயில்வே, பாதுகாப்பு படை, வனத்துறை மற்றும் மஹாவலி அதிகார சபை ஆகியவற்றின் கீழ் வருகின்றன. இந்த நிலையில் உல்லாசத் திட்டங்களுக்கான காணிகள் யாவும் கிழக்கு மாகாண சபையின் அனுமதியின்றியே வழங்கப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை, நிறைவேற்றப்பட்ட யோசனையில் பொலிஸ் அதிகாரம் மாகாணத்துக்கு வழங்கப்படுவது அவசியம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# காத்தான்குடி கடலில் இராட்சத திமிங்கிலம்



மட்டக்களப்பு,ஜன.30

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பிரதேச கடற்கரையில் இராட்சத திமிங்கிலம் ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கரையொதுங்கியுள்ளது.

அதிகளவு கிலோ எடை கொண்ட சுமார் 30 அடி நீளமான இந்தத் திமிங்கிலத்தைப் பார்வையிட பிரதேச மக்கள் திரண்டுள்ளனர்.

இந்த இடத்துக்கு விரைந்த காத்தான்குடி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் லால் செனவிரத்ன திமிலங்கத்தை பார்வையிட்டார்.

இந்தத் திமிங்கிலத்தை அரச அதிபரின் அனுமதியுடன் பெக்கோ இயந்திரத்தின் உதவியுடன் கரைக்கு இழுத்து வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட கடற்றொழில் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் டொமின் கோஜோர்ஜ் தெரிவித்தார். (ச)

# பரீட்சை சித்திப்புள்ளி குறைப்புக்கு எதிர்ப்பு

கொழும்பு,ஜன.30

மருத்துவராக தொழிற்படுவதற்கான பதிவுப்பரீட்சையின் சித்திப் புள்ளிகளைக் குறைப்பது பற்றி பேச்சை நடத்துவதென்ற இலங்கை மருத்துவ சபை தலைவரின் தீர்மானத்துக்கு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இது இந்த நாட்டில் வைத்தியர்களின் தரம் குறைவதற்கு வழிவகுக்கும் என்று சங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

இவ்வாறான தீர்மானம் இலங்கை மருத்துவ சபையில் அங்கத்தவர்கள் அனைவரதும் ஏகமனதான தீர்மானமாகவே இருக்கவேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

பெற்றோர் கேட்கின்றனர் என்பதற்காக அல்லது வெளி அழுத்தங்களின் நிமித்தம் சித்திப் புள்ளிகளை குறைக்கப்படுமாயின் அது இந்த நாட்டு மக்களின் நலனுக்கு பெரும் பாதகமாக அமையும் என்று அவர் தெரிவித்தார். (ச)

## கணக்கறிக்கையை சமர்ப்பிக்க உத்தரவு

கொழும்பு,ஜன.30

அனைத்து அரசியல் கட்சிகளும் 2011ஆம் ஆண்டுக்கான வருடாந்த கணக்கறிக்கையை நாளை செவ்வாய்க்கிழமை சமர்ப்பிக்க வேண்டும் என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

தமது வருடாந்த கணக்கறிக்கையை சமர்ப்பிக்கத் தவறிய 27 அரசியல் கட்சிகளும் அந்த அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

67 அரசியல் கட்சிகள் தேர்தல்கள் செயலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்த்தமுள்ள வாழ்வு

"வாழ்க்கை எப்போது அர்த்தமுள்ளதாக ஆகிறது?"

"அன்பு உள்ள போது!"

"ஒருவர் அன்பானவர் என்பதை எப்படி உணர்ந்து கொள்ள முடியும்?" "தனக்காக மட்டுமே வாழாமல் பிறருக்காகவும் வாழ வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டவர் அன்புள்ளவர்."

"பிறருக்காக வாழ்வதுதான் அன்பு என்றால், பிறருக்காகச் சாக நேர்ந்தால் சாகலாமா? அப்படிச் சாவதும் அன்புதானா?"

பிறருக்காகச் சாக நேர்ந்தால் சாவும் ஒரு சாவல்ல.. நீடித்த வாழ்வே! தர்மம் அவர்களைச் சாகவிடாது.. நிறுத்திவிடும்"

"அப்படிச் செத்தவர்களே இல்லையா?"

பொறுமை... உயிர்ப்பிரிதல் வேறு, சாவு வேறு. பிறருக்காகச் சாக நேர்ந்தால் உயிர் பிரியலாம்.. ஆனால் அது சாவு ஆகாது. சீதையைக் காக்க சடாயு உயிர் பிரிந்தது.. ஆனால் அது சாவே அல்ல. மத ஒருமைப்பாட்டைக் காக்க காந்தியின் உயிர் பிரிந்தது.. ஆனால் அது சாவே அல்ல நீடித்த ஜீவிதம், அழிவற்ற அமரத்தன்மை!

தனக்காக வாழும் வாழ்வைக் கீதை கண்டிக்கிறது. சமைக்கிற போது கூடத் தனக்காக மட்டுமே சமைப்பது பாவம், துரோகம். பலரும் உண்ண வேண்டும் என்று சமைப்பதே யாகம்.. யோகம்.. என்கிறது கீதை!

சுயநலத்துடன் வாழும் வாழ்க்கை ஆரம்பத்தில் இனிமையாக இருக்கும். பிறகு மிகமிகக் கசக்கும். பிறர் துயர் உணர்தல், பிறர் நலம் யோசித்தல், பிறருக்கேற்பத் தான் சிறிது மாறுதல்.. விட்டுக் கொடுத்தல் இவை ஆரம்பத்தில் கஷ்டமாக இருக்கும். முடிவில் மிக மிக இனிமையாக இருக்கும். வாழ்வு அர்த்தமுள்ளதாக இருக்கும். வாழ்வில் ஈரப்பசை இருக்கும்.

அவன் ஒரு பணக்கார இளைஞன். வாழ்வின் போகங்களில் மூழ்கித் திளைத்தவன். தனது வசதிக்கு உலகத்தையே வளைத்துப் போட்டு அடிமையாக்கி அனுபவித்த இராச்சியம் அவனுடையது. தனது ஊழியர்களை அவன் அவமதித்திருக்கிறான், அடித்திருக்கிறான். தன் பொருட்டு அவர்கள் உழைக்கக் கடமைப்பட்டவர்கள் என்றே அவன் அவர்களைக் கசக்கிப் பிழிந்து இருக்கிறான்.

பெற்றோர்கள் தன்னைப் பேணக் கடமைப்பட்டவர்கள்.. கேட்கும் போதெல்லாம் பணம் கொடுக்க வேண்டியவர்கள் என்ற உரிமையில் அவன், பெற்றோர் மனதைக் காயப்படுத்தி இருக்கிறான். கண்ணீர்விடச் செய்திருக்கிறான்.

அழகான இளமையான எந்தப் பெண்ணும் தனக்கு உரியவள் என்றே அனுபவித்திருக்கிறான். எல்லாமே தனக்காக.. எதுவுமே தனக்காக என்பதே அவன் தீர்மானம். அதனால் முப்பது வயதுக்குள் அவனுக்கு வாழ்க்கை கசந்துவிட்டது.. வெறுப்பு விளைந்தது. அமைதி தேடி அங்கும் இங்கும் அலைந்தான். முடிவில் ஒரு குருவிடம் தன் துயரத்தைச் சொல்லி அழுதான். "வாழ்க்கையே வெறுப்பாக இருக்கிறது" என்று அழுதான்.

அவனது கதையைக் கேட்ட குரு தட்டிக் கொடுத்தார். "அதுசரி.. வாழ்வில் உனக்கு என்ன தெரியும்..? ஏதாவது கலை, வித்தை, திறமை தெரிந்தால் சொல்லு. நான் தெரிந்து கொள்கிறேன்" என்றார்.


"செஸ் விளையாடத் தெரியும்.. மிக நன்றாக விளையாடுவேன்" என்றான். குரு மகிழ்ச்சியுடன் தமது சீடர்களில் மிகப் பக்குவமான ஒருவரை அழைத்து அவனுடன் செஸ் விளையாடச் சொன்னார். அந்தச் சீடரின் கண்களில் கனிவு.. வார்த்தையில் பணிவு.. நெஞ்சில் துணிவு. ஒளி உமிழும் உயர்வான முகம். எல்லாம் சரி.. ஆனால் அவருக்கு செஸ் என்றால் என்ன என்றே தெரியாது. ஆனால் குரு வார்த்தையை மீறும் வழக்கம் அவருக்கு கிடையாது! குரு சொன்னதால் அந்த இளைஞனுடன் செஸ் விளையாடத் தொடங்கினார்.

அடுத்து குரு செய்த காரியம் சிக்கலானது. பளபளப்பான கூர்வாள் ஒன்றைக் கொண்டு வரச்சொல்லி நடுவில் வைத்தார். ஆட்டத்தில் யார் தோற்றார்களோ அவர்கள் வெட்டப்படுவார்கள் என்று அறிவித்தார். சீடரின் முகத்தில் எந்த மாற்றமும் இல்லை. ஆனால் இளைஞன் பயந்துவிட்டான். கவனமாக விளையாட ஆரம்பித்தான்.

சீடருக்கு செஸ் விளையாடத் தெரியாது என்பது அவனுக்கு ஆரம்பத்தில் தெரியாது. ஆனால் எச்சரிக்கையுடன் ஆடினான். நேரம் ஆக ஆகப் புரிந்துவிட்டது! சீடரின் காய்களை வெகுவாக வெட்டித் தள்ளினான். மரணத்தின் பிடியில் இருந்து தாம் தப்பிவிட்டதாகச் சந்தோஷப்பட்டான். சீடர் தானே சாகப் போகிறார் என்று வெகு தீவிரமாக ஆடினான். சீடரோ தோல்வி, மரணம் எதைப் பற்றியும் கவலைப்படாமல் நிதானமாக ஆடிக்கொண்டே இருந்தார். இளைஞனுக்கு ஆச்சரியமாக இருந்தது. எப்படி இவரால் அமைதியாக இருக்க முடிகிறது? யோசித்தான், யோசித்தான். அவருடைய ஒளி மிகும் தாமரைக் கண்களை, நிலவு முகத்தை உற்று உற்றுப் பார்த்தான்.

அவன் மனம் என்னவோ செய்தது. எவ்வளவு நல்லவர் இவர். இவர் சாவதா? நான் எவ்வளவு அயோக்கியன். நான் வாழ்ந்து என்ன பயன்? இவரல்லவா வாழ வேண்டும் என்று பொறிதட்டியது. தாறுமாறாக ஆட ஆரம்பித்தான். சீடர் வெற்றிபெறட்டும் என்று வேண்டும். என்றே தன் காய்களைப் பலி கொடுத்தான்.

பளிச்சென்று குரு எழுந்தார். செஸ் பலகையைக் கைகளால் கவிழ்த்தார். இரண்டு பேரும் தோற்கவில்லை என்றார். இளைஞனைப் பார்த்து "ஆரம்பத்தில் சாவுக்குப் பயந்து வெறியோடு விளையாடினாய். பிறகு இவர் வாழ வேண்டும் என்று சாகவும் துணிந்தாய். பிறருக்காக வாழ்வதுதான் வாழ்வின் உண்மையான அர்த்தம் என்பது உனக்குப் புரிந்துவிட்டது. ஆச்சிரமத்தில் கொஞ்சநாள் இருந்துவிட்டுப் போ" என்று ஆசி கூறினார்.



பிறருக்காக வாழும்போதுதான் வாழ்க்கை அர்த்தம் உடையதாகிறது.

சுகி. சிவம்


# கடையிற்சுவாமி வழித்தோன்றலில் வந்த சத்திரச்சந்தி ஞானவைரவர்

(சென்றவாரத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் சத்திரச்சந்தியின் இருப்பிடத்தைத் தக்க வைக்கும் முகமாக அதே இடத்தில் உள்ள சத்திரம் ஞான வைரவர் ஆலயம் திகழ்வது குறிப்பிடத்தக்கது.

கடையிற் சுவாமி யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த காலப் பகுதிகளில் உருவான இந்த ஆலயம் வெற்றிலைக் கடைப்பரமசாமி எனும் வர்த்தகர் சத்திரச் சந்தியில் உள்ள அரச மரத்தின் கீழ் இருந்த சூலத்தை வைரவராகப் பூசித்து வந்தார்.

சத்திரச்சந்தி வர்த்தகர்கள் அதிகம் இளைப்பாறும் ஓர் இடமாகத் திகழ்ந்ததால் வெற்றிலைக் கடைப் பரமசாமியின் வழிகாட்டலில் ஏனைய வர்த்தகர்களும் அந்த சூல ஞான வைரவரை வழிபாடு செய்து வந்தனர்.



அத்துடன் பசுக்கள் தமது பசியைப் போக்குவதற்கு சத்திரச் சந்தியை அதிகம் நாடி வருவதால் ஆலயத்தின் முன் வாசலில் பத்து ரூபாவுக்கு புல்லுக் கட்டை பெண்கள் விற்பனை செய்து வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த ஞான வைரவர் யாழ்ப்பாண வர்த்தகர்களுக்கு மட்டுமல்லாது ஏனைய வர்த்தகர்களுக்கும் ஓர் அதிசய வைரவராகத் தோன்றியதால் வர்த்தகர்கள் ஒன்றிணைந்து வைரவ சூலத்தைச் சுற்றி ஓலைக் கொட்டிலை அமைத்து வழிபாடு செய்து வந்தனர்.

யாழ்ப்பாண நகரத்தின் வளர்ச்சி படிப்படியாக உயர ஆரம்பித்ததையடுத்து யாழ். நகர்ச் சந்தை மற்றும் கடைகள் என்பன மெருகூட்டப்பட்டன. இதன் விளைவாக யாழ். நகர்க் கடைகளின் வர்த்தகங்கள் தமது தொழிலுக்கு ஞான வைரவர் துணையாக இருப்பதை நினைத்து ஆலயத்தின் அபிவிருத்திக்குத் தேவையான நிதிப் பங்களிப்பை வழங்கினார்கள். இதனால் ஆலயம் கட்டடமாக உருப்பெற்றது.

கடையிற் சுவாமியின் வழித்தோன்றலே இந்த ஆலயம் என்பதை எதிர்காலச் சந்ததியினருக்கு ஞாபகப்படுத்தும் முகமாக, சத்திரம் ஞான வைரவர் ஆலயத்தில் வைரவர் சூலத்துக்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ள சுவரில் கடையிற் சுவாமியின் உருவப்படம் உயிர் கொடுக்கப்பட்டுள்ளது.

> யாழ்.நகருக்கு வருவோரின் காவல் தெய்வமாக இந்த ஆலயம் திகழ்வது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் பசுக்களின் இருப்பிடம் இது என்பதை உணர்த்தும் நோக்குடன் பசுக்கள் இடங்களைப் பாதுகாப்பதற்கான சகல சமயங்களின் சேவையும் ஆலயத்தில் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆலயத்தின் இன்னொரு சிறப்பம்சமாக ஒவ்வொரு பௌர்ணமி தினத்தன்றும் அன்னதான நிகழ்வு வெகு விமர்சையாகக் கொண்டாடப்படுகின்றது.

இந்துக்களின் வழிபாடுகளில் சூல வழிபாடே ஆரம்பமாக இருந்தபடியால் காணும் திசைகளில் வைரவர் ஆலயங்களே அதிகமாக இருந்தன.

வைரவர் காவல் தெய்வமாகவும், காக்கும் தெய்வமாகவும் இருந்தபடியால் இத்தகைய வழிபாடுகள் அதிகரிக்கத் தொடங்கின.

இதன் விளைவாக யாழ். நகருக்கு வருவோரின் காவல் தெய்வமாக இந்த ஆலயம் திகழ்வது குறிப்பிடத்தக்கது.

முக்கியமாக யாழ் நகர்க்கடைகளில் உரிமையாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் சத்திரம் ஞானவைரவர் ஓர் காவல் தெய்வமாக விளங்குகின்றது. நகரில் பெரும்பாலான வர்த்தகர்கள் தமது கடைகளில் வருமானம் உயர வேண்டும். தொழிலுக்குத் துணை இருக்க வேண்டும் என சத்திரம் ஞான வைரவரின் ஆலய வளர்ச்சிக்குத் தமது உதவிகளை வழங்குவதுடன் காலையில் ஆலயத்தில் வழிபாடுகளை மேற் கொண்ட பின்னரே வியாபாரத்தைத் தொடங்கி வைப்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த கடைகளில் பிரதானமாக வேணி களஞ்சியம், அபி களஞ்சியம் என்பன ஆலயத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் அன்பளிப்புச் செய்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இது ஓர் வர்த்தகப் பெருமக்களின் ஆலயமாகத் திகழ்வதால் சமய விழாக்கள் மற்றும் ஏனைய விழாக்கள் அனைத்தையும் நிறுவனங்கள், வங்கிகள், தனியார் கடைகள் போன்றன இந்த ஆலயத்தில் [illegible] வைத்துச் செய்து வருகின்றனர்.

சூலம் வர்த்தகர்களால் ஆரம்ப காலத்தில் எந்த இடத்தில் நிறுவப்பட்டதோ அந்த இடத்திலேயே இன்று வரை பூசிக்கப்பட்டு வருவதும் வைரவரின் அருளினை எடுத்துக்காட்டுகின்றது.

ஏனெனில் நகரில் ஏற்பட்டு வரும் அபிவிருத்தி மாற்றங்கள் காரணமாக சூலத்தை இடமாற்றி வேறு இடத்தில் வைக்க வேண்டும் என பலர் கருத்துக்களை முன் வைத்தாலும் அவர்களின் மனதை மாற்றம் அடையச் செய்து ஆலயத்தை இன்னும் அழகுபடுத்த வேண்டும் எனும் சிந்தனையே அவர்கள் மனதில் குடிகொண்டு வருகின்றது.

இந்த ஆலயத்தில் வருடா வருடம் மாட்டுப் பொங்கல் வெகு விமர்சனையாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. அத்துடன் அன்றைய தினம் ஈழத்துச் சித்தர்களின் நூல் வெளியீடும், நிகழ்வில் கலந்து கொள்ளும் பக்தர்களுக்கு இந்துக்களின் பாரம்பரியமான பழக்க வழக்கங்களை எடுத்துக் காட்டும் நோக்குடன் பசும் பால், பாற்சோறு என்பன வழங்கப்படுகின்றன.

இந்த வருடம் நகரைக் களை கட்ட வைத்தது இந்த ஆலயத்தால் நடத்தப்பட்ட மாட்டுப்பொங்கல் கோமாதா உற்சவம். நகரின் மத்தியில் இந்த ஆலயம் அமைந்திருப்பதால் வித்தியாசமான முறையில் பண்பாடுகளை இலக்கு வைத்து இவ்வாறு நடத்தப்படும் விழாக்களிலினாலே ஆலயம் மேலும் பிரசித்தி அடைந்து வருகின்றது.

ஆலயத்தின் வளர்ச்சிக்குத் தம்மை இன்னும் அர்ப்பணித்து சேவையாற்றி வருபவர்கள் ஆலய நிர்வாக சபை உறுப்பினர்களே என்பதும் மிகையாகாது.

ஆலயத்தின் நிர்வாகசபை உறுப்பினர்கள் மற்றும் சமயப் புரவர்களது முயற்சியினாலும் ஆலயம் மென்மேலும் அபிவிருத்தியடைந்து வருகின்றது.

இந்த ஆலயத்தின் இன்னொரு சிறப்பம்சமாக ஒரு நாள் கொண்ட திருவிழாவே இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அதனை விட தை மாதத்தில் மகாயாகம் எனும் சிறப்பு யாக வழிபாடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சிவராத்திரி தினத்தன்று விசேட அபிசேகப் பூசைகளும், நவராத்திரி விழாவும் ஒவ்வொரு மாதமும் பரணி நட்சத்திர வழிபாடும், பகவான்

**சோபனா**

சாயி பாபாவின் பூசை நிகழ்வுகள், கடையிற் சுவாமியின் குரு பூசை தினம் என்பன வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன.

இந்த சிறப்பு வழிபாடுகளில் நகர்க் கடைகளின் வர்த்தகர்கள் தமது அன்பளிப்புகளை வழங்கி விழா சிறந்த முறையில் இடம்பெறுவதற்கு அர்ப்பணிப்பாக சேவைகளை வழங்கி வருகின்றது.

ஒரு குடும்பத்தினர் போல் ஒன்றிணைந்து இந்த ஆலயத்தின் வளர்ச்சிக்காகச் சேவை வழங்குவதால் ஆலயத்தின் வளர்ச்சியில் எந்த விதத் தடைகளும் இல்லாமல் உயர்வடைந்து வருகின்றது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மேகக்கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

## ஆத்மஜோதி சஞ்சிகை கனடாவிலும் வெளியீடு

சுழிபுரம்,ஜன.30

ஆத்ம ஜோதி ஆன்மிக சஞ்சிகை இரு மாதத்துக்கு ஒருமுறை கனடாவில் தமிழ் மொழியில் 3000 பிரதிகள் இலவசமாக வெளியிடப் பட்டு வருகின்றன.


இந்த இதழைப் பெறவிரும்புவோர் ஆசிரியர் குழு 416 724 6240 தொடர்பு கொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளது. (வ-28)

# இறுதி மூச்சுவரை போராடிய காந்தி

செயற்கரிய செய்து இறவாப் புகழ் பெற்ற காந்தியடிகளின் வாழ்க்கை நமக்கெல்லாம் வழி காட்டியாகத் திகழ்கிறது. 'மாந்தருள் தெய்வம்' என்று சான்றோர்களால் போற்றப் படும் கரம்சந்த் காந்தி 1869 ஆம் ஆண்டு ஒக்டோபர் 2 ஆம் நாள் குஜராத் மா நிலத்தில் கத்தியவாரிலுள்ள போர்பந்த என்னுமிடத்தில் கபா காந்தி -புத்லிபாய் என்ற தம்பதிகளுக்கு கடைசிப் புத்திரனாகப் பிறந்தார். 1948 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் நாள்வரை இந்த மண்ணில் வாழ்ந்தார். ஏறத்தாழ எழுபத் தெட்டு ஆண்டுகளுக்கு மேல் இந்த வையகத்தில் வாழ்ந்து அவர் செய்த செயல்கள் மகத்தானவை.

தனிமனித வாழ்க்கையை உள்ளும் புறமும் தூய்மையாக்க முயன்று அமைத்துக்கொண்ட காந்தியடிகள் தென்னாபிரிக்காவுக்குச் சென்றார். அங்கு வழக்குரைஞராக இருந்து கொண்டே பொதுப் பணிகளில் ஈடுபட்டார். அவர் அங்கு படித்த ''கடையனுக்கும் கடைத்தோற்றம்'' என்னும் நூல் அவரிடம் உயர்ந்த சமுதாய இலட்சியத்தை உருவாக்கியது. சமுதாயத்தின் கீழ்மட்டத்தில் அல்லற் படுகின்ற ஏழை எளியவர்களுக்காக வாழ வேண்டும் என்று உறுதி பூண்ட அன்னல் தென் ஆபிரிக்காவில் வாழ்ந்த இந்தியர்களின் துயர் துடைக்க அகிம்சை வழியில் பெரும் போராட்டம் நடத்தினார். ''கத்தியின்றி இரத்தமின்றி'' நீதிக்காக போராடுகின்ற புதிய போர் முறையான சத்தியாக்கிர கத்தைத் தென்னாபிரிக்காவில் கண்டு பிடித்தார்.

1914 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பிய காந்தியடிகள் அவர்து இறுதி மூச்சுவரை இந்தியர்களின் விடுதலைக்காகவும் மேம்பாட்டுக் காகவும் இரவு பகலாக ஓய்வின்றி அரும் பாடுபட்டார். வன்முறை மேலோங்கியிருந்த அரசியலிலும் தன்நலன் ஊடுருவி நின்ற பொருளாதாரத் துறையிலும்



இன்று அவரது நினைவு தினம்

சாதி -மத வேறுபாட்டால் பிளவுபட்டுக் கிடந்த சமுதாய வாழ்விலும் ஆன்மிக நெறிமுறைகளை நுழைத்து எல்லோரும் இன்புற்று வாழத்தொண்டு செய்தார். ''இந்தியாவின் தந்தை'' என்று எல்லோராலும் போற்றப் பட்ட காந்தியடிகள் தான் பிறந்த மாநிலமான குஜாரத்திற்கோ இந்திய நாட்டுக்கோ மட்டும் அல்ல, இந்த மனித சமுதாயம் முழுமைக்கும் அவர் சொந்தக்காரர்.

கடந்த பல ஆண்டுகளுக்கு முன்பு டெல்லி, பம்பாய் போன்ற நகரங்களில் 'பிரதீப் தால்வி' என்பவர் எழுதிய ''நாதுராம் கோட்ஸே ஆகிய நான் பேசுகின்றேன்'' எனும் நாடகம் அரங்கேற்றப்பட்டதன் மூலம் இந்தித்துவ அமைப்புகள் காந்தியைக் கொலை செய்ததனை நியாயப்படுத்தி மக்களைத் திசை திருப்பவே முயற்சிக்கின்றன. உண்மையும் சத்தியத்தையும் மறைப்பதன் மூலம் காந்தியின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்த முடியாது. உலகத்துக்கு உண்மையை எடுத்துக்கூறும் வகையில் சர்வோதய பெரியார் சுனிபாய் வைத்யா அவர்கள் மறுப்பறிக்கைகள் வெளியிட்டதன் மூலம் உலகத்துக்கு உண்மை வெளிக் கொணரப்பட்டது.

கோட்ஸே, காந்தியடிகளைக் கொலை செய்தது மத சம்பிரதாயப்படி சரியானது என வாதிடுவோர் சிசுபாலவதத்தைப் போன்று காந்தி வதமும் மத சம்பந்த மானதே என்பர். மதங்களிடையே சகோதரத்துவம் மற்றும் சகிப்புத் தன்மை என்ற கருத்தை கேட்ஸே ஏற்றுக் கொள்ளவில்லை. மத நல்லிணக்கம் என்ற உயரிய கருத்தைக் கூறியதற்காக கோட்ஸே உலக உத்தமராக விளங்கிய காந்தியை சுட்டுக் கொன்றார். உலக மக்களால் மகாத்மா என்று போற்றப்படுபவரை மிகக் கொடூரமான முறையில் கொலைசெய்துவிட்டு அதை இந்து மத சம்பிரதாயத்தின் அடிப்படையில் நியாயப்படுத்த முயற்சிப்பது கொடுமையிலும் கொடுமை.

கோட்ஸே காந்தியைக் கொலை செய்ய இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன. பாகிஸ்தான் கோரிக்கையை ஏற்பதன் மூலம் காந்திஜி நாட்டுப் பிரிவினைக்கு காரணமாகியிருந்தார் என்றும் மற்றையது இந்திய அரசை பாகிஸ்தானுக்கு 55கோடி ரூபாய் கொடுக்க வேண்டு மென்று வற்புறுத்தினார் என்றும் கூறுகின்றார்கள். ✱


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டிக் கிரியையும்



நெடியகாடு, வல்வெட்டித்துறையினை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட

## திருமதி நாகேஸ்வரன் இராசலெட்சுமி

மலர்வு 24 ★ 06 ★ 1930

உதிர்வு 01 ★ 01 ★ 2012

## அன்னையின் அமர்வு

நலம் காண, வேண்டினோம்
நாம் பிள்ளைகள்
நான் என்றருளிய - எம் அன்னை
கலங்காத கனிவான வாழ்க்கையும்
காதலுடன் எம்மை வளர்த்திட்ட
கோடை மழையாம் - எம் அன்னை
நல் வல்வை நகரில்
நன்றாய் எம்மைக் காத்திட்ட

நற் காவல் தெய்வம் - எம் அன்னை
கருணை பொழிந்த அம்மா
கண்டிக்கவும் தயங்கிய அம்மா
கண் வளர்த்த தாலாட்டிய அம்மா
கால இயற்கையின் தாலாட்டில்
கண் வளர்த்த அம்மாவே
கலங்கிய பிள்ளைகள் கண்டிங்கு
கடவுளின் பாதங்களில்
காவலுடன் கண் வளர வேண்டி

எங்கள் துயரில் நேரில் வந்தும், தொலைபேசி, தந்தி மூலமும் எமக்கு ஆறுதல் கூறிய அனைத்து உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு நாளை (31.01.2012) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நெடியகாடு,
வல்வெட்டித்துறை.

(13485) (45-6-7)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரமக்கள், பூட்டப்பிள்ளைகள்,
சகோதரர்கள், உறவினர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு

யாழ் மாநகர சபை எல்லைக்குள் நல்லூர் பிரதேச செயலக பிரிவில் 30/2, கனகரட்ணம் வீதி, அரியாலையில் 03 பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. (13680)(6-7-8)

தொடர்பு . 021 3217918 ( பி . ப 5.00 மணிக்கு பின் தொடர்பு கொள்ளவும்

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட பிறிமா No.1 புறொயிலர் பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும்(02.02.2012) விநியோகிக்கப்படும்.

தொடர்பு:

| | | |
|---|---|---|
| நல்லூர் பாம் சென்ரர், | நல்லூர் பாம் சென்ரர், | சுட்டி பாம் சென்ரர், |
| 19, முருகேசர் ஒழுங்கை, | கனகபுரம் வீதி, கிளிநொச்சி. | வட்டுக்கோட்டை |
| நல்லூர். 0212226944 | 0776225944 | 0778996085 |

(13302) (45-7-9)

# மரண அறிவித்தல்



திருமதி
### சந்திரபூபதி கணபதிப்பிள்ளை

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கீதபூஷணம் சு. கணபதிப்பிள்ளை (ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் சங்கீதம் - வலிகாமம்) அவர்களின் பாசமிகு பாரியார் திருமதி சந்திரபூபதி அவர்கள் நேற்று (29.01.2012) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரராசா (ஓய்வுபெற்ற பிரதேச செயலர், சங்கானை), சந்திரபாலன் (ஓய்வுபெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம்), சந்திரவரதன் (சவுதி அரேபியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கேசவதாஸ் (சிங்கப்பூர்), கமலலோசனி நல்லையா, சகலகலாவல்லி சந்திரராசா (ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோகர்), காலஞ்சென்ற இராஜேஸ்வரி சந்திரபாலன் செல்வரத்தினம், சந்திரவரதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோ ரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2012) திங்கட்கிழமை முற்பகல் 10 பணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் பொன்னாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு.கணபதிப்பிள்ளை
சங்கீத பூஷணம்

தபாற்கந்தோர் முன்பாக
சுழிபுரம். (13514)(45-7-6)

## தேவை

வீடு வாடகைக்கு தேவை சங்கானை, சித்தன்கேணி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு, மாதகல் ஆகிய பகுதிகளில் விரும்பத்தக்கது.

தொடர்புக்கு: 075 7622814

## பணிப் பெண் தேவை

கொழும்பில் உள்ள வீட்டில் தங்கியிருந்து சமையல் வேலை மற்றும் வீட்டுவேலைகள் செய்வதற்கு 35 வயதுக்கு மேற்பட்ட ஒருவர் தேவை.

தொடர்புகளுக்கு . 077 9401002

## பராமரிப்பாளர் தேவை

கொழும்பில் வசிக்கும் 80 வயது தாயாரைப் பராமரிக்கவும், சமையல் வேலைகள் செய்யவும் 35 வயதிற்கு மேற்பட்ட பணிப்பெண் ஒருவர் தேவை.

தொடர்பு . 077 9401002

## விற்பனைக்கு

கலர் மீன்கள், மீன்தொட்டிகள் குருவிகள், புறாவகை கூடுகள், நாய்க்குட்டிகள் புதிய இனங்களில் பூக்கன்றுகள் மற்றும் பல இன கோழிக்குஞ்சுகள். அனைத்தும் ஒரே இடத்தில் விற்பனைக்கு உண்டு.

யாழ் அக்கூரியம்
941. K.K.S. றோட் யாழ்ப்பாணம்

## உதவியாளர் தேவை

கந்தர்மடம்ஆத்திசூடி ஸ்ரீசித்திவிநாயகர் தேவஸ்தானத்திற்கு ஆலய உதவியாளர் தேவை.

தொடர்பு . 077 1386905 - 077 6262018
பரிபாலனசபை.

## வேலைக்கு ஆள்கள் தேவை

சந்நிதி முருகன் லேணேஸ் அன் சேவிஸ் சேவிஸ் வேலை, மெக்கானிக் வேலை தெரிந்தவர்கள் பயிலுநர்கள் (ஆண்கள்) தேவை

தொடர்பு: இல. 24, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே 021 2228076

## வேலை வாய்ப்பு

தாவடி, கொக்குவில் பகுதியில் அமைந்துள்ள இரு சாப்பாட்டுக் கடைகளுக்கு பின்வரும் அனுபவம் வாய்ந்த ஆண்/பெண் இருபாலார்கள் தேவை.

*. சமையல்காரர்
*. கொத்து ரொட்டி தயாரிப்பாளர்
*. உதவியாளர்கள்
*. மிக்சர் தயாரிப்பாளர்கள்

தொடர்புகளுக்கு . 077 7652012

( 13647 )(6-7-8)


Dr.Pimple
TRICHOLOGY CENTRE
Hair and Pimple Clinic
V Care

முகப்பருக்களுக்கு
International Skin Peeling
சிகிச்சை முறைமூலம்
நிரந்தரத்தீர்வு



எதிர்வரும் 4,5,6 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடைபெறவுள்ளது.
வவுனியாவில்12,13ஆம் திகதியில்.... முன்பதிவுகளுக்கு - 077-5426692

V care Colombo - No.190, George R.De Silva Mawtha colombo 13.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288.


# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| | | |
|---|---|---|
| அன்னை மடியில் | | இறைவன் அடியில் |
| 30 | | 05 |
| ★ | | ★ |
| 04 | | 02 |
| ★ | | ★ |
| 1936 | | 2006 |



அமரர்
### வைத்திலிங்கம் பாலசுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற செயலாளர், வலிதெற்கு பிரதேச சபை - சுன்னாகம்)

திதி: 30.01.2012

ஆண்டுகள் 6 சென்றாலும் உங்கள் நினைவுகளை சுமந்த எங்கள் இதயம் இன்னும் ஈரமாகவே இருக்கின்றது. எத்தனை ஜென்மங்கள் ஆனாலும் என்றும் உங்கள் நினைவுடன் வாழும்

மனைவி (பா.இந்திராணி),
மகள், மருமகன்,
மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை. (13612)(45-6-7)

## நன்றி நவிலல்
## வீட்டுக்கிருத்திய (சபிண்டீகரண) அழைப்பு



திருமதி
### அம்பலவாணர் செல்லம்மா

திதி: 31.01.2012

தோற்றம்
20★05★1927

மறைவு
01★01★2012

கடந்த 01.01.2012 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய (சபிண்டீகரண்) கிரியைகள் எமது இல்லத்தில் நாளை (31.01.2012) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும். அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்ம சாந்திப்பிரார்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவியின் மரணச் செய்தி கேட்டு உடன் எமது இல்லத்துக்கு வருகை தந்து எம்முடன் துயர்பகிர்ந்தவர்களுக்கும், சமுகம் தர முடியாதபோதும் தொலைபேசி, தொலைநகல், தந்தி, தபால், இணையத்தளமூலம் துயர் பகிர்ந்தவர்களுக்கும், இறுதிக்கிரியையில் கலந்துகொண்டு எம் முடன் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கி, அஞ்சலி செலுத்திய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகள் பல.

குடும்பத்தினர்.

"இலட்சுமி வாசம்",
பாப்பா தோட்ட ஒழுங்கை,
இணுவில் மேற்கு, இணுவில். (13517) (45-6-7)


2011 சாதாரண , உயர்தர பரீட்சை முடித்த மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் சிறப்புக்கட்டணச்சலுகையுடன் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்

COMPUTER & ENGLISH EDUCATION

Diploma in Information Technology
Diploma in IT & Web Programming
Advanced Diploma in Hardware & Networking

Professional Training
Tally financial Accounting
Advanced Java Programming
Web Design & Development
MS Office Applications
Accounting Using Quick Books
Visual Programming

Graphics & Animation Training
Professional Graphic Design
Video Production
Digital Pre-Press
Web Animation
Digital Film Making
Cartoon Animation
100% Practical Training

ISO 9001 : 2008 Certified Institution

Spoken English Course
Duration - 3 Months

நம்பிக்கையும் 18 வருட கல்விச்சேவையும்

CSC-ASIAN COMPUTER EDUCATION

| யாழ்.நகரில் | நெல்லியடியில் | சாவகச்சேரியில் | கிளிநொச்சியில் |
|---|---|---|---|
| 2G, ஸ்ரான்லி வீதி, | கொடிகாமம் வீதி, | 230, கண்டி வீதி, | 45, அம்மன் கோவில் வீதி |
| T.P : 021-222 5677 | T.P : 021-2262399 | T.P : 021-2270267 | ஆனந்தபுரம் 021-2285644 |


## இடமாற்றம்

இதுவரை 187, கஸ்தூரியார் வீதியில் இயங்கிவந்த எமது ஸ்தாபனம் இன்று முதல் (30 . 01. 2012 ) 183, கஸ்தூரியார் வீதி என்னும் முகவரியில் இயங்குகின்றது.

என்பதை வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

ஸ்ரீ மீனாட்சி நகை அகம்

இல. 183, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P. 021 2226109

( 8280 )(6-7-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** அயலார் அனுசரணையாக நடந்து கொள்வர். வரவுகளை எதிர்பார்த்துச் சில செலவுகளைச் செய்வீர்கள். வாகன யோகத்துக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயமில்லாத விடயங்களில் இறங்கி அவதிகளுக்கு ஆளாகலாம். கனவுத்தொல்லையுண்டு. நீங்கள் சில தவறுகளைச் செய்து விட்டு, அது தெரியாமல் மற்றவர்களிடம் சண்டை போடலாம்.

**இடபம்:** வழக்கமான பணிகளை உற்சாகமாகச் செய்வீர்கள். பெண்கள் வகையில் அன்புத் தொல்லை களைச் சந்திக்கலாம். வீண் பழிகள் விலகி புகழ், கௌரவம் அதிகரிக்கும். சிலருடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீரும். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவீர்கள். நீண்ட நாள்களாகச் சந்திக்காத உறவினர்கள் சிலரைச் சந்திக்கலாம். அனுகூலமான நாள்.

**மிதுனம்:** சில வேலைகளை இருந்த இடத்தில் இருந்தே, தொலைபேசி மூலம் முடிப்பீர்கள். நீண்ட கால திட்டம் ஒன்றை செயற்படுத்த முற்படுவீர்கள். நிறுத்தி வைத்த வேலை ஒன்று, இன்று வெற்றிகரமாக முடிப்பீர்கள். பண விட யங்களில், சிலர் உங்களிடம் வாக்குக் கொடுக்கலாம். கடந்த காலத்தில் உதவிய ஒருவரை நினைத்துப் பார்ப்பீர்கள்.

**கடகம்:** முயற்சிகளில் முத்தான வெற்றி கிட்டும் நாள். திட்டமிட்ட வேலை ஒன்றில் மாற்றம் செய்வது பற்றி ஆலோசிப்பீர்கள். வயிறு தொடர்பான உபாதைகளைச் சந்திக்கலாம். குறைந்த செலவில் முடியும் என்று நினைத்த வேலை ஒன்றுக்கு அதிகமாகச் செலவாகலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்க நேரிடலாம்.

**சிங்கம்:** சிலருடன் மனக் கசப்புகள் வரலாம். எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். சில விடயங்களில் ஏற்படும் தடை, தாமதங்களால் கோபம், எரிச்சல் அடையலாம். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்குவீர்கள். வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள்.

**கன்னி:** உறவினர்கள், நண்பர்கள் உதவிகரமாக இருப்பர். தாய் வழியில் அனுகூலமான உதவி கிடைக்கலாம். நோய் உபாதைகள் நீங்கி தெம்பு, உற்சாகம் பெறுவீர்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். வழக்கமான பணிகளை சோம்பல் இல்லாமல் புத்துணர்ச்சியோடு செய்வீர்கள்.

**துலாம்:** விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டாகும். உறவினர் ஒருவரைப் பற்றி மற்றொரு உறவினர் முக்கிய தகவல்களைச் சொல்லலாம். மறதியால் நேற்று செய்யாமல் விட்ட வேலை ஒன்றை இன்று செய்வீர்கள். சில விடயங்கள் பாதகமாக நடப்பது போலத் தோன்றி னாலும், இறுதியில் சாதகமாக முடிந்து விடும். நல்ல செய்தி கேட்கலாம்.

**விருச்சிகம்:** பிள்ளைகள் தொடர்பான வேலைகளுக்காக அலையலாம். தேக ஆரோக்கியத்துக்காக கணிசமான தொகையைச் செலவிடலாம். சிலரிடம் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவீர்கள். உங்களுடன் பேச விரும்பும் ஒருவரிடம் நீங்கள் பேசாமல் தவிர்க்கலாம்.

**தனுசு:** தொழில் நிமித்தம் சிலர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். உங்களின் வேலை ஒன்று உறவினர்களால் தடைப்படலாம். சிலருடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவதால், கோபம், பதற்றம் அதிகரிக்கலாம். உங்களின் கவலை ஒன்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வீர்கள். மற்றவர்கள் தொடர்பான காரியங்களுக்காக அலைய நேரிடலாம்.

**மகரம்:** கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். விருந்து, விசேடங்களால் சந்தோஷம் அடைவீர்கள். அடுக்கடுக்காகப் பல வேலைகளை திட்டமிட்டு செய்வீர்கள். உறவினர்கள் சிலருக்கு நல்ல யோசனை சொல்வீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெற வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** மற்றவர்களை நம்பி யாருக்கும் வாக்குக் கொடுக்காதீர்கள். பெண்கள் குடும்பப் பெரியவர்களின் விமர்சனங்களைச் சந்திக்கலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்லாம். சிலரிடம் பழங்கதைகள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். திட்டமிட்ட சில வேலைகளைச் செய்ய முடியாமல், தடை, தாமதங்களைச் சந்திக்கலாம்.

**மீனம்:** அரசியல்வாதிகளுக்கு செல்வாக்குக் கூடும். நொடிப்பொழுதில் முடிந்து விடும் என நினைத்த வேலை ஒன்று, கடுமையாக இழுத்தடிக்கலாம். சிலரிடம் கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள். நாளை வரும் என்று நினைத்த பணவரவு ஒன்று, இன்றே வந்து விடலாம். கணவன், மனைவி இடையே சண்டை, சச்சரவுகள் ஏற்படலாம். மாற்று மதத்தினர் உதவி கிட்டும்.

**நாளை**

தை 17 செவ்வாய்க்கிழமை 31.01.2012
திதி: அட்டமி மு.இ. 10.59 வரை
நட்சத்திரம்: பரணி பி.இ. 05.58 வரை
சுபநேரம்: 11.06 - 12.36 வரை,
ராகு காலம்: 03.36- 05.06 வரை

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 9 | | 7 | 6 | |
| | 7 | | 5 | | | | | |
| | | 3 | | 7 | 6 | | 5 | |
| | | | | | | 9 | 7 | 4 |
| 2 | 9 | 4 | | | | 5 | 3 | 8 |
| 5 | 8 | 7 | | | | | | |
| | 6 | | 4 | 3 | | 2 | | |
| | | | | | 8 | | 1 | |
| | 2 | 9 | | 6 | | | | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


## பிற்போடப்பட்டுள்ளது

31.01.2012 செவ்வாய்க்கிழமை நடைபெற இருந்த அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணங்களினால் (28.02.2012) மாசிப்பரணி அன்று மதியம் 12 மணியளவில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

ஸ்ரீ ஞான வைரவர் ஆலயம்
மட்டுவில் மத்தி, சாவகச்சேரி. (13614) தர்மகர்த்தா.


## மரண அறிவித்தல்

### மகேஸ்வரி சிவசுப்பிரமணியம்



தாவடி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரி சிவசுப்பிரமணியம் 28.01.2012 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லமுத்து -இராசையா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் சோதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் திலகவதி (ஜேர்மனி), காலஞ்சென்ற பரமேஸ்வரன் மற்றும் சண்முகநாதன், கலைநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சரஸ்வதி, இராசரத்தினம், சிவானந்தராஜா ஆகியோரின் மைத்துனியும் பிரபாகரன் (பிரான்ஸ்), கிருஸ்ணவேணி (பிரான்ஸ்), நித்தியாகரன்(லண்டன்), மயூரன் (IDM) ஆகியோரின் அன்புத் தாயும் சந்திரவதனா, சுமதி, சுமந்திரன் ஆகியோரின் மாமியும் வேஜினி, அபிஷேக், ஆரணி, சுபிக்ஷா, சுலக்ஷா, அக்ஷயா, ஆதிரன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2012) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவடி தெற்கு,
கொக்குவில். (13646)

தகவல்:
இ.சண்முகநாதன்,
(தம்பி)


## வாகனம் விற்பனைக்கு

இசுஸ். குறுக்கப். 4 கதவு பவர் இஸ்ரேறிங், A\C பவர் கதவு, பவர் செற், சென்ரர் லொக் 4JBI இன்சின் முற்றிலும் புதிய வடிவமைப்பு செய்து உள்ளது. 53-25 இருவழி அனுமதிப் பத்திரம், சாரதி நீங்கி 4 ஆள் பிரயாணிகள் மற்றும் 5 போட் ஓட்டோ 2, இஸ்ரேங் GE-65 விற்பனைக்கு உண்டு.
தொ.பே: 0773203434, 0773486830

## வேலையாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல புடைவை வியாபார ஸ்தாபனத்துக்கு அனுபவமுள்ள/ பழக விரும்பும் ஆண்/பெண் விற்பனையாளர்கள், சிட்டை எழுதுநர், விற்பனையாளர்கள் தேவை.
தொடர்பு:
021 222 5578, 072 7122944




குறைந்த விலையில் குவளைகள்
www.titusstores.com
டைட்டஸ் ஸ்டோர்ஸ்
புறக்கோட்டை லிபர்டி பிளாஸா
2439422

## முதியோர் இல்லம்

'யாழில் முதியோர் இல்லம்'
திருநெல்வேலி Cenerl nursing home உடன் இணைந்து முதியோர், நோயாளர் யாழ். நகரிலும் பராமரிக்கப் படுகின்றனர். கிளைகள் [illegible]
தொடர்பு:
0718234691, 0752555689


## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 31.12.2011 சனிக்கிழமை அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

### அமரர்
### கைலாசபிள்ளை சிவபாக்கியம்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (30.01.2012) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பத்தினருடன் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,
கொப்பாட்டப் பிள்ளைகள்.

மஞ்சத்தடி,
இணுவில். (சி-8269)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திருமதி
### ஸ்ரீமதி அம்மா
### சரவணமுத்து

திதி 30-01-2012 (திங்கள்)
வளர்பிறை சப்தமி

மலர்வு 05-10-1922
உதிர்வு 10-02- 2011

அம்மா என்பார்கள் சின்னம்மா என்பார்கள்
அப்பம்மா என்பார்கள் அம்மம்மா என்பார்கள்
வேவி அக்கா என்பார்கள் மாமி என்பார்கள்
தாய்மையின் முழுவடிவை ஸ்ரீமதி என்றும் சொல்வார்கள்
ஓராண்டு போனாலும், ஒரு நூறு ஆனாலும்
குறையாது உன் எண்ணம் - தாயே
கண்ணுக்குள் உன் விம்பம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டன்
தகவல் மகன்- சரவணமுத்து ஸ்ரீநிவாசன்
0773236003

ஸ்ரீமதிவாசா,
சுதுமலை மத்தி,
மானிப்பாய். (13631)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு இரவில் முதலிடம்

ஆஸ்திரேலிய பகிரங்கத் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில், பெலாரஸ் வீராங்கனையான விக்டோரியா அஸரென்கா சம்பியனாகியுள்ளார். ஆண்கள் இரட்டையர் இறுதியில், இந்தியாவின் பயஸ் (வயது -39), செக் குடியரசின் ஸ்டெபானெக் (வயது -33), ஜோடி சம்பியன் பட்டம் வென்றது. இதன் மூலம் இந்தப் பிரிவில் கிண்ணம் வென்ற முதல் இந்தியர் என்ற வரலாறு படைத்தார் பயஸ்.

நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற மகளிர் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் ரஷ்ய வீராங்கனை மரியா ஷரபோவாவை 6-3, 6-0 விகிதத்தில் விக்டோரியா தோற்கடித்தார். 22 வயதான விக்டோரியா அஸரென்கா கைப்பற்றிய முதலாவது கிராண்ட்ஸ்லாம் சம்பியன் பட்டம் இதுவாகும்.

இந்த இறுதி ஆட்டத்துக்கு முன்னதாக மகளிர் ரெனிஸ் தரவரிசையில் 24 வயதான மரியா ஷரபோவா இரண்டாமிடத்திலும் விக்டோரியா அஸரென்கா 3 ஆம் இடத்திலும் இருந்தனர். இந்த ஆட்டத்தின் பின்னர் உலக தரவரிசையில் முதலிடத்திற்கும் விக்டோரியா முன்னேறியுள்ளார்.

''இது ஒரு கனவு நனவான விடயம். கிரான்ட்ஸ்லாம் சுற்றுப்போட்டியில் வெல்லும் கனவு கண்டதுடன் கடினமாக பாடுபட்டுவந்தேன். தரவரிசையிலும் முதலிடத்தைப் பெறுவது ஒரு போனஸ் ஆகும்' என்று விக்டோரியா கூறினார்.


இந்த கிரான்ட்ஸ்லாம் போட்டிக்கு முன்னர் தொடர்ச்சியாக 11 சுற்றுப் போட்டிகளில் அஸரென்கா சம்பியனாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. எனினும் இதற்குமுன் கிரான்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒற்றையர் பிரிவில் எதிலும் அரையிறுதிக்கு மேல் முன்னேறியதில்லை. கலப்பு இரட்டையர் பிரிவில் அமெரிக்க (2007), பிரெஞ்சு (2008) சுற்றுப்போட்டிகளில் விக்டோரியா சம்பியனாகியிருந்தார்.

இன்று என்னைவிட அனைத்துவிடயங்களையும் அவர் சிறப்பாக செய்தார் என்று விக்டோரியா குறித்து மரியா ஷரபோவா கூறினார்.

**“இது ஒரு கனவு நனவான விடயம். கிரான்ட்ஸ்லாம் சுற்றுப்போட்டியில் வெல்லும் கனவு கண்டதுடன் கடினமாக பாடுபட்டு வந்தேன்.”**









விக்டோரியா அஸரென்கா

**பயஸ் - ஸ்டெபானெக் சம்பியன்**

ஆண்கள் இரட்டையர் பிரிவு இறுதிக்கு இந்தியாவின் பயஸ், செக் குடியரசின் ஸ்டெபானெக் ஜோடி முன்னேறி இருந்தது. இதற்கு முன்னர் மூன்று முறை இறுதிக்கு முன்னேறியும், ஒரு முறையும் கிண்ணத்தை பயஸ் ஜோடி வென்றதில்லை. இதில் இரு முறை (2006, 2011) அமெரிக்காவின் பாப், மைக் பிரையன் சகோதரர்களிடம் தோற்றது.

நேற்று முன்தினம் நடந்த இறுதியில் பயஸ் ஜோடி, மீண்டும் முதலிட ஜோடியான பாப், மைக் பிரையன் சகோதரர்களைச் சந்தித்தது. எதிர்பார்ப்பை ஏற்படுத்திய இந்தப் போட்டியின் முதல் செட்டில், இரு ஜோடிகளும் மாறி மாறி 'கேம்களை' எடுக்க, முடிவு 'டை பிரேக்கருக்கு' சென்றது. அபாரமாக செயல்பட்ட பயஸ் ஜோடி, 7-6 என்று முதல் செட்டை வென்றது.

இரண்டாவது செட்டில் பயஸ் ஜோடி தொடர்ந்து அசத்தியது. தொடக்கத்தில் இருந்தே ஆதிக்கம் செலுத்திய பயஸ் ஜோடி, 6-2 என்று எளிதாக செட்டை கைப்பற்றியது. 1 மணி நேரம், 24 நிமிடங்கள் நடந்த போராட்டத்தின் முடிவில் 7-6, 6-2 நேர் செட் கணக்கில் வென்ற பயஸ்-ஸ்டெபானெக் ஜோடி சம்பியன் பட்டம் வென்றது.

**கலப்பு இரட்டையர்**

நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கலப்பு இரட்டையர் பிரிவில் ஹொரியர், டெகாவோ மற்றும் அமெரிக்காவின் பெதானீ மாடெக் சான்ட்ஸ் ஜோடி, ருமேனியாவின் இந்தியாவின் லியாண்டர் பயஸ் - ரஷ்யாவின் எலினா வெஸ்னியா ஜோடியைத் தோற்கடித்து சம்பியனாகியது. (15)



முதல் இந்தியர்: ஆஸ்திரேலிய ஓபன் வரலாற்றில், ஆண்கள் இரட்டையர் பிரிவில் இந்திய வீரர் யாரும் பட்டம் வென்றதில்லை. முதன் முறையாக கிண்ணம் வென்ற இந்தியர் என்ற பெருமை படைத்துள்ளார் பயஸ்.

# கொஞ்சம் பொறுத்திருந்து மாற்றத்தைப் பாருங்கள்

ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வரும் இந்திய அணி நான்கு டெஸ்ட் ஆட்டங்களிலும் படுதோல்வி அடைந்தது. இதுகுறித்து இந்திய அணித்தலைவர் டோனி கூறுகையில், ஆஸ்திரேலிய வீரர்கள் தொடர்ச்சியாக சிறப்பான முறையில் விளையாடினார்கள்.

இணைப்பாட்டம் தேவைப்படும் இடங்களில் ஒவ்வொரு வீரர்களும் சிறப்பான பங்களிப்பைக் கொடுத்தனர். துடுப்பாட்ட வீரர்கள் சதம் அடித்து அணியின் 'ஸ்கோரை' வலுப்படுத்தினர், பந்து வீச்சாளர்களும் நல்ல முறையில் செயல்பட்டனர்.

ஆஸ்திரேலியாவில் வேகப் பந்து வீச்சுக்கு எதிராக விளையாடுவது கடினமானது. ஆனால் இந்த முறை துல்லியமான பந்துவீச்சு மூலம் மிரட்டினார்கள். ஒரு முறைகூட நான்கு ஓட்டத்துக்கான பந்தை அவர்கள் வீசவில்லை. இதனால் வெற்றி அவர்கள் வசமானது.

எங்களது அடுத்த டெஸ்ட் தொடர் செப்ரெம்பர் மாதத்தில் தான் உள்ளது. அதற்கு அவகாசம் நிறைய உள்ளது. மூத்த வீரர்கள் விவகாரத்தில் அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்க விரும்பவில்லை. மாற்றங்களை பொறுத்திருந்து பாருங்கள். தற்போது நாங்கள் ஒருநாள் தொடரை எதிர்கொண்டிருக்கிறோம். அனுபவம் மற்றும் இளமை வாய்ந்த அணி இது. 100 ஒரு நாள் ஆட்டத்துக்கு மேல் விளையாடி விட்டால் அந்த வீரரை டெஸ்ட் ஆட்டத்தில் களமிறக்கலாம் என்பது எனது தனிப்பட்ட விருப்பம் என்று தெரிவித்தார். (15)

# 7

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான தொடர் தோல்வி காரணமாக இந்திய கிரிக்கெட் அணி டெஸ்ட் தர வரிசையில் பின் தள்ளப் பட்டிருக்கிறது.

இந்திய அணி தற்பொழுது 7 புள்ளிகள் பின் தங்கி 111 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளது. அதே நேரம் ஆஸ்திரேலிய அணியும் அதே புள்ளிகள் பெற்றுள்ளது. தற்போது ஆஸ்திரேலிய அணி 4 ஆவது இடத்தில் உள்ளது. இந்த அணி எதிர்வரும் மார்ச் மாதத்தில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்கிறது. அந்த சுற்றுப்பயணத்தில் இரு அணிகளும் மூன்று டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளன. இதில் ஒரு ஆட்டத்தில் வென்றால்கூட ஆஸ்திரேலிய அணி தர வரிசையில் மூன்றாவது இடத்துக்கு முன்னேற வாய்ப்பு உள்ளது.

தற்போது இங்கிலாந்து முதலிடத்திலும், தென்னாபிரிக்கா இரண்டாவது இடத்திலும் உள்ளது குறிப்பிடத்தக்கது. (15)

# சப்பா.....! இவங்க வேற கடுப்பேத்துறாங்களே!



அன்னிய மண்ணில் அடுத்தடுத்து 8 மோசமான தோல்விகள் பெற்ற இந்திய அணியை, ஒட்டு மொத்தமாக மாற்றவேண்டும், என்று முன்னாள் வீரர்கள் ஆவேசமாகத் தெரிவித்தனர்.

**பிஷன் சிங் பேடி,**
**முன்னாள் அணித் தலைவர்:**
ஆஸி. வீரர்களின் பயிற்சி முறைகளை ஒப்பிடும்போது, நாம் பின்தங்கி உள்ளோம். நமது களத்தடுப்பு மோசம். சில எளிய பிடியெடுப்புக்களைக் கூட கோட்டை விட்டனர்.

**அஜித் வடேகர்,**
**முன்னாள் அணித்தலைவர்:**
மூத்த வீரர்கள் முதல் தர போட்டியில் பங்கேற்காதது மோசமான செயல். இதில் கட்டாயம் விளையாட வேண்டும். சச்சின், டிராவிட், லக்ஸ்மன், சேவாக் போன்றவர்கள் இதை செய்வது கிடையாது. இதனால் தான் உலகத் தரம் வாய்ந்த வீரர்கள் இருந்தும் மோசமாக தோற்கிறோம். நமது அணி மூத்த வீரர்களை அதிகம் நம்பியுள்ளது. ரகானே, ரோகித் போன்றவர்களுக்கு வாய்ப்பே கிடைக்கவில்லை. அதிகப்படியான கிரிக்கெட் காரணமாகவும், சரியான திட்டமிடல் இல்லாமல் போகிறது. அணியை ஒட்டு மொத்தமாக மாற்ற உறுதியான முடிவெடுக்க நேரம் வந்துவிட்டது.

**ஸ்ரீகாந்த்,**
**தேர்வுக்குழு தலைவர்:**
மூத்த வீரர்கள் மீது நம்பிக்கை வைத்திருந்தேன். முதல்நிலை 5 வீரர்களும் ஒட்டுமொத்தமாக இந்தத் தொடரில் ஏமாற்றினர். ரகானே, ரோகித் சர்மா, ஒரு டெஸ்டில் கூட பங்கேற்காமல் நாடு திரும்புகின்றனர்.

**சையது கிர்மானி,**
**முன்னாள் இலக்கு காப்பாளர்:**
இந்திய கிரிக்கெட் வரலாற்றில் எப்போதும் இல்லாத தோல்வி இது. அனுபவ வீரர்கள் இருந்தும், இதுபோல நடப்பது, துரதிருஷ்டவசமானது. போதிய முயற்சி இல்லாமல், வெற்றி பெறுவோம் என்ற எண்ணமின்றி மோசமாக விளையாடினர்.

இதற்குப் பயிற்சியாளர் பிளட்சரும் பொறுப்பு. 8:0 என்ற கணக்கில் அன்னிய மண்ணில் தோல்வியடைந்த நிலையில், பயிற்சியாளர் குறித்து யாரும் பேசாதது வியப்பு. (15)

# நானாவது போறதாவது....?

டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெறுவது குறித்து இது வரை எந்த முடிவும் எடுக்கவில்லை என்று இந்திய அணியின் மூத்த வீரர் டிராவிட் தெரிவித்துள்ளார். கடந்த சில நாள்களுக்கு முன்னர் டெஸ்ட் போட்டியில் இருந்து டிராவிட் ஓய்வு பெறப் போவதாக தகவல் வெளியானது.இந்த தகவலை மறுத்துள்ள டிராவிட் மேலும் கூறியதாவது, என்னுடைய கிரிக்கெட் வாழ்க்கை இறுதிக்கட்டத்தை நெருங்கி விட்டது. அதில் எவ்வித சந்தேகமும் இல்லை, ஆனாலும் ஓய்வு குறித்து எந்த முடிவும் எடுக்கவில்லை. அதற்கான அவசியமும் இப்போது இல்லை. அடுத்த டெஸ்ட் தொடருக்கு இன்னும் 8 மாதங்கள் உள்ளன. அதற்கிடைப்பட்ட காலத்தில் என்ன நடக்கிறது என்பதை பொறுத் திருந்து பார்ப்போம் என்று தெரிவித்துள்ளார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு



கடந்த 18.01.2012 அன்று
கொழும்பில் சிவபதமடைந்த எமது
அத்தை அமரர் செல்வி

**ரஞ்ஜனிதேவி
சுந்தரராஜசர்மா**

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (30.01.2012) திங் கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண் டிக் கொள்கின்றோம்.

**179, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.**

**பசுபதீஸ்வரசர்மா
கணேசராஜன்**

# 10 ஆம் ஆண்டு நினைவலைகள்

| வையத்துள் அறிமுகம் | தெய்வத்துள் சங்கமம் |
|---|---|
| 18 - 06 - 1942 | 20 - 01 - 2002 |



## திருமதி இராசதுரை சுகிர்தலட்சுமி

பத்து ஆண்டுகள் சென்று விட்டது
அம்மாவை நாம் காணவில்லை
எங்கள் உயர்வுக்கு வழிகாட்டிய
எங்கள் அம்மா அருகில் இல்லாமல்
தவிக்கின்றோம்.
உன் நினைவே எம் நெஞ்சில்

**தாவடி தெற்கு,
கொக்குவில்.**

**பிரிவால் துயருறும்,
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.**

# கண்ணீர்ப்பூக்களை காணிக்கையாக்குகிறோம்



எமது சக உத்தியோகத்தரும் IDM வத்தளை கிளை முகாமையாளருமாகிய திரு. மயூரன் அவர்களின் தாயார் திருமதி மகேஸ்வரி சிவசுப்பிரமணியம் அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றோம்.
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்

**IDM Nations Campus
IDM City Campus # 3**
Jaffna I Chavakachcheri I Chankanai
Kopay I Chunnakam

IDM City Campus # 3

# பெண்களுக்கு வலை பந்து யங்ஸ்ரார் வென்றது

யாழ்ப்பாணம்,ஜன.30

வவுனியா பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளை யாட்டுக் கழங்களுக்கு இடையில் பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுள்ளது.

கடந்த வாரம் வவுனியா நகரசபை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விநாயகர் விளை யாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் யங்ஸ்ரார் விளை யாட்டுக்கழக அணி 18:10 என்ற புள்ளி அடிப்படையில் விநாயகர் விளையாட்டுக் கழக அணியை வெற்றி கொண்டது. (ம-23)

# ஐக்கிய வி.க.வென்றது

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ்.உதைபந்தாட்ட லீக் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே நடத்தும் அமரர் ஜே.பி.சிபிலிப் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத் துக்கான 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் சனிக் கிழமை பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணிக்கும் சென்.மைக்கல் விளை யாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஆட்ட நேரத்தில் இரண்டு அணியினரும் தலா ஒரு கோலைப் பெற்றதால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டம் வெற்றி, தோல்வி காண்பதற்காக 5 சம நிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் அரியாலை ஐக் கிய விளையாட் டுக்கழகம் 3:2 என்ற கோல் கணக்கில் சென்.மைக்கல் விளையாட் டுக்கழக அணியை வெற்றி கொண்டது. (ம-23)

# இன்றும் நாளையும் கிரிக்கெட்

யாழ்ப்பாணம்,
ஜன.30

இலங்கை பாட சாலை துடுப்பாட் டச் சங்கம் நடத் தும் பிரிவு 19 வயது அணியில் பிரிவு 3 இற்கான முதல் சுற்றுக் கிரிக்கெட் ஆட்டம் இன்றும் நாளையும் யாழ். மத்திய கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

இந்த ஆட்டத் தில் யாழ். மத்திய கல் லூரி அணியை எதிர்த்து மகாஜனக் கல்லூரி அணி மோதவுள்ளது.
(ம-23)

# உதைபந்தாட்டம்

வவுனியா பிர தேச செயலர் பிரி வுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழ கங்களுக்கு இடை யிலான ஆண், பெண் இருபாலாருக்குமான உதைபந்தாட்டப் போட்டி எதிர்வரும் 4 ஆம் 5 ஆம் திகதிக ளில் வவுனியா நகர சபை மைதானம் வவுனியா சிறுவர் பூங்கா மைதானம் ஆகியவற்றில் இடம்பெறவுள்ளது.
(ம-23)

# மரண அறிவித்தல்கள்

## சண்முகராசா சறோஜினிதேவி



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், பன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்முகராசா சறோஜினிதேவி நேற்று (29.01.2012) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் பிள்ளை- பொற்கொடி தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், கொல்லங்கலட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்தம்பி- தங்கம்மா தம்பதியரின் மருமகளும், சண்முகராசாவின் அன்பு மனைவியும், சுசிகலா, தட்சாயினி, ஜனனி (மீள் எழுச்சித் திட்டம், மாகாண திட்ட முகாமைத்துவப் பிரிவு, வவுனியா), பகீரதன் ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2012)திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் C/O.S.R. ஆனந்தராசா ஞானசம்பந்தர் வீதி, வட்டு தென்மேற்கு வட்டுக்கோட்டையில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

C/O.S.R. ஆனந்தராஜா
ஞானசம்பந்தர் வீதி, வட்டு
தென்மேற்கு வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

## வல்லிபுரம் இராசையா



இணுவில் மேற்கு ஞானவைரவர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் இராசையா நேற்று (29. 01.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும் சிந்தாமணியின் பாசமிகு கணவரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கியைகள் இன்று (30.01.2012) திங்கட்கிழமை முற்பகல் 11மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஞானவைரவர் கோயிலடி,
இணுவில் மேற்கு

## பத்தினிப்பிள்ளை கந்தசாமி



வட்டுதெற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், தற்போது இந்தியாவில் வசித்து வந்தவருமாகிய திருமதி பத்தினிப் பிள்ளை கந்தசாமி (கந்தரட்ணம் மாஸ்ரர்) நேற்று (29.01.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி (கந்தரட்ணம் மாஸ்ரரரின் ) அன்பு மனைவியும், நடராசா-நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், செல்லையா - தையல்நாயகி தம்பதியரின் பாசமிகு மருமகளும், புவனேஸ்வரி (ஆஸ்திரேலியா), காலஞ்சென்றவர்களான செல்வராசா(அப்பே ஓவசியர்-தொழில்நுட்ப உத்தியோகத்தர், பிரதேச சபை, வட்டுக்கோட்டை), சிவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வரத்தினம், காலஞ்சென்றவர்களனா திலகவதி, தங்கரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், செல்வேஸ்வரன் (இந்தியா), இரத்தினேஸ்வரன் (கனடா), செல்வேஸ்வரி (இந்தியா), ஞானேஸ்வரன் (லண்டன்), யோகேஸ்வரன் (கனடா), கேதீஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், பத்மினி (இந்தியா), கௌரி (கனடா), இராசநாயகம் (இந்தியா), றாஜி (லண்டன்), சுபாசினி (கனடா), வானதி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும், கார்த்திகா, கோபிநாத், லக்ஸ்மி, அன்பழகன், பிரகலாதன், அனிருத், இந்துஜா, சிவஜா, தாகீசன், உமாசங்கர், முகல்ஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (29.01.2012) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

க.செல்வேஸ்வரன்,
Maudavan Apartment,
III Floor, Aspirin Garden,
1st Street, Kilapaukkam,
Chennai-10

கந்தையா ஜெயதாஸ் (கந்தமுத்து மோகன்)
செல்வராசா கஜரநந்தன் (மருமகன்)- வட்டு தெற்கு,
வட்டுக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருதய நோயாளர்கள் பாகிஸ்தான் மருந்து வகையை பாவிக்கத் தடை

### 70 பேர் இதுவரை உயிரிழப்பு

பாகிஸ்தான் நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்படும் இருதய நோயாளர்களுக்கு வழங்கப்படும் சொசோபயிட் மொனோனயிரேட் 20 மில்லிகிராம் மருந்தை இலங்கையில் உபயோகிக்க முடியாது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நாட்டு முகவர் நிறுவனம் குறித்த பாகிஸ்தான் நிறுவனத்திலிருந்து அந்த மருந்தை இறக்குமதி செய்யவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக ஔடதங்கள் அதிகார சபையின் பணிப்பாளர் டாக்டர் ஹேமந்த பெனரகம தெரிவித்துள்ளார்.

எனினும் சந்தையிலுள்ள ஏனைய நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட குறித்த மருந்தை எவ்வித அச்சமுமின்றி உபயோகிக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தானிலிருந்து இறக்குதி செய்யப்பட்ட இந்த மருந்தை உட்கொண்ட 70 பேர் உயிரிழந்துள்ளதோடு மேலும் பலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதை அடுத்து இந்த மருந்தை உபயோகிக்க சுகாதார அமைச்சு நேற்று முதல் தடை விதித்தது.

(சி)

## மாடியிலிருந்து விழுந்து இளைஞர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜன. 30

மூன்றாம் மாடியில் கட்டட வேலையில் ஈடுபட்டிருந்த இளைஞர் தவறி கீழே விழுந்ததில் படுகாயமடைந்தார். அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கைதடியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகிலுள்ள கட்டடத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. காரைநகர், களபூமியைச் சேர்ந்த எஸ். காண்டீபன் (வயது-26) என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார்.

(ஓ-4)

Personal-Group Classes( Vavuniya - Jaffna )
Auto CAD
2D-Drawing & 3D-Modeling
BY Mr K.N. Mugunthan (D/A),
Cert. in 2D-Drawing & 3D-Modeling -Open University of Sri Lan
Cert. in Auto CAD (1st Class-Batch Top)
Information Technology - Ministry of Rehabilitation-Sri Lanka
Diploma in Engineering Drawing & Auto CAD (1st Class)
IIS-International University -Dublin
Contact No:0719978819

மரம் விற்பனைக்கு
பருத்தித்துறையில் 30' உயரம் 11' சுற்றுக்கொண்ட வாகை மரம் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு 0771298201

தவறிவிட்டது
வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த வேளையில் பணப்பை சிறுதொகைப் பணம் தேசிய அடையாள அட்டை திருமதி திலகவதி அம்மாள்ஆனந்தகுமார் 526202120V வங்கிப்புத்தகம் [3] ஆகியன தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பின்வரும் தோ. பே இலக்கத்துடன் தொடர்புகொண்டு உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்
தொடர்புகளுக்கு 0774949713

கார் விற்பனைக்கு
Doctor இன் பாவனையில் உள்ள கார் விற்பனைக்குண்டு. KIA SPECTRA 2002 MODEL, TOP CONDITION, POWER MIRROR, POWER SHUTTER, MP3 AUDIO, REAR SPOILER, AUTO TRANSMISION.
MOBILE- 0723420529

## கண்ணீர் அஞ்சலி



புங்குடுதீவு, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, ஆட்டுப்பட்டித் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட எமது நண்பன்

### ஐயம்பிள்ளை சிவராமலிங்கம்

[வின்லொஜ் உரிமையாளர், மலிபன் வீதி]

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நல்லூர்க் கந்தனை வேண்டுகிறோம்.

சரவணமுத்து ஐயா (அருச்சுனன் குடும்பம், யாழ்).
ஸ்ரீகாந்தராஜா சாந்தி குடும்பம் (கனடா).
பாஸ்கரன் ஜெயந்தி குடும்பம் (ஜேர்மனி).
சுரேந்திரன் சந்திரா குடும்பம் (ஜேர்மனி).
சுரேந்திரகுமார் வசந்தி குடும்பம் (பிரான்ஸ்).

## மரண அறிவித்தல்

### லோரன்ஸ் ஞானசேகரம் (ஓய்வு பெற்ற கிராம அலுவலர்)

மாந்தையைப் பிறப்பிடமாகவும், பெட்டா மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்ட லோரன்ஸ் ஞானசேகரம் நேற்று(29.01.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற அந்தோனி லோரன்ஸ் மற்றும் ஞானம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற யோசப் ஏனஸ்ட் ராஜகோன் மற்றும் மதுராணி தம்பதியரின் மருமகனும் நிரஞ்சலாவின் (ஆசியை மன்னார் புனிதஆனல் ம.ம.வித்தி.)பாசமிகு கணவரும் திவ்வியாவின் அன்புத் தந்தையும் மனுவல் ஞானக்கோன் (ஓய்வு பெற்ற பொது முகாமையாளர் ம.மேற்கு)ஞானேந்திரம், ஞானசோதி, ஞானேஸ் ஞானவதி(ஆசிரியை புனித மரியா பாடசாலை யாழ்ப்பாணம்)ஞானோதயம்(அதிபர் மன்னார் சாந்திபுரம் பாடசாலை)வண.பிதா ஞானாதிக்கம்(பங்குத்தந்தை வஞ்சியங்குளம்) பிரான்சிஸ் சேவியர்(அதிபர் கருங்கண்டல் மகா.வித்தியாலயம்) ஆகியோரின் சகோதரரும் நிஷாந்தி(ஆசிரியர் மன்னார் பு.ச.பெ.கல்லூரி)நிரஞ்சன்(அமெரிக்கா)ஆகியோரின் மைத்துனரும் சந்திரசேகரம்(கூ.பரிசோதகர் மன்னார்)கீதா (அமெரிக்கா) ஆகியோரின் சகலனும் ஆவார்

அன்னாரின் பூதவுடல் இன்று (30.01.2012)திங்கட்கிழமை பிற்பகல்2.30 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு மன்னார் புனித செபஸ்ரியார் தேவாலயத்தில் இடம்பெறும் இரங்கல் திருப்பலியின் பின்னர் மன்னார் பொது சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

பெட்டா, மன்னார் — தகவல் குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது மீள் எழுச்சித் திட்டத்தின் மாகாண திட்ட முகாமைத்துவப் பிரிவில் முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றும் செல்வி சண்முகராஜா ஜனனி அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி சண்முகராசா சறோஜினிதேவி

அவர்களின் மறைவினால் ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மாவட்ட முகாமைத்துவப் பிரிவு, மீள் எழுச்சித்திட்டம், பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

மாவட்ட திட்ட முகாமைத்துவ பிரிவு, உத்தியோகத்தர்கள்- யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### ஞானப்பிரகாசம் யோசப் (இளைப்பாறிய தபாலதிபர்)



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் யோசப் (இளைப்பாறிய தபாலதிபர்) நேற்று (29.01.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் - நேசம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செங்கமலை - சுவானுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தேவரத்தினம் அவர்களின் அன்புக் கணவரும், ஞானரத்தினம் (ஒலிவர்), ஆனந்தராஜா (ஆசிரியர், யா, இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், J.E.ஆனந்தராஜா (இளைப்பாறிய முகாமையாளர், மக்கள் வங்கி) அவர்களின் அன்பு மாமனும், ஜெஸ்லின், சியாமளின் (மாணவிகள், யா/ இளைவாலை திருக்குடும்ப கன்னியர் மடம்), சுபராஜ் (மாணவன், யாழ். இளாவலை ஹென்றியரசர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனும், செல்வராஜா, ஜெயம் மற்றும் காலஞ்சென்றவர்களனா றோசலின், மலக்கியாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், எலிசபேத், அந்தோனிப்பிள்ளை, அன்ரனிப்பிள்ளை, எந்திரி பிரான்சிஸ் (லண்டன்) காலஞ்சென்ற சவிரிமுத்து ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் இளவாலையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இருந்து நாளை (31.01.2012) செவ்வாய்க்கிழமை மு.ப 11 மணிக்கு இளாவலை புனித அன்னாள் ஆலயத்துக்கு இறுதி ஆராதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டு பின் இளவாலை கத்தோலிக்க சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: J.E.ஆனந்தராஜா (மருமகன்).
பிராதான வீதி, இளவாலை.

# மரண அறிவித்தல்

## ஐயம்பிள்ளை அம்பலவாணர்



நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், முகத்தான் குளம், செட்டிக் குளத்தை வசிப்பிடமாகவும், பிரான்ஸில் வசித்து வந்தவருமாகிய ஐயம்பிள்ளை அம்பலவாணர் கடந்த (28.01.2012) சனிக்கிழமை வட்டக்கச்சியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மணியர் ஐயம்பிள்ளை -வள்ளியம்மை தம்பதியரின் பாசமிகு மகனும், மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி -பொன்னு தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, தையலம்மா, கணபதிப்பிள்ளை, நாகம்மா, கந்தையா, முருகேசு, அப்பாக்குட்டி, சுப்பையா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தனபாலன் (இந்திரன்- வட்டக்கச்சி), சகுந்தலநாயகி(வபா, பிரான்ஸ்), அமலநாயகி (கலா -லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், றஞ்சிதமாலா (றஞ்சி, வட்டக்கச்சி), காலஞ்சென்ற ஜெராட் (பிரான்ஸ்), மகாதேவன் (லண்டன்) ஆகியோரின் மாமனும், காலஞ்சென்றவர்களான சுப்பையா, மகேஸ்வரி மற்றும் காராளசிங்கம் (திருவையாறு) ஆகியோரின் மைத்துனரும், றோகன் (கனடா), காலஞ்சென்ற றோகினி (வட்டக்கச்சி), யாழினி (ஜேர்மனி), தட்சினி(யாழ்ப்பாணம்), கோபி (வட்டக்கச்சி), காண்டீபன் (வட்டக்கச்சி), கிருசாந்தி (பிரான்ஸ்), ஜெயானி (கனடா), பிரான் (டென்மார்க்), ஆதவன் (லண்டன்), பிரணவன் (லண்டன்), வாரிஷா (லண்டன்) ஆகியோரின் பேரனும், பரிதிக்கதிர் (யாழ்ப்பாணம்), சஜன் (ஜேர்மனி), அபி (ஜேர்மனி), மதுரா (ஜேர்மனி), தனுசா (பிரான்ஸ்), டயானா (பிரான்ஸ்), சிந்துசா (பிரான்ஸ்), ஆகாஷ் (கனடா), சகானா (டென்மார்க்), இலக்கியா (டென்மார்க்) ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 273, சில்வா வீதி, வட்டக்கச்சியில் அமைந்துள்ள அன்னாரின் மகனின் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

வட்டக்கச்சி.

தகவல்: அ.தனபாலன் (இந்திரன்-மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் இறக்குமதி தொடர்பில் இலங்கைக்கு இராஜதந்திர பிரச்சினை

## ஈரான் இலங்கைக்கு உதவுவதாக அறிவிப்பு

**ஈரான் மீது அமெரிக்கா கொண்டு வரும் நிதி வழங்கல் தடை இலங்கையை பாதிக்கும் விதம் குறித்து தெளிவற்ற நிலைப்பாட்டை இலங்கை அரசு கொண்டுள்ளது.**

எரிபொருள் இறக்குமதி தொடர்பில் இலங்கை இராஜதந்திர பிரச்சினையை எதிர்நோக்கி வருகின்றது. இந்நிலையில் தொடர்ந்தும் நாட்டின் எரிபொருள் தேவையை பூர்த்திசெய்ய தயாராகவே உள்ளதாக ஈரான் இலங்கைக்கு அறிவித்துள்ளது.

ஆறு மாத காலப் பகுதியில் நடைமுறைக்கு வரும் வகையில் ஈரான் மீது அமெரிக்கா நிதி வழங்கல் தடையை கொண்டுவரும் சட்டத்தில் அமெரிக்க ஜனாதிபதி கையொப்பமிட்டுள்ளார்.

இதேவேளை, தொடர்ந்தும் எரிபொருள் தேவையை பூர்த்தி செய்வதாக இந்தியாவுக்கும் ஈரான் அறிவிப்பு விடுத்துள்ளது. எனினும் இந்தியா, அமெரிக்காவின் தடையை கருத்திற்கொள்ளாது தெஹ்ரானுக்கு அதன் அதிகாரிகளை அனுப்பி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

இந்நிலையில், ஈரான் மீது அமெரிக்கா கொண்டு வரும் நிதி வழங்கல் தடை இலங்கையை பாதிக்கும் விதம் குறித்து தெளிவற்ற நிலைப்பாட்டை இலங்கை அரசு கொண்டுள்ளது.

இதனையடுத்து வெளியுறவு அமைச்சர் ஜி.எல். பீரிஸ், அமெரிக்கா தூதரகத்துடன் இது குறித்து தெளிவைப்பெற முயன்றுள்ளார்.

எனினும், இந்த விடயத்தை எதிர்வரும் 2 ஆம் திகதி இலங்கைக்கு வரும் அமெரிக்காவின் திறைசேரி உதவிச்செயலாளர் லுகி புரோனினுடன் மாத்திரமே கலந்துரையாட முடியும் என்று அமெரிக்க தூதரக ஊடகப்பணிப்பாளர் கிறிஸ் டீல் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா ஈரான் மீது விதிக்கும் நிதிவழங்கல் தடைக்காரணமாக இலங்கைக்கு பாதிப்பு ஏற்படுமா? என்பது குறித்து அவரே கருத்துக் கூறக்கூடியவர் என்றும் டீல் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை, ஈரானிடம் இருந்து 80 வீதமான மசகு எண்ணெய்யை இறக்குமதி செய்கிறது. இதற்காக 4 மாத கடன் சலுகையையும் இலங்கை பெற்றுக்கொள்கிறது.



ஜோர்ஜ் கீத் மன்றத்தின் ஏற்பாட்டில் வருடாந்தம் நடைபெறும் "திறந்தவெளி ஓவியச் சந்தை 2012" கண்காட்சி நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பு ஆனந்தகுமாரசாமி மாவத்தையில் காட்சிப் படுத்தப்பட்டது.

# எல்லைப்புற நவகிரி குளத்தில் மீன்பிடிக்க அனுமதியில்லை

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களின் எல்லையிலுள்ள நவகிரி குளத்தில் தற்போது தமக்கு மீன்பிடித் தொழிலில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட எல்லைக் கிராம தமிழ் மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

1990 ஆண்டிற்கு முற்பட்ட காலத்திலிருந்தே தாங்களே இந்த குளத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்ததாக கூறும் தமிழ் மீனவர்கள், இப்போது அம்பாறை மாவட்ட எல்லைக் கிராம சிங்கள மீனவர்கள் அங்கு தொழிலில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கின்றனர்.

தாம் நவகிரி குளத்துக்கு மீன்பிடிக்கச் சென்றால் அங்கிருந்து விரட்டப்படுவதாகவும் அவர்கள் கவலை தெரிவித்தனர்.

இதேவேளை, இந்தக் குளம் அம்பாறை மாவட்ட நிர்வாக எல்லைக்குள் அரசினால் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அதன் பரிபாலனம் மத்திய அரசின் கிழேயே இருப்பதாகவும் கிழக்கு மாகாண சபையின் மீன்பிடி, விவசாயம் மற்றும் கால்நடைத் துறைகளுக்கான அமைச்சர் து. நவரட்ணராஜா தமிழோசையிடம் தெரிவித்தார். குறித்த பகுதியில் தற்போது வசிக்கும் சிங்கள மக்களுக்கே மீன்பிடிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகவும் மத்திய அரசின் அதிகார எல்லைக்குள் இருக்கும் விடயத்தில் மாகாணசபை அமைச்சு தலையிட முடியாத நிலை இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஒ-சி)

# 200 தமிழர்கள் டோகோவில் கைது

1 »

லப்பட்டு டோகோவிலுள்ள வீடுகளில் தங்க வைக்கப்பட்டிருந்தபோதே இவர்கள் அந்த நாட்டுப் பொலிஸாரின் சுற்றிவளைப்பில் சிக்கியுள்ளனர்.

தடுப்புமுகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் நாடு திரும்ப விருப்பம் தெரிவித்தவர்கள் புலம்பெயர்ந்தோருக்கான சர்வதேச அமைப்பின் உதவியுடன் நாடு திரும்பிக் கொண்டிருக்கின்றனர் எனவும், இதுவரை 9 பேர் நாடு திரும்பியுள்ளனர் எனவும் கூறப்படுகிறது.

நான்கு மாதங்களுக்கு முன்னர் தாம் கொழும்பிலிருந்து டோகோ நாட்டைச் சென்றடைந்ததாக மட்டக்களப்பு செங்கலடிப் பிரதேசத்தைச் சேர்ந்த பெயர் குறிப்பிட விரும்பாத ஒருவர் பி.பி.ஸிக்கு தெரிவித்துள்ளார்.

தொழில்வாய்ப்புக்காக சட்டரீதியாக நேரடியாக கனடாவுக்கு அனுப்பிவைப்பதாகக் கூறியே குறித்த முகவர் தன்னுடன் மேலும் 4 பேரை டோகோவுக்கு அனுப்பி வைத்தார் எனக் கூறிய அவர், கானா நாடு வழியாக கப்பலில் சட்டவிரோதமாக அனுப்பி வைப்பதே முகவரின் நோக்கம் என்பது அங்கு சென்ற பின்னரே தனக்குத் தெரியவந்தது எனவும் கூறியுள்ளார்.

டோகோவில் 5 வீடுகளில் தங்க வைக்கப்பட்டிருந்த 209 பேரில் 4 முஸ்லிம்களைத் தவிர ஏனையோர் தமிழர்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-சி)

# மஹிந்தவின் வருகையால் சாவகச்சேரிக்கு அதிர்ஷ்டம்

1 »

வைத்தியசாலை வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட விடுதிகளைச் சுற்றி பூங்கன்றுகளை மிருசுவில் உசன் கந்தசாமி ஆலய பரிபாலன சபையினரும் வைத்தியசாலை வளாகத்தில் நோயாளர்களின் தேவைக்கு வழங்கக்கூடிய பயன்தரு மரக்கன்றுகளை கச்சாய் மகளிர் விவசாயப் பண்ணை உரிமையாளரும் ஏற்கனவே வழங்கி பராமரித்துவருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வைத்தியசாலை முன்பாக உள்ள பூந்தோட்டத்திற்கு ஒரு லட்சம் ரூபா செலவில் பாதுகாப்பு வேலியும் அதனுள் அலங்கார மின்விளக்குகளும் பொருத்தப்பட்டு வருகின்றன. (ஒ-207)

# மட்டக்களப்பில் விகாரை; நாடாளுமன்றில் விவாதம்

1 »

பிரதமரிடமும் நாடுகிறது.

அதேபோல், இந்த விவகாரத்தை நாடாளுமன்றம் மற்றும் கிழக்கு மாகாண சபை ஆகியவற்றில் விவாதத்திற்கு உட்படுத்தவும் முயற்சிகளை மேற்கொள்கின்றது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் கூறியவை வருமாறு:-

மட்டக்களப்பு பட்டிப்பளையில் ஒருசில தொல்பொருள்கள் காணப்படுகின்றன. அவற்றைப் பாதுகாக்க விரும்பினால் தொல்பொருள் திணைக்களம் பாதுகாக்கலாம். பௌத்த விகாரை அமைத்து அவற்றைப் பாதுகாக்கவேண்டிய தேவை இல்லை. பௌத்த விகாரைக்கும் அந்தத் தொல்பொருள்களுக்கும் என்ன தொடர்புண்டு?

இது தமிழர் பகுதியில் மேற்கொள்ளப்படும் தெளிவான பேரினவாத ஆக்கிரமிப்பாகும். இந்த நடவடிக்கையைத் தடுத்துநிறுத்தும் நடவடிக்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இதைத் தடுத்து நிறுத்தக் கோரி நாம் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் திங்கட்கிழமை (இன்று) கடிதங்களை அனுப்பவுள்ளோம்.

அதேபோல், அடுத்த மாதம் நாடாளுமன்றிலும் கிழக்கு மாகாண சபையிலும் இவ்விவகாரத்தை விவாதத்திற்கு எடுக்கத் திட்டமிட்டு வருகிறோம் - என்றார். (ஒ-சி)

# பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்கவே மாட்டார் ஜனாதிபதி

1 »

கட்சி தெரிவித்துள்ளது.

காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே ஜாதிக ஹெலஉறுமயவின் ஊடகப்பேச்சாளரும் மேல் மாகாண சபை அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு-

தமிழ் மக்களின் பிரச்சினையை சர்வதேசத்திடம் தூக்கிப்பிடித்து வருவதால் பயன்கிட்டப்போவதில்லை.

எமது நாட்டு மக்களின் பிரச்சினைகளை நாமே பேசித் தீர்க்க வேண்டும். இதற்கு முன்வரத் தயங்குபவர்கள் தமிழர்கள் நலனில் அக்கறை கொள்வது போல் நடிக்கின்றனர்.

தமிழ் மக்களை ஏனைய சமூகத்தினருடன் இணையவிடாது தடுப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சிக்கின்றது.

நாட்டுக்கும், தமிழ் மக்களுக்கும் துரோகமிழைக்கும் வகையிலேயே அவர்களின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

தமிழ் மக்களுக்கு விடிவைத் தேடிக்கொடுப்பதற்கு அவர்கள் விரும்பினால் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கலாம் அல்லவா?

காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதற்கு ஜனாதிபதி ஒருபோதும் இணங்கமாட்டார் என நாம் உறுதியாக நம்புகின்றோம் -என்றார். (ஒ-சி)

## நீதி கோரி ஜெனிவாவுக்கு புலத்தமிழர் நடை பயணம்

1 »

சத்தி, மணிவண்ணன், நிமலன், யோகி மற்றும் வேற்றினத்தவரான எனூச்டச்ட் ஆகியோர் நேற்றுமுன்தினம் நடைபயணம் மேற்கொண்டிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து தமது நடைபயணத்தை சுமார் 19.5 மைல்கள் (31 கிலோமீற்றர்கள்) கடந்து ஹோர்லே எனும் இடத்தைச் சென்றடைந்தனர்.

மீண்டும் நேற்றுக்காலை 10 மணிக்கு அவர்கள் தமது நடைபயணத்தை ஆரம்பித்தனர். (ஒ-சி)

# யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் சிரித்துக் கொண்டே அழுகிறார்கள்

1 »

யுறுத்தினார் எனவும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த அவர், தனது அமைதிப்பயணம் குறித்து தமிழக நாளேடு ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

தோல்வியில்லாமல் வெற்றியில்லை. கண்ணீர் எப்போதும் கரிப்பாகவே இருக்கும். ஆனாலும், ஒரு சில சமயங்களில் அது இன்பமாகவும் இருக்கும். அந்த இன்பம் பெறவேண்டுமானால் பல புயல்களைக் கடக்கும் மன உறுதியைப் பெறவேண்டும்.

கடந்த 21 ஆம் திகதி இரவு இலங்கை ஜனாதிபதியைச் சந்தித்தபோது இரண்டு முக்கியமான விடயங்களைப் பற்றி அவரிடம் பேசினேன்.

அதாவது, மும்மொழித் திட்டத்தை முழுமையாக இலங்கையின் அனைத்து பகுதிகளுக்கும் செயற்படுத்துவதில் இந்தியாவின் ஆதரவைத் தெரிவித்து விட்டு, இலங்கையின் 13 ஆவது அரசமைப்புத் திருத்த சட்டத்தை மேம்படுத்தி, 13 பிளஸ் என்ற அரசமைப்புச் சட்டத் திருத்தத்தை விரைவில் இலங்கையில் நடைமுறைப்படுத்துமாறு இலங்கை ஜனாதிபதியை வலியுறுத்தினேன்.

இலங்கையில் உள்ள எல்லா மாகாணங்களையும், அதாவது, வடக்குக் கிழக்கு, தெற்கு, மத்திய, மேல் மாகாணங்களையும் மற்ற மாகாணங்களையும் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட - சுயநிர்ணய அதிகாரம் கொண்ட மாகாணங்களாக மாற்றியமைக்க வழிவகை செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினேன் -என்றார். (ஒ-சி)

# சவேந்திர சில்வாவுக்கு உயர் பதவி; இலங்கையைக் காக்க ஐ.நா.முயற்சி

1 »

செயற்படுவதுபோல் நடிக்கின்றன. அறிக்கைகளை விடுவதுடன் இந்நாடுகளின் நடவடிக்கைகள் முடிவடைந்துவிடும் என்றும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

ஐ.நா. செயலாளர் நாயகத்தின் அமைதி காக்கும் நடவடிக்கைகளுக்கான சிறப்பு ஆலோசனைக் குழுவின் தலைவராக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பாகக் கருத்து வெளியிடும்போதே நவ சமசமாஜ கட்சியின் பொதுச் செயலாளரும், தெஹிவளை - கல்கிஸை மாநகரசபை உறுப்பினருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இறுதிப் போரின்போது தமிழர்களின் இரத்தம் ஆறாகப் பெருக்கெடுத்து ஓடிய போதும், இலங்கைக்கு அனைத்து வகையிலும் அமெரிக்கா, இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகள் உதவின.

இவ்வாறான குணவியல்புகளைக் கொண்ட இந்நாடுகள் இலங்கைக்கு எதிராக ஒருபோதும் செயற்படாது என்பதே எமது கருத்தாகும். ஐ.நா. சபை கூட இன்று அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகின் அடிவருடிகளாகச் செயற்படுகின்றது.

இலங்கையை போர்க் குற்றச்சாட்டுகளிலிருந்து பாதுகாக்கும் நோக்குடனேயே போர்க்குற்றவாளி எனக் கூறப்படும் சவேந்திர சில்வாவுக்கு பதவிகளை வழங்கி, ஐ.நா. அழகுபடுத்திப் பார்க்கின்றது.

தமிழர்களுக்குத் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்குத் தற்போதுள்ள ஒரு வழி அஹிம்சை வழியிலான போராட்டங்களே. அதனை விரைவில் முன்னெடுக்க தமிழ்த் தலைமைகள் தயாராகவேண்டும் - என்றார் அவர். (ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகஸின் கலவரத்தின் போது பணம் கொள்ளையிட முயற்சி

மகஸின் சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்தை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட கைதிகள் சிலர், களஞ்சியசாலையிலுள்ள பாதுகாப்புப் பெட்டகத்தை உடைத்து பணம் மற்றும் நகைகளைக் கொள்ளையிடுவதற்கு முயற்சித்துள்ள சம்பவம் தற்போது அம்பலமாகியுள்ளது.மோதல் ஒருபுறம் உக்கிரமடையமறுபுறத்தில்சினிமாப் பாணியில் இந்த கொள்ளைச் சம்பவத்தை அரங்கேற்றுவதற்கு கைதிகள் முயற்சித்தாலும் இறுதிநேரத்தில் அது முறியடிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலை களஞ்சியசாலையை தீ மூட்டிக் கொளுத்தியதன் நோக்கமும் இதுவே என அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது:-

மகஸின் சிறைச்சாலையில் அண்மையில் ஏற்பட்ட கலவரத்தின்போது களஞ்சிய சாலையிலுள்ள இரும்புப் பெட்டகத்தை உடைத்து, பணம் மற்றும் நகைகளைக் கொள்ளையிடுவதற்கு கைதிகள் சிலர் முயற்சித்துள்ளனர்.

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் பணம் மற்றும் நகை உள்ளிட்ட பெறுமதிவாய்ந்த பொருள்கள் இந்தப் பெட்டகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்ததுடன்,வெளிநாட்டுக் கைதிகளின் பொருள்களும் இருந்துள்ளன என அறியமுடிகின்றது.

இந்தப் பெட்டகத்தை கைதிகள் சிலர் உடைக்க முற்பட்ட வேளை, சுவர் இடிந்து விழுந்ததில் அவர்கள் முயற்சியை கைவிட்டுள்ளனர். என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-சி)

# கல்வித்துறையையும் அந்நியர்களுக்கு தாரைவார்த்துக் கொடுக்க அரசு திட்டம்

## ஜே.வி.பி குற்றச்சாட்டு

**வாழைப் பயிர்ச்செய்கைக்கும், அந்நிய நாட்டவரின் கரங்களைப் பற்றிநிற்கும் அரசு, தற்போது கல்வித்துறையையும் அவர்களின் கைகளுக்குத் தாரைவார்த்துக் கொடுக்கத் திட்டமிடுகிறது.**

- இவ்வாறு ஜே.வி.பி. குற்றஞ்சாட்டியுள்ளது.

நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளைத் தவிடுபொடியாக்கும்வண்ணம் கல்வித் துறையிலும் அரசு அசமந்தப் போக்குடன் செயலாற்றிவருகின்றது. தேசிய பாடசாலைத் திட்டம் என்ற பேரில் ஆட்சியாளர்களின் நன்மையை மட்டுமே அரசு கவனத்திற்கொள்கிறது.

இதனால் மக்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகும் என்பதை உணராமலா அவர்கள் செயற்படுகின்றனர் எனத் தெரியவில்லை.

நாட்டு மக்களின் கல்வியை முற்றுமுழுதாக சீரழிக்கும் திட்டமாக நடைமுறைப் படுத்தப்படுகின்ற தேசிய பாடசாலைத் திட்டத்தை உடனடியாகக் கைவிடுமாறு அரசுக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியினர் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.

பத்தரமுல்லையில் உள்ள அதன் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அக்கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமது பிள்ளைகள் உயர்கல்வியைக் கற்று நல்லதொரு எதிர்காலத்தைப் பெறவேண்டும் என்பதே நாட்டு மக்கள் ஒவ்வொருவரினதும் கனவாக உள்ளது. ஆனால், அரசின் செயற்பாடு இவை அனைத்திற்கும் எதிர்மறையாகவே உள்ளது.

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கை 50 சதவீதத்துக்கும் குறைவாக உள்ளது. அதேபோல், உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் செல்வோர் 20 ஆயிரம் பேர் மட்டுமே. இதன் மூலம் நாட்டின் கல்வி நிலை எவ்வளவு பின்தங்கிய நிலையில் உள்ளதென்பது தெளிவாகின்றது.

நாட்டின் கல்வித்துறையில் அரசின் தன்னிச்சையான செயற்பாட்டால் பல பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளன. வளங்கள் பகிர்வில் சமமின்மை, கல்வித்திட்டம் தொடர்பாக முறையான கொள்கையின்மை, உள்ளூராட்சி சபைகள் மற்றும் மத்திய அரசுக்கு கல்வி தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகள், பல்கலைக்கழக அனுமதி தொடர்பான பிரச்சினைகள், முதலாம் தரத்திற்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான பிரச்சினைகள் என பல உள்ளன.

கல்வி அபிவிருத்திக்காக நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் பாடசாலைக் கல்விக்காக 0.49 சதவீதமும், உயர் கல்விக்காக 1.1 சதவீதமும் 2010ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டிருந்ததே இன்றும் தொடர்கின்றது.

ஆனால், எம்மைச் சூழவுள்ள நாடுகளில் இதற்கு அதிகமான அளவு கல்வித்துறைக்காக ஒதுக்கப்படுகின்றது.

அரசின் தேசிய பாடசாலைத் திட்டத்தின் கீழ் கல்வி வரையறுக்கப்படுகின்றது. முதலில் 1,000 தேசிய பாடசாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன என அரசு கூறுகின்றது. நாம் கேட்கின்றோம். இதை எவ்வாறு தெரிவுசெய்தீர்கள்?

தற்போதைய அளவில் இந்தத் தேசிய பாடசாலைத் திட்டத்திற்காக 9,800 பாடசாலைகளில் 5,000 பாடசாலைகளே உள்வாங்கப்படுகின்றன. அப்படியானால், மீதமாகவுள்ள 4,800 பாடசாலைகளின் நிலை என்ன? அவற்றை மூடிவிடவேண்டியதுதான்.

இந்தப் பாடசாலைத் திட்டத்திற்காக 600 மில்லியன் டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதில் 5 வருடங்களுக்கு ஒரு பாடசாலைக்கு 600 இலட்சம் ரூபா ஒதுக்கப்படுகிறது. இது எவ்வளவு தூரம் சாத்தியப்படும். இந்த நிதித் தொகையில் 350 மில்லியன் டொலர்கள் உதவியாகக் கிடைக்கப்பட்டுள்ளன.

அப்படியானால், மீதமாகவுள்ள 250 மில்லியன் டொலர்களை எவ்வாறு திரட்டுவதெனத் தெரியாமல் அரசு தடுமாறுகின்றது. அப்படியானால், இவ்வாறானதொரு திட்டம் தேவைதானா? இதனை உடனே கைவிடுமாறு அரசிடம் நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

கல்வித்துறையை தனியார்மயப்படுத்த அரசு முயற்சிகள் எடுத்துவருகின்றது. சுற்றுலா விடுதி, ஆடைத்தொழிற்சாலைகள், வேறு தொழில்கள் என தற்போது வாழைப் பயிர்ச்செய்கையையும் வெளிநாட்டவரின் கைகளுக்கு வழங்கிவிட்டு தாம் கைகட்டி வேடிக்கை பார்க்கின்றனர்.

கல்வித்துறையை வெளிநாட்டு முதலீட்டாளர்களின் கைகளுக்கு வழங்கிவிட்டு பொருளாதார இலாபத்தை ஈட்டிக்கொள்வதற்கான எண்ணத்தைக் கொண்டுள்ளமை அவர்களது செயல்களின் பிரதிபலனாக அமைகின்றது - என்றார் அவர். (ஒ-சி)


27ம் ஆண்டில்
# கலாலயா
பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில்
யாழ்ப்பாணம்



கடந்த எமது 26 வருடகால சேவையில் எம்மிடம் பயிற்சிபெற்ற ஆயிரக்கணக்கானோர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இத்துறையில முன்னணியில் திகழ்கின்றனர். நீங்களும் அவ்வாறே ஆகவேண்டுமா?

## இதோ மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள்

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்
- கைவேலை
- Saree Work
- கூந்தல் வடிவமைப்புகளும் முடி சிராக்குதலும் (Hair Dressing & Styling)
- பூவேலை
- ப்ப்றிக் வர்ணம் தீட்டுதல்
- தையல் அறிவு அற்றவர்களுக்கான தையல் (உடை தயாரித்தல்) பயிற்சிகள்.
- Facials, மணப்பெண் அலங்காரம், Pedicure, Manicure பயிற்சிகள். ஏழு வகையான சாறி உடுத்தும் முறைகள்.

**மேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

❄ தையல் தெரிந்தவர்களுக்கான 10 நாள் சான்றிதழ் அற்ற சாறி பிளவுஸ், சுரிதார், சட்டை, Skirt தைக்கும் பயிற்சிகள்

**ஆரம்பம்: 06.02.2012 திங்கட்கிழமை காலை 9.00 மணி.**

## விற்பனையாகிறது

### "புகழ்"

**தரம் 5 புலமைப்பரிசில் வழிகாட்டி (புதிய பாடத்திட்டத்துக்கு அமைய பகுதி I,II, பாடப்பரப்பை முழுமையாக உள்ளடக்கியது)**

இலவச மாதிரி வினாத்தாள், கூப்பன் கருத்தரங்கு விவரம், பரிசுக் கூப்பன் ஆகியவை இணைக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்- L.விஜேந்திரன்.

விலை - 490/-

எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்
தொடர்புகளுக்கு- ஸ்ரீலங்கா புத்தகசாலை.
இல. 234, கே.கே.எஸ்வீதி, யாழ்ப்பாணம்.
தொ-பே-0212222573

## கார் வாடகைக்கு உண்டு



திருமண வைபவங்கள் மற்றும் அதி விசேட வைபவங்களுக்கான புத்தம் புதிய 2012 (HYBRID)கார் (வெள்ளை நிறம்) வாடகைக்குண்டு.

தொடர்புகளுக்கு- S. மதன், 0777289283, 0778096873




## A1 Exam
### Sponsor/Settlement Visa

திருமணம் செய்து UK செல்வதற்கான British High Commission ஆல் அங்கீகரிக்கப்பட்ட City &Guilds இன் கற்கை நெறியை எமது நிறுவனத்திலேயே கற்று, ஆங்கிலப்பரீட்சைக்கு எமது நிறுவனத்திலேயே தோற்றமுடியும்.

City & Guilds Approved Centre

DMI COMPUTER EDUCATION

# City & Guilds ஆல் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்
# சித்தியடைவதற்கான 100% உத்தரவாதம் எமது நிறுவனத்தால் வழங்கப்படும்.
# சித்தியடையாவிட்டால் கற்கைநெறிக் கட்டணம் மீளளிக்கப்படும்.

Student Visa மூலம் வெளிநாடு செல்பவர்களுக்கானது

IELTS

B1-Exam City & Guilds

A/L, O/L பரீட்சை எழுதியவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆங்கிலத்தில் சரளமாக பேச விரும்புபவர்களுக்கானது

Spoken English

DMI COMPUTER EDUCATION

யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி | நெல்லியடி M.M.V. வீதி | சாவகச்சேரி No.174, கண்டி வீதி

## மணல் விற்பனைக்குண்டு

நாற்பது வருடங்களாக கட்டிட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத் தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்.

4 டிரக்டர் - 24000/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு.
(கல்லு 1 -38/-)

தொடர்புகளுக்கு
கண்ணா
0776766499


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.